

உள்ளம்
மறக்குதில்லை
உன்னை
ரமணிசந்திரன்

# உள்ளம் மறக்குதில்லை உன்னை

## 1

அவசர அவசரமாகக் காலை எட்டிப் போட்டு, ரஞ்சனி வேகமாக நடந்தாள்!

லேசாகக் கையைத் திருப்பி மணியைப் பார்த்தவாறே நடந்தவளுக்குக் காலுக்கு இறக்கை கட்ட முடியவில்லையே என்ற வருத்தம்! பறக்க முடியுமானால், எவ்வளவோ சீக்கிரமாக வீட்டுக்குப் போயிருக்கலாமே! பஸ்சுக்குக் காத்திருந்து, அது வந்தாலும், ஏற்கெனவே புளி மூட்டையாக அடைத்துக் கொண்டிருக்கும் வண்டியில், தன்னையும் திணித்துக் கொள்ள முடியாமல், இரண்டு பஸ்சை விட்டு, மூன்றாவதில் வருவதற்குள் இவ்வளவு நேரம் ஆகிவிடுகிறது!

இதற்கு மேல், இன்று கிளம்பவே தாமதம் ஆகிவிட்டது! தனியார் அலுவலகங்களில் வேலை செய்வது, இது ஒரு பிரச்சினை! டாண் என்று ஐந்து மணிக்கு ஃபைலை மூடி

வைத்து விட்டுக் கிளம்பி விட முடியாது! 'இதை முடித்து விட்டுப் போ!' என்றால், முடித்து விட்டுத்தான் கிளம்ப முடியும்!

இதெல்லாம் நந்தனுக்கு எங்கே தெரிகிறது?

அவன் பள்ளியிலிருந்து வீடு வருகிற நேரத்தில் வாய்க்கு வயணமாக நல்ல சிற்றுண்டியுடன் தாயார் வீட்டில் இல்லை என்றால் அவ்வளவு கோபம் வருகிறது!

இப்போதெல்லாம், வீட்டில் இருந்தாலும் கோபம்தான்!

நாலைந்து வயது வரை, அவனால் பிரச்சினையே இருக்கவில்லை! நன்றாகப் படித்தான், விளையாடினான், உண்டான், உறங்கினான்! நோய் நொடி என்றுகூட எதுவுமில்லாத ஆரோக்கியமான குழந்தை! தடுப்பூசிகள் போடும்போது மட்டும்தான், கொஞ்சம் கஷ்டப்படுவான். அவனது கஷ்டத்தைப் பார்த்து, அவளும் வருத்தப்படுவாள்.

மற்றப்படி, அவனைப் பார்த்துக் கொண்டு இருப்பதே, ரஞ்சனியின் புண்பட்ட மனதுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்ததே! அந்தப் பொல்லாத நாட்களில், அவள் தொடர்ந்து உயிரோடு இருந்ததே, குழந்தை, குழந்தை என்று அவனுக்காகத்தானே! பிறகும், நொந்து தேய்ந்து விடாமல் இருந்தது, அவனால்தான்!

நந்தனின் மழலையிலும், பிள்ளைக் குறும்பிலுமாக, ரஞ்சனி சிரிக்கக் கூடத் தொடங்கிவிட்டாளே! ஓர் ஆண்டுக்கும் மேலாக, அவள் அடியோடு மறந்து விட்டிருந்த சிரிப்பு!

ஆனால்... அதன் பிறகு வேண்டாத பல கேள்விகள்! அவை, அவள் சற்றும் எதிர்பாராதவை என்று சொல்ல முடியாது! எப்போது வருமோ என்று உள்ளூர அவள் அஞ்சிக்



கொண்டிருந்த கேள்விகள்தான்! என்னென்ன பதில் சொல்லி, எப்படியெப்படி சமாளிக்க வேண்டும் என்றும்கூட, ரஞ்சனி கற்பனையில் கணித்து வைத்திருந்தவைதான்!

ஆனால், அவளது கணக்கீட்டில், பிள்ளையின் புத்திசாலித் தனத்தையும், விடா முயற்சியையும், ஏன், பிடிவாதத்தையும் கூடக் குறைவாக மதிப்பிட்டு விட்டாள் போலும்! கூடவே, கீழ்ப்படிதலுக்குச் சற்று அதிக மதிப்பெண்களும் கொடுத்து விட்டிருக்கிறாள்!

இப்போது, தினமும் திணறிக் கொண்டிருக்கிறாள்!

மகன் எப்போது, என்ன சொல்லப் போகிறானோ என்ற கலக்கம், உள்ளூர எப்போதும் இருந்தது! அதனால், அவளது நிம்மதி, அடியோடு தொலைந்து போயிற்று!

இந்தக் கேள்விகளாவது ஓரளவு அவள் எதிர்பார்த்தவை எனலாம். பதில் சொல்ல இயலாது திணறினாலும், ஏதாவது பேச்சை மாற்றியேனும் சமாளித்திருக்கக் கூடும்!

ஆனால், அவன் விரும்பிய பதில் வராது போகவும், நந்துவின் நடவடிக்கைகள் மாறிய விதம்தான், இப்போது ரஞ்சனியை அதிர வைத்துக் கொண்டிருந்தது!

ஆனால், அவன் விரும்பிய பதில்களை, அவளால் ஒருபோதும் கொடுக்க முடியாது!

எனவேதான், மற்ற வகைகளில், மகன் மனதைக் குளிர்விக்க, அவள் முயன்று கொண்டிருந்தாள்!

சிக்கனம், சேமிப்பைக் காற்றில் பறக்கவிட்டு, மகன் விரும்பிய உணவு வகைகள், உடை, விளையாட்டுச் சாமான்கள் என்று, அவளால் இயன்ற மட்டும் செய்வதும், வாங்கிக் கொடுப்பதுமாக இருந்தாள்.

சக்திக்கு மீறிய முயற்சிதான்! நந்தகுமாரன் கேட்ட கிரிக்கெட் செட்டுக்காக, முந்தைய சேமிப்பில்கூடக் கை வைக்கும்படி ஆயிற்று!

எதோ, ஒரு சில ஆண்டுகள்! அவற்றைச் சமாளித்து விட்டால், நந்தனுக்கு விவரம் புரிகிற வயதாகிவிடும். தாயின் நியாயம் அறிந்து, நல்லபடியாக நடந்து கொள்வான்!

ஆனால், அவளது நம்பிக்கை பலன் தருமா இல்லையா என்பதில், அவளுக்கே சந்தேகம் இருந்தது.

காரணம், இப்போதைக்குச் சமாளித்துக் கொண்டிருப்பதாக அவள் எண்ணியதுகூட, அவ்வப்போது, பொய்த்துப் போய்க் கொண்டிருந்தது!

ஏதாவது வாங்கிக் கொடுத்த அன்று, மகிழ்ச்சியோடு சுற்றுகிற பையன், மறுநாளே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, "அப்பா நம்மோடு இருந்தால், அந்த அசோக்குக்கு மாதிரி, எனக்கும் கிரிக்கெட் ஆடச் சொல்லிக் கொடுத் திருப்பார்! நானும் நிறைய ரன் எடுத்திருப்பேன்! இன்றைக்கு நான் 'டக் அவுட்.' எல்லாரும் சிரித்தார்கள்! எனக்கு அப்பா வேணும்!" என்று அழுதான்!

இதற்கு, அவள் என்ன செய்ய முடியும்?

"வா, நான் கற்றுத் தருகிறேன்!" என்று முயன்று பார்ப்பாள். ஆனால், அவளுக்கே சரிவரத் தெரியாததை, அவள் எப்படிக் கற்றுக் கொடுப்பது? அத்தோடு, வெளி வேலையும் வீட்டு வேலையுமாக, ஓய்வுக்குக் கெஞ்சும் உடலை வைத்துக் கொண்டு, எத்தனை தரம் ஓடிஓடிப் பந்தைப் பொறுக்குவது? போடுவது? கை கால்கள் சோர்ந்து உட்கார்ந்து விடுவாள், அவள்!



கடைசியாக, கிரிக்கெட் கற்றுக் கொடுக்கப் போய், சும்மா சும்மா உட்கார்ந்து கொள்கிற சோம்பேறி என்று மகனின் மதிப்பில் தாழ்ந்ததுதான் ரஞ்சனிக்கு மிச்சமாயிற்று!

இந்த ஒன்பது வயதுச் சிறுவனையே சமாளிக்க முடியவில்லையே! இன்னும், இவனுக்கு அரும்பு மீசை முளைக்கிற காலத்தில், அவள் என்ன செய்யப் போகிறாள்?

அரும்பு மீசையோ, அவனுடைய தந்தையைப் போல அடர்ந்த மீசையோ!

எண்ணம் கொண்டு வந்த உருவத்தை மனத்திரையிலிருந்து அழிக்க முயன்றவளாய் வேகமாக நடந்து வீட்டை அடைந்த ரஞ்சனி திகைத்தாள்.

வீடு பூட்டியபடி இருக்கிறது என்றால், நந்தகுமாரன் இன்னமும் வீடு வரவில்லை என்றுதானே அர்த்தம்?

மூன்றரை மணிக்கு முடிகிற பள்ளி! ஒரு மணி நேரம் விளையாட்டுப் பயிற்சி இருந்தாலும்கூட, நாலே முக்கால், ஐந்து மணிக்குள் வீட்டுக்கு வந்திருக்க வேண்டுமே!

வீட்டுக்கு வந்து, அவனுக்கென்று, பாக்கெட் மாவைக் கொண்டு செய்து வைத்திருந்த குலோப்ஜாமுன்களைத் தின்றுவிட்டு, விளையாடப் போயிருப்பானோ?

தன் சாவியைக் கொண்டு, கதவைத் திறந்து, உள்ளே சென்றால், குலோப்ஜாமுன் பாத்திரம் திறக்கப்படாமல் அப்படியே இருந்தது!

யோசனையோடு எதிர் வீட்டுக்குச் சென்று கேட்டால் பிள்ளை இன்னமும் வரவே இல்லை என்று, அவளது சாவி மாட்டியிருந்த இடத்தைக் காட்டினார்கள்!

எப்போதும், அவர்களிடம் ஒரு சாவியை ரஞ்சனி கொடுத்து வைத்திருப்பாள்! இந்த வீடும் அவர்களதுதான்! சின்ன வயதிலேயே, தாயாகித் தன்னந்தனியே வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக் கொண்டிருந்த ரஞ்சனியிடம், கணவன், மனைவி இருவருக்குமே, ஒரு பரிவு உண்டு!

நந்தகுமாரன் பிறந்து வளர்வதையும் அருகில் இருந்து பார்ப்பவர்கள் அல்லவா? பல தருணங்களில், அந்த அம்மாவே, நந்துவோடு கூட வந்து, கதவைத் திறந்து, ரஞ்சனி செய்து வைத்திருப்பதைப் பிள்ளைக்கு எடுத்து ஊட்டிச் சாப்பிட வைத்துக் கை கழுவி விடுவதுண்டு!

நந்தனுக்கு ஏழு வயது ஆகும் வரை, அதெல்லாம் முடிந்தது. ஆனால், ஏழாவது வயதில் நண்பர்களோடு, கிரிக்கெட், ஃபுட்பால் என்று வெளியே விளையாட ஓடியதில் இருந்து, எல்லாமே மாறிப் போயிற்று!

என்னென்னவோ கருத்துகள்!

அவன் பெரியவன் ஆகிவிட்டானாம்! இப்படி யாரும் அவனுக்கு ஊட்டக் கூடாதாம்! அம்மா உட்பட யாரும்! அவனே சாப்பிடுவானாம்! கை கழுவிக் கொள்வானாம்! உடம்பு கழுவுவானாம்! துடைப்பானாம்! எல்லாமே அவனே செய்து கொள்வானாம்!

தலை வாருவதுகூட, அப்பா கூட இருந்தால், ஆண் பிள்ளைக்கு ஆண் பிள்ளையாகச் செய்யலாமாம்! ஆனால், பெண்களுக்கு இதெல்லாம் சரியாக வராதாம்!

பெரிய ஆள் போலப் பேச்சைப் பார் என்று, முதலில் ரஞ்சனிக்குச் சிரிப்புதான் வந்தது!

ஆனால், விரைவிலேயே, 'அப்பா'ப் பாட்டு அதிகரிக்கவும், திணறினாள்.



அப்பா எங்கே, எப்போ வருவார் என்பதில் இருந்து, 'ஏன் வரவில்லை? உன்னைப் பிடிக்கவில்லையா? என்னைப் பிடிக்காதா?' என்று வளர்ந்து, அப்பாவைப் பார்க்க வேண்டும், என்னை அப்பாவிடம் கூட்டிப் போ என்ற உருப் போடலில் வந்து நின்றது.

அதற்கு வழியில்லை என்றால், சிறுவன் ஆத்திரப்பட்டான்.

தன் ஆத்திரத்தைப் பல்வேறு வழிகளில் காட்டினான்.

காலையில் எழுப்ப எழுப்ப எழுவதில்லை! ஐந்து வயதில், அம்மாவோடு போட்டி போட்டுக் கொண்டு, போர்வையை மடித்து வைத்தவன், இப்போது அப்படியே விட்டுச் சென்றான்! காலையில் பாடத்தைத் தொடுவதே இல்லை!

எல்லாவற்றுக்கும் மேலாக ஒழுங்காக உண்பதில்லை!

ஆரோக்கியமான பையன் என்பதால், ஒரேயடியாகப் பட்டினி கிடக்க அவனால் முடிவது இல்லை! ஆனால், குடிக்கக் கொடுக்கும் பால், பாதி தரையில் கொட்டிக் கிடக்கும்! சாப்பாடும் அப்படியே!

அதைத் துடைத்துச் சுத்தப் படுத்தும் வேலை ஒன்று அதிகப்படியாக அவளுக்கு வந்து சேரும்!

வேலையை விடவும், மகன் சரியாகச் சாப்பிடவில்லையே என்பதுதான் ரஞ்சனிக்கு அதிக வேதனையாக இருக்கும்! நிறைய உண்டு, நன்றாக வளர வேண்டிய வயதில் அரை குறையாக உண்டால், வளர்ச்சி குறைந்து போகுமோ என்று மிகவும் கவலைப்படுவாள்!

ஆறடிக்கும் சற்று அதிக உயரம், நந்தனுடைய தந்தை! அதற்குக் குறையாமல் இவன் வளர வேண்டாமா? இவன் சரியாகச் சாப்பிடாமல் நரங்கிப் போனால், பிள்ளைக்குச்

சரியாகச் சாப்பாடுகூடக் கொடுக்கவில்லை என்று, நாளைக்கு அவளை அல்லவா குற்றம் சாட்டுவார்கள்!

எண்ணும்போதே, நெஞ்சைக் கசக்கிப் பிழிவது போன்ற வேதனை அவளுக்கு!

இப்படி ஒரு பிள்ளை இருப்பதையே, அங்கே யாரும் ஒத்துக் கொள்ளவில்லை! அப்படி இருக்க, அப்பனைப் போல வளர்க்கவில்லை என்று, அவளை யார் வந்து, என்ன சொல்லப் போகிறார்கள்?!

''என்ன ரஞ்சனி? என்னம்மா? ஒன்றும் கவலைப்படாதே! பாவம், சின்னப் பையன்தானே! நண்பர்களோடு எங்காவது விளையாடிக் கொண்டு இருப்பான்! பயப்படும்படியாக அவனுக்கு ஒன்றும் நேர்ந்திராது! நான் வேண்டுமானால், அங்கிளை அனுப்பி, நந்தனைத் தேடச் சொல்லட்டுமா?'' என்று, எதிர் வீட்டம்மா அவளை உலுக்கிக் கேட்ட பிறகே, தன்னை வாட்டி வதைக்கும் நிரந்தர வலியை வெளிக்காட்டி விட்டோம் என்று, ரஞ்சனிக்குப் புரிந்தது.

''ஐயோ, அதெல்லாம் வேண்டாம், ஆன்ட்டி! இதற்காகக் காலில் மூட்டு வலிக்காகத் தைலம் தடவிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் அங்கிளைத் தொல்லை செய்வதா? பக்கத்துப் பார்க்கில்தான், நந்து விளையாடிக் கொண்டு இருப்பான்! சாப்பிடாமல் கொள்ளாமல் உடம்பைக் கெடுத்துக் கொள்கிறானே என்று நினைத்ததும், மனதுக்குக் கஷ்டமாகி விட்டது! வேறு ஒன்றும் இல்லை! நான் போய், அவனைப் பார்த்து அழைத்து வருகிறேன்!'' என்று கிளம்பிச் சென்றாள்.

எண்ணியது போலவே, நந்தகுமாரன் பக்கத்துப் பூங்காவில்தான் விளையாடிக் கொண்டிருந்தான்.



ஆனால், தாயைக் கண்ட பிறகும், காணாததுபோல, அவன் தொடர்ந்து விளையாடியது, ரஞ்சனிக்கு மனதில் வலித்தது!

அவளுக்கு வாழ்வில் இருக்கும் ஒரே ஆதாரம், நந்தகுமாரன்தான்! அவனும் வெறுத்து விட்டால், அவள் எங்கே போவாள்?

இப்போது, மகனைக் கூப்பிடுவதா? கூப்பிட்டும் காது கேளாதது போல இருந்தால் என்ன செய்வது?

முதலில் இந்தப் பிள்ளைகள் முன்னிலையில் கேவலம்! அடுத்து, மற்ற சிறுவர்கள் மூலம், அவர்களுடைய பெற்றோருக்குப் போகும்! அப்புறம், அவர்கள் நடுவிலும் அவமானம்!

செய்வது புரியாமல் ரஞ்சனி நிற்கையில், நல்ல வேளையாகக் கூட விளையாடிய சிறுவன் ஒருவன் அவளைப் பார்த்துவிட்டு, ''ஏய், நந்தகுமாரன் அம்மா கூப்பிட வந்து விட்டாங்கடா! நாமும் போகலாம்! இப்போதே நேரமாகி விட்டது! இருட்டி விட்டால், அப்பா அடிப்பார்டா!'' என்று கூற, எல்லோரும் அவரவர் விளையாட்டுக் கருவிகளை எடுத்துக் கொண்டு கலைந்தனர்.

முதலில் அவளைப் பார்த்த பையன், அருகில் வந்து, ''வணக்கம், ஆன்ட்டீ!'' என்று விட்டு ஓடியது. ரஞ்சனிக்கு ஆறுதலாகக் கூட இருந்தது! நந்துவுடைய நண்பர்கள் ஒன்றும் மோசமில்லை! இவர்களோடு பழகும்போது, இவனும் மோசமாகி விட மாட்டான்!

உள்ளூர ஆறுதலோடு மகனின் கையைப் பிடித்தால், அவன் உதறி விலகிக் கொண்டான்! ''கையெல்லாம் பிடிக்காதீங்க! யாராவது பார்த்தால், குட்டிப் பாப்பா என்று

சிரிப்பாங்க! நான் ஒன்றும் சின்னப் பாப்பா இல்லை, கையைப் பிடித்துக்கொண்டு நடக்க! எனக்குத்தான் வீட்டுக்கு வழி தெரியுமே! நீங்க ஏன் வந்தீங்க?'' என்று அவன் மேலும் குறைப்படவும், மகன் ஒதுங்கிப் போகிறானே என்ற வருத்தத்தோடு, ரஞ்சனிக்குச் சிரிப்பும் வந்தது!

பெரிய மனிதன் போல, என்ன பேச்சுப் பேசுகிறான்!

பூங்கா வாயிலை அடைந்ததும், அங்கே வைத்திருந்த புத்தகப் பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு, கிரிக்கெட் மட்டையையும் எடுத்துக் கொண்டான் சிறுவன்.

''நான் வேண்டுமானால் கொண்டு வரட்டுமா?'' என்று கையை நீட்டியவளிடம் மட்டையைக் கொடுத்துவிட்டு, ''இப்போவே சொல்லி விடுகிறேன்! வீட்டுக்குப் போய், என்னைத் திட்டக் கூடாது! இன்னைக்கு ப்ராகிரஸ் கார்டு தந்தாங்க. மார்க் நல்லா வரலை! அப்பா என் கூட இருந்து சொல்லிக் கொடுத்திருந்தா, நிறைய மார்க் வந்திருக்கும்! நீங்கதான் அப்பாவைக் கூட்டிக்கிட்டு வரவே மாட்டேன் என்கிறீங்களே! உங்களாலே, நான் இந்தத் தடவை, பதினெட்டாவது ராங்க்!'' என்று, தான் படிக்காததற்கான பழியைத் தாயின் மீது சுமத்தினான் பையன்!

ரஞ்சனி திகைத்துப் போனாள்!

பாடம் கற்றுக் கொடுக்கக் கூப்பிட்டால், 'எனக்கு எல்லாம் தெரியும்!' என்று முகத்தில் அடித்த மாதிரிக் கூறியதென்ன! இப்போது, சொல்லிக் கொடுக்க அப்பா இல்லாததால், மார்க் குறைந்துவிட்டதாகச் சாக்குச் சொல்வதென்ன!

ஏதோ முசுட்டுத்தனம், கொஞ்ச நாள் கழித்து, எப்படியோ சரியாகிவிடும் என்று நினைத்துப் பொறுத்துப் போனால், கடைசியில், வருங்கால நல்வாழ்வுக்கு ஆதாரமான படிப்பையே தொலைத்து வாழ்க்கையை நாசமாக்கிக்



கொள்வான் போலிருக்கிறதே என்று எண்ணியவள், இதை எப்படிச் சீர் செய்வது என்று புரியாமல், ரொம்பவே மிரண்டு போனாள்!

## 2

விஷயம் அத்தோடு முடியவில்லை!

பள்ளிக்கு வந்து, வகுப்பு ஆசிரியையைக் கண்டு செல்லுமாறு, ரஞ்சனிக்குத் தாக்கீது வந்தது.

அது தாக்கீதுதான்! சற்று எரிச்சலையும் கோபத்தையும் குறிப்பாகக் காட்டிய கட்டளை!

ப்ராகிரஸ் ரிப்போர்ட்டை எடுத்துக் கொண்டு, உள்ளூரப் பெருமையுடன் அவள் பள்ளிக்குச் சென்றதும், சினேகமாய் முறுவலித்து, 'உங்களுக்கென்னம்மா? நன்றாகப் படிக்கிற அருமையான பிள்ளை! நீங்களெல்லாம், இந்த ஓப்பன் டேக்கு வர வேண்டியதே இல்லை!' என்று, வகுப்பு ஆசிரியை சொல்வதைக் கேட்டு மகிழ்ச்சியோடு வீடு திரும்பும் இனிய அனுபவம், இப்போது கிடையாது என்று சொல்லாமல் சொன்ன கடிதம்!

வேலைக்கு அரைநாள் விடுப்பு சொல்லிவிட்டு, காலையில் பள்ளிக்குச் சென்றால், ஆசிரியை ரஞ்சனியை வறுத்தெடுத்து விட்டார்!

''வேலையை விட்டுவிட்டு, ஆடு, மாடு வளர்க்கப் போகிறீர்களா? மேய்ப்பதற்கு ஆள் வைத்துச் சம்பளம் கொடுத்துக் கட்டுப்படி ஆகாது என்று, படிப்பை நிறுத்தி, உங்கள் பிள்ளையை ஆடு மாடு மேய்க்க அனுப்பப் போவதாகத்

திட்டமா?" என்று வகுப்பு ஆசிரியை கேட்ட விதத்திலேயே, ரஞ்சனிக்குக் கைகால் வெலவெலத்துவிட்டது!

"என்ன மேடம் இப்படிச் சொல்லுகிறீர்கள்? இவ்வளவு சம்பளம் கட்டிப் படிக்க வைப்பதே, இவன் படித்துப் பெரிய ஆள் ஆக வேண்டும் என்பதற்காகத்தானே!" என்று அவள் அழாக் குறையாகக் கேட்டபோதும், ஆசிரியையின் மனம் இளகவில்லை!

"பின், ஏன் இவன் இவ்வளவு மோசமாக மதிப்பெண் வாங்கியிருக்கிறான்? உண்மையிலேயே, இவன் படித்துப் பெரிய ஆள் ஆக வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருந்திருந்தால், பையனை வீட்டில் படிக்கச் சொல்லிக் கண்காணித்திருக்க மாட்டீர்களா? உங்களுக்குத்தான் அக்கறையே இல்லையே!" என்று, அப்போதும், ஆசிரியை அவளைத்தான் குறை கூறினார்.

அதற்காக, அவர்மீது ரஞ்சனி ஆத்திரப்பட வழியில்லை! அவள் பெற்ற மகன் மீது அவருக்குள்ள அக்கறையால்தானே, ஆசிரியை இப்படிக் கடுமையாகப் பேசுவதே! நன்றாகப் படிக்கக் கூடிய சுட்டிகையான பையன் நாசவழி போகிறானே என்கிற ஆதங்கம்!

இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டதினாலேயே, ரஞ்சனிக்கு ஆசிரியையின் பேச்சில் வெறுப்போ, கோபமோ வரவில்லை! மாறாக, மகனை எப்படித் திருத்துவது என்ற கவலைதான் பூதமாய் மனதை மருட்டியது!

கடைசியாக, "மாதாந்திரப் பரீட்சையிலேயே இவ்வளவு மோசமாகச் செய்திருக்கிறான்! இப்படியே போனால், நெருங்கிவிட்ட அரையாண்டுத் தேர்வில் எல்லோருக்கும் கடைசியாகி, தலைமை ஆசிரியை கூப்பிட்டுத் திட்டும்படி



ஆகிவிடும்! அதற்குள், ஏதாவது செய்து, நந்தகுமாரனைத் திருத்தப் பாருங்கள்!" என்றார் ஆசிரியை

நம்பிக்கையற்றுத் தலையாட்டிவிட்டு, மகனை அழைத்துக் கொண்டு கிளம்பினால், வகுப்பை விட்டு வெளியே வந்ததுமே, "பெரிய மிஸ் என்னைக் கூப்பிட்டுத் திட்டினால், அப்புறம், நான் பள்ளிக்கே போக மாட்டேன்!" என்று அறிவித்தான் மைந்தன்.

"நீ ஒழுங்காகப் படித்து நல்ல மதிப்பெண் வாங்கினால், அவர்கள் உன்னைத் திட்டவே மாட்டார்களே!" என்று, மகனை மடக்க முயன்றாள் அன்னை!

ஆனால், "என் சிநேகிதர்களுக்கு மாதிரி, எனக்கும் அப்பா வந்து சொல்லிக் கொடுத்தால்தானே, என்னாலே படிக்க முடியும்? மற்றப்படி, எனக்குப் பாடமே புரியாதே!" என்று, சிறுவன் பிடிவாதக் குரலில் திருப்பியடித்தான்!

இந்த அப்பாவை வரவழைக்க வழியே கிடையாது என்று, இவனுக்கு எப்படி உணர்த்துவது? என்ன சொன்னாலும் ஏற்க மறுக்கிறானே!

மகனின் எதிர் காலத்தை எண்ணும்போது, வெட்கத்தை விட்டு, அவன் தந்தையிடமே ஆலோசனை கேட்கலாமா என்றுகூட, ரஞ்சனிக்கு ஒரு தரம் தோன்றிவிட்டது!

ஆனால், அதனால் என்ன பயன்? கருவில் இருக்கும் போதே தன் பிள்ளை இல்லை என்று மறுத்தவன், இப்போது மட்டும் பிள்ளையின் எதிர்காலம் பேண ஓடி வரவா போகிறான்?

ஆனால், அவன் ஏன் அப்படிச் சொன்னான்?

இத்தனைக்கும், தாயை எதிர்த்துப் பிடிவாதமாக அவளை மணந்தவன், கடைசியில் வீண்பழி சொல்லி விரட்டினானே! ஏன்?

அதுவும், என்ன மாதிரிப் பழி!

மோகம் முப்பது நாளாய் முடிந்து போயிருந்தால், 'அம்மாதான் முக்கியம், நீ போய்விடு!' என்று நேரடியாகச் சொல்லியிருக்கலாமே! அதை விட்டு, கீழ்த்தரமாக, இப்படி ஒரு பழி சுமத்த வேண்டுமா?

இது, அவனுக்கும் கேவலமே. சொல்லப் போனால், அவனுக்குத்தான் அதிகக் கேவலம் என்று கூடவா புரியவில்லை?

புரியாத அளவுக்கு நரேந்திரன் முட்டாளோ, தன்மானம் அற்றவனோ கிடையாது! அப்படியிருக்க, ஏன் அநியாயமாகப் பழி சுமத்தினான்?

அதுவும், என்ன மாதிரிப் பழி!

அவளை விலக்கி, ஒதுக்கவென்றே கூறிய முழுக்க முழுக்கப் பொய்யான பழி! வேறு எதற்காகவும், மனமறிந்து, அந்தப் பழி சொல்ல முடியாது!

அப்படிப் பழி சுமத்தி விரட்டியவன், இப்போது மட்டும் எப்படி உதவ முன்வருவான்?

இதையே எண்ணி, மனதைக் குழப்பியவாறு, அலுவலகத்துக்குச் சென்றால், ரஞ்சனிக்கு அடுத்த அடி, அங்கே தயாராக இருந்தது! ரொம்பவும் பலவீனமாக, மெல்லத் தலை தூக்க முயன்று கொண்டிருந்த சின்னஞ்சிறு நம்பிக்கையையும், அடியோடு அழித்த அடி! நந்தகுமாரனுக்காக இனி ஒரு நாளும் அவனுடைய தந்தையிடம் எந்த வித உதவியும் அவள் கேட்கவே முடியாது என்று, அவளது உச்சந் தலைமேல், ஓங்கி அடித்துச் சொல்லியது, அந்த அடி!

ரஞ்சனிக்கு ஒரு பதிவுத் தபால் மூலமாக அவளுடைய கணவன் அனுப்பியிருந்தது, விவாகரத்து நோட்டீஸ்!



பிள்ளையை மட்டுமே தன்னதில்லை என்று மறுத்தவன், இப்போது அவளையும் தன்னவள் இல்லை என்று, அவளை விலக்கிவிட ஏற்பாடு செய்திருந்தான்!

இவனா, இந்தப் பிள்ளைக்காக விரல் அசைத்துவிடப் போகிறான்?

ரஞ்சனியுடைய கணவனுக்குத்தான், அவளுடைய பிள்ளை மட்டுமல்ல, அவளுமே வேண்டியிருக்கவில்லையே!

இத்தனை ஆண்டுகளாகக், கணவன் என்று ஒருவன் எங்கோ இருக்கிறான் என்றிருந்த சிறு திடம்கூட, இனி இல்லாமல் போகப் போகிறது!

கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது, ரஞ்சனிக்கு!

மின்னாமல், முழங்காமல் திடுமெனத் தலையில் விழுந்த இடி என்று சொல்ல முடியாது! நரேந்திரனைப் பிரிந்து வந்த பிறகு, இந்த ஒன்பது ஆண்டுகளாக, அவள் எப்போதுமே எதிர்பார்த்ததுதான்!

முதலில் சில ஆண்டுகள், தினம் தினமுமே இப்படியொரு நோட்டீசைக் கலக்கத்துடன் அவள் எதிர்பார்த்தவள்தான். நாளாக நாளாக, மற்ற பிரச்சினைகளில் மனம் ஈடுபட, ஈடுபட, அந்தக் கலக்கத்தின் தீவிரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, என்றோ நடக்கப் போகும் ஒரு சாதாரண விஷயமாக நினைக்கத் தொடங்கியிருந்தாள் அவள்!

அப்படித்தான்... சாதாரண விஷயமாக எண்ணத் தொடங்கி விட்டதாகத்தான், அவளே நினைத்தாள்!

ஆனால், நரேந்திரன் மணவிலக்கை வேண்டியிருப்பதைக் கண் முன்னே வெள்ளைத் தாளில், கறுப்பு எழுத்துக்களாகக் காண நேர்ந்தபோதுதான், அவளுக்கு உண்மை புரிந்தது!

இதைச் சாதாரணமாகக் கருதுவது, அவளால் இயலாத விஷயம்! நெஞ்சை அந்த அளவுக்குச் சுமையாக அழுத்தியது அவனது அறிவிப்பு!

தொடர்ந்து வேலை பார்க்க முடியாது என்று உணர்ந்து, பொது நிர்வாகியிடம் சென்று, "உடம்பு சரியில்லை!" என்று விடுமுறை கேட்டாள்.

என்ன நினைத்தாரோ, அவர் எரிந்து விழுந்தார்! "என்னம்மா, அரை நாள் லீவு போட்டுவிட்டு நீ வந்ததே இப்போதுதான். அதற்குள் அடுத்த அனுமதியா? பேசாமல், முழு நாளும் விடுமுறை எடுத்திருக்கலாம் அல்லவா? இடையில், நீயும் அலுவலகம் வந்ததாக, என்ன பாவலா?" என்று கேட்டார் அவர்!

அதன் பிறகுதான், நந்தனின் பள்ளிக்குச் செல்வதற்காகக் காலையில் விடுமுறை எடுத்தது நினைவு வர, "சாரி சார்! அது பள்ளிக்காக... இப்போதுதான் தலைவலி... இருக்கட்டும், சார்! நான் வேலையைத் தொடர்ந்து செய்துவிட்டே போகிறேன்!" என்று விட்டுத் தன் இடத்துக்குச் சென்று அமர்ந்தாள் அவள்.

"ச்சு! என்னமோ பெண்கள்! நினைத்தால், நினைத்தபடி ஆடுவது!" என்று முணுமுணுத்தபடி, தன் வேலையைத் தொடர்ந்தார் நிர்வாகி!

'விடியா இரவே, முடியாப் பகலே' என்பதுபோல, வேலையும் வேலை நேரமும் முடிவு பெறாமல் அன்று இழுத்துக் கொண்டே சென்றன. மனதை வேலையில் முழுமையாகச் செலுத்த அவளால் முடியாததும், அன்றைய வேலை இழுத்துக் கொண்டு போனதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்!



ஆனால், எப்படியோ ஒரு வழியாக, அன்று வீட்டுக்குக் கிளம்புகையில், ரஞ்சனி மிகவும் களைத்து விட்டிருந்தாள்.

அப்பாடி என்று வீட்டை அடைந்தால், அப்போதும் அவளது தலைவிதி, அவளை விடுவதாக இல்லை! அவளது உறவென்று ஒத்துக் கொள்ளக் கூடிய ஒரே ஜீவனிடமிருந்து வந்திருந்த கடிதம், மேலும் அவளைச் சோர்வடையச் செய்தது!

என்றைக்குமே ரஞ்சனியுடைய அத்தை பார்வதி தம்பி மகளிடம் பாசத்தைக் கொட்டி அரவணைத்தது கிடையாது தான். ஆனால், தம்பியும், தம்பி மனைவியும் விபத்தில் இறந்தபோது, பதினாலு வயதுப் பெண்ணான ரஞ்சனியின் எதிர்காலப் பொறுப்பை ஏற்கத் தயங்கி மற்ற உறவுகள் விலகியபோது, தன் வீட்டில் ரஞ்சனிக்கு இடம் கொடுத்தது அவள்தான்.

அப்போதும், தம்பி மகள் மீது, பார்வதி ஆசை பாசங்களைப் பொழிந்து விடவில்லை! 'தலைக்கு மேல் ஒரு கூரையைத் தருகிறேன், இங்கே இரு. படி. அதற்கு மேல், எதற்கும் என்ன எதிர்பார்க்காதே!' என்று சொல்லித்தான் பெண்ணைத் தன்னுடன் அழைத்துச் சென்றாள்.

அதன்படிதான் நடந்து கொண்டாள்.

ஆனால், ஆதரவான பெற்றோரை இழந்த பேரிடியுடன், அதுவரை நன்றாகப் பழகிவந்த மற்ற உறவுகள் கைகழுவிச் சென்ற விதத்தில், கதி கலங்கிப் போயிருந்த ரஞ்சனிக்கு அதுவே பெரும் ஆறுதலாக இருந்தது.

யார் துணையும் இல்லாமல், நடுத் தெருவில் நிற்க நேருமோ என்றல்லவா, அவள் மிரண்டு போயிருந்தாள்!

பொதுவாக இந்த அத்தையிடம் ரஞ்சனிக்கு அவ்வளவாக ஈடுபாடு கிடையாதுதான். எப்போதாவது சந்திக்கும்

தருணங்களிலும், அவளுடைய பெற்றோரிடம், செலவு, சேமிப்பு என்று சற்றுக் கடுமையாக அவள் பேசிக் கேட்டுத்தான் சின்னவளுக்குப் பழக்கம்!

'நான் சம்பாதிக்கிறேன், நான் செலவு செய்கிறேன்! உன்னிடம் கேட்டேனா?' என்று தந்தை கடுமையாக ஏதோ சொன்ன ஞாபகம்கூட, ரஞ்சனிக்கு லேசாக உண்டு!

தொடர்ந்து சில நாட்கள், தந்தையும், தாயும் உம்மென்று இருந்ததால், அத்தை மீது கொஞ்சம் வெறுப்பு உண்டு.

எனவே, அடைக்கலம் கொடுத்து அழைத்துச் சென்ற போதும், பார்வதியிடம் சிறு பயத்துடன், ஒதுங்கி நின்றுதான் பழகினாள்.

அந்தப் பயத்தையோ, ஒதுக்கத்தையோ போக்குவதற்குப் பார்வதியும் முயற்சிக்காததால் ஒரு வீட்டில், இரு அன்னியர்களாகவே அத்தையும் மருமகளும் வாழ்ந்து வந்தனர்!

நரேந்திரனின் மயக்கத்தில் ரஞ்சனி விழ, அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்! ஆனால், அந்த மயக்கம், தொடர்ந்த திருமணம் எதிலும், "யோசித்துச் செய்!" என்றது தவிரப் பார்வதி அதிகம் தலையிடவில்லை!

முப்பதே நாட்களில் நரேந்திரனைப் பிரிந்து அவள் திரும்பி வந்தபோதும், அப்படித்தான்!

"நரேந்திரன் வீட்டில் போய், ஏதேனும் பேச வேண்டுமா?" என்று கேட்டதோடு சரி! "வேண்டாம்!" என்ற ரஞ்சனியின் ஒற்றைச் சொல் பதிலை ஏற்று, மேலே தொடராது விட்டு விட்டாள்!

அந்த ஊரில் இருக்க மனமின்றி, வெளியூரில் வேலை தேடிக்கொண்டு ரஞ்சனி கிளம்பியபோது, அவள் தடை செய்யவும் இல்லை!



தொடர்ந்த சில ஆண்டுகளில், இரண்டு தரம் அத்தையைப் பார்க்க வென்று ரஞ்சனி சென்றது, அவ்வளவாக உற்சாக மூட்டுவதாக இருக்கவில்லை! சின்னப் பையனின் குறும்புகளை ரசிக்கும் மனநிலை பார்வதிக்கு இருக்கவில்லை! மகனை அடக்கி வைக்க, ரஞ்சனிக்கு மனமில்லை! அத்தோடு, பழைய நினைவுகள் தலை விரித்தாடுவதைத் தடுக்கவும் முடியவில்லை!

எனவே, கடந்த நாலு ஆண்டுகளில், பிறந்த நாள் வாழ்த்துகள் தவிர, வேறு தொடர்புகூட இல்லாது போயிருந்தது!

ஆனால், தனித்திருந்து, வரவு பார்த்து, செலவுக் கணக்குகளைத் திட்டமிடும்போது, அவ்வப்போது அத்தையின் நினைவு ரஞ்சனிக்கு வரும்! பெற்றோரை அத்தை கண்டித்தது சரிதானோ என்று தோன்றும்! அவர்கள் பணத்தைச் சேமித்து வைத்திருந்தால், கல் விழுந்ததும் பறக்கும் காக்கைக் கூட்டமாய் உறவுகள் அனைத்துமே விலகிப் போயிராதோ? பெற்றோரைத் திட்டியதற்காக, அத்தையிடம் ஒட்டுதல் இல்லாமல் இருந்தது தவறோ என்று தோன்றும், அடுத்து அன்றாட வேலையில், எல்லாம் மறந்தும் போகும்!

அந்த அத்தையிடம் இருந்துதான், இப்போது கடிதம் வந்திருந்தது!

கடிதத்தில், ஆரோக்கியம் குறைந்து போய்க்கொண்டிருந்த தன் உடல்நிலை பற்றிப் பார்வதி தெரிவித்திருந்தாள்.

கூடவே, "உனக்குத் தாயாக இருக்க நான் என்றுமே எண்ணியதில்லை! அது முடிகிற காரியமும் அல்ல. ஆனால், பெற்றோரைத் திடுமென இழந்த பெண்ணுக்குச் செய்ய வேண்டியதில் நிறையத் தவறி விட்டேனோ என்று உள்ளூர

ஓர் உறுத்தல்! உன்னோடு சில நாட்களைக் கழிக்க ஆசையாக இருக்கிறது! எனக்கும்தான் வேறு யார் இருக்கிறார்கள்? முடிந்தால் வந்து, சில தினங்கள் தங்கியிருந்து விட்டுப் போ!'' என்று, பார்வதி எழுதியிருந்தாள்.

அத்தையிடம் உரிய பிரியத்தோடு பழகவில்லை என்று தான் எண்ணியது போலவே, பார்வதி அத்தைக்கும் தோன்றியிருக்கிறது என்று ரஞ்சனி உணர்ந்தாள்.

தானாடாவிட்டாலும் சதையாடும் என்கிறார்களே! ரத்த உறவு என்றால் இதுதான் போலும் என்று நினைத்தவளுக்கு, அவளது உடல் நலம் பற்றி அத்தை எழுதியிருந்தது இரு மடங்காகத் தாக்கியது!

இருக்கும் இந்த ஒரே பெரிய உறவையும் இழக்க நேர்ந்து விடுமா?

பட்ட காலிலே படுவது போல, இன்று எத்தனை வேதனைகள்!

செலவைப் பாராமல், ஒரு தரம் அத்தையைப் போய்ப் பார்த்துவிட்டு வந்து விடுவது என்று முடிவு செய்தவளுக்கு, இன்னொரு யோசனை தோன்றியது.

மகனுக்கும் ஓர் இட மாறுதல் நல்லதோ?

எப்படியும், அரையாண்டுத் தேர்வைச் சரியானபடி எழுதுகிற நிலையில் நந்தகுமாரன் இல்லை! இன்னும் மோசமாக மதிப்பெண்கள் கிடைத்தால், நிலைமை இன்னமும் மோசமாகத்தான் ஆகும்!

அதைவிட, வகுப்பு ஆசிரியையிடம் கேட்டுக் கொண்டு, அவனை வெளியூருக்கு அழைத்துச் சென்று, முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் இரண்டு மூன்று வாரங்கள் தங்கியிருப்பது, அவனது மன நிலையைச் சீர்ப்படுத்தக் கூடுமோ?



அத்தை பார்வதியும் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை! அவளிடமும் ஆலோசனை கேட்கலாம்!

ரஞ்சனியைப் பொறுத்த வரையில், பழைய சம்பவங்கள் பல வகையில் நினைவூட்டப் பட்டு, இன்னமும் அதிகமாக வேதனைப் படத்தான் போகிறாள்!

ஆனால், அவளது இன்ப துன்பங்கள் இப்போது முக்கியம் அல்ல!

நந்தன் நல்லபடியாக ஆவதுதான் முக்கியம்! கூடவே, அத்தைக்கு ஆறுதல் அளிப்பதும்!

நந்தகுமாரனுடைய வகுப்பு ஆசிரியையுடன் கலந்து ஆலோசித்தபோது, "ஒரு பரீட்சையை எழுதாமல் விடுவதை, ஆசிரியை என்ற முறையில் நான் ஆதரிக்க முடியாது! ஆனால், ஊரில் பெரியவர்களுக்கு உடம்பு சரியில்லை என்று வெளியூர் செல்வதை யார், எப்படித் தடுக்க முடியும்? கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு, நந்தகுமாரனை அழைத்துப் போங்கள். ஆனால், அவன் பழைய கெட்டிக்காரனாகத் திரும்பி வரவேண்டும்! அது உங்கள் பொறுப்பு! பெரிய தேர்வை அவன் நன்றாகச் செய்யவில்லை என்றால், அப்புறம் என்னிடம் வந்து நிற்கக் கூடாது! நின்றாலும் பயனிராது!'' என்று எச்சரித்து அனுப்பி வைத்தார், ஆசிரியை!

அலுவலகத்தில் எரிச்சல் பட்டபடியே லீவு கொடுத்தார் நிர்வாகி!

விவரம் தெரிவித்ததும், அவர்கள் வரவை ஆவலாக எதிர்பார்ப்பதாகப் பார்வதியிடம் இருந்து பதில் வந்தது.

பயணம் போகிறோம் என்றதுமே, புதிதாக வந்திருந்த முசுட்டுத்தனம் மாறி, நந்தன் பழைய மாதிரி 'அம்மா, அம்மா' என்று பேசவும், ரஞ்சனிக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

இடையில் வந்த கோளாறு அடியோடு மாறி, மகன் பழையபடி மாறி விடுவான் என்ற நம்பிக்கையுடன் ரஞ்சனி பயணத்தைத் தொடங்கினாள்.

ஆனால், பிறந்த மண்ணில் காலடி வைத்ததுமே, அவளுக்குத்தான் எத்தகைய அதிர்ச்சி காத்திருந்தது!

## 3

நந்தகுமாரனுக்கு ஓரளவு விவரம் தெரிந்த பிறகு, இந்த நாலு ஆண்டுகளாக, ரஞ்சனி திருச்சியை விட்டு எங்கும் பெரிய பயணமாகச் சென்றதே இல்லை!

பள்ளியில் சுற்றுலாப் பயணமாகத் தஞ்சைப் பெரிய கோயிலைப் பார்த்துவிட்டு வந்ததோடு சரி! அது ஒன்றுதான் அவனுக்கு நினைவில் இருக்கும் பெரும் பயணம்!

எனவே, இரவில் ரயிலில் ஏறியதும், விடியும்போதும் ரயிலிலேயே சென்றதும், எல்லாமே அவனுக்குப் புதுமையான அனுபவமாக இருந்தது!

அவனது வயதுக்கு உரிய விதத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியுமாக ஆர்ப்பரித்தவன், தன் உள்ளக் கிளர்ச்சியைத் தாயுடனேயே பகிர்ந்துகொள்ள, அவளும் உள்ளூர ஆறுதலோடு மகனின் மகிழ்ச்சி ஆரவாரத்தில் கலந்துகொண்டு, அவன் வாய் ஓயாது கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சலிக்காது பதில் சொன்னாள்!



கம்பங் கதிரையும் கேப்பையையும் பார்த்து, "இது ஏன் நெல்லுச் செடி போல இல்லை?" என்றான்.

புன்செய்ப் பயிர்களைப் பற்றிய தாயின் விளக்கத்தைக் கவனத்துடன் கேட்டுக் கொண்டான்.

அடுத்து, ஆங்காங்கே புதர்களுக்கு இடையில் மயில்களைக் கண்டதும், அவனது உற்சாகம் அளவு கடந்து போயிற்று! எத்தனை மயில்கள் என்று எண்ணித், திரும்பிப் போனதும், இதைப் பற்றி யார் யாரிடம் பெருமை அடிப்பது என்று பட்டியலே போட்டான்.

திருநெல்வேலியில் வேக வேகமாக ரயில் மாறி ஏறியதுகூட, அவனுக்கு ஆனந்தம்தான்!

ஸ்ரீவைகுண்டத்தில் ரயிலை விட்டு இறங்கியபோதுதான் ரஞ்சனிக்குச் சற்று நெஞ்சை அடைத்தது!

ஊரின் ஒதுக்குப் புறமாக அத்தையின் வீடும், அங்கிருந்து சைக்கிளை அழுந்த மிதித்து வேகமாகப் பண்ணை வீட்டம்மாவுக்குக் கணக்கெழுதச் சென்றதும், அங்கே நரேந்திரனைப் பார்த்ததும்...

தலையை உலுக்கிக் கொண்டு, சாமான்களை ஒதுக்கி வைத்துக் கொண்டு, நந்தனையும் ஓரமாகப் பிடித்து நிறுத்திக்கொண்டு பார்த்தபோது, ரயில் மீண்டும் கிளம்ப மணியடித்தார்கள்!

அத்தோடு...

கிளம்பத் தொடங்கிய ரயிலை விட, வெளியில்தான் மகனின் கவனம் இருந்தது!

"அம்மா, ஆட்டோவில் போக வேண்டும் என்றுதானே சொன்னீர்கள்? பாருங்கள், கொஞ்சம் ஆட்டோதான் நிற்கிறது!

அதிலும் ஆட்கள் ஏறிப் போய்க்கொண்டே இருக்கிறார்கள்! வாருங்கள். சீக்கிரமாகப் போய், நாமும் ஓர் ஆட்டோவைப் பிடிக்கலாம்! இல்லாவிட்டால், எல்லா ஆட்டோவும் போய்விடும்! அப்புறம், நம்மால் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடக்க முடியாதும்மா! அம்மா, அம்மா, என்னம்மா நீங்கள்..." என்று தோளில் ஒரு பையை மாட்டிக் கொண்டு பரபரத்தான் பிள்ளை!

ஆனால், தாயிடம் அசைவே இல்லை என்று காணவும், திரும்பி அவளை நோக்கினான்.

தாயின் வெறித்த பார்வையைத் தன் கண்களால் தொடர்ந்தவனின் முகம் வியந்து விரிந்து விகசித்தது!

"ஓ!.. அப்பா! அப்பாதானேம்மா, அது? அப்பா வந்திருப்பதால், ஆட்டோ வேண்டாம் என்றுதான், சும்மா நின்றீர்களா? வாங்கம்மா, அப்பாவிடம் போகலாம்! ஆனால், அது யாரம்மா, அப்பாவிடம் தொங்கிக் கொண்டு? வாங்கம்மா!"

கண் சிமிட்டும் நேரத்தில், இந்தப் பெரிய உலகத்தையே சுற்றி வந்துவிடக் கூடிய வல்லமை படைத்தது மனம்!

நரேந்திரனைக் கண்டதும், இது அத்தையின் ஏற்பாடோ? ஏதோ அதிசயம் நிகழ்ந்து, அவள் மீதிருந்த வெறுப்பு மாறி அவளையும் மகனையும் வரவேற்கத்தான் ரயில் நிலையத்துக்கு நரேந்திரன் வந்திருக்கிறானோ என்றெல்லாம்கூட, ரஞ்சனி எண்ணிவிட்டாள்!

கணவனைக் கண்டதுமே, ஏதேதோ எண்ணத் தொடங்கி விட்டவளுக்கு, அவனைத் தவிர யாரும் கண்ணில் படவே இல்லை!



ஆனால், மகன், 'அது யாரம்மா, அப்பாவிடம் தொங்கிக் கொண்டு?' என்று கேட்ட பிறகுதான், தொத்தும் கிளியாக, நரேந்திரனின் தோளைப் பற்றிய வண்ணம் நின்று கொண்டிருந்த பெண், அவளது பார்வையில் பட்டாள்!

யாரிவள்? இந்த மாதிரி ஒரு சின்ன ரயில் நிலையத்தில், ஓர் இளைஞன் தோளில் அவள் சாய்ந்து நிற்பது அசம்பாவிதமாக இல்லையா?

தன்னுரிமை என்று காட்டுகிறாளா?

அந்த விவாகரத்து நோட்டீசின் காரணம், இவள்தானோ?

தாயின் திகைப்பு புரியாமல், மகன் பொறுமையிழந்தான்!

"அம்மா, ஆட்டோ எல்லாம் போய்விட்டது! அதோ, அப்பாவும் கிளம்புகிறார்! அவரும் போய்விட்டால் நாம் மட்டும் ரயில் நிலையத்திலேயே இருப்பதா? அம்மா..." என்று அன்னையின் கையைப் பற்றி இழுத்தவனுக்கு, அவள் சிலையாக இறுகி நின்ற மர்மம் ஒன்றும் புரிவதாக இல்லை!

அவனுக்குப் புரிந்ததெல்லாம், படத்தில் அல்லாமல், முதல் முறையாக மனித வடிவாகப் பார்க்கும் அப்பா கிளம்புகிறார், அவரை விடக் கூடாது என்பது மட்டுமே!

அதற்கு இந்த அம்மாவை இப்போது நம்பிப் பயனில்லை என்று உணர்ந்து, தாயின் கையை உதறிவிட்டு, நந்தன் தந்தையிடம் விரைந்தான்.

"அப்பா, அப்பா!" என்று அழைத்தவாறே ஓடியவன், அந்த நெடிய மனிதன் திரும்பாமலே அந்தப் பெண்ணுடன் பேசியவாறு செல்லவும், இன்னமும் வேகமாகச் சென்று, அவன் கையைப் பற்றினான்.

பெரியவன் திகைத்து நோக்கவும், "அப்பா, என்னைத் தெரிகிறதா? நான் உங்களுடைய மகன்ப்பா! என் பெயர்

நந்தகுமாரன்... அ... அதோ, அம்மா!'' என்று முன்னிலும் அதிகமாக அதிர்ந்து நின்ற தாயைச் சுட்டிக் காட்டினான்.

குழப்பத்துடன் திரும்பிய நரேந்திரனின் திகைத்த பார்வையில், பூமிக்குள் புதைந்துவிட மாட்டோமா என்பது போல, ரஞ்சனி குன்றிப் போனாள்!

கணவனைப் பார்த்த அதிர்ச்சியையே அவளால் சமாளிக்க முடியவில்லை! அவனோடு இன்னொரு பெண்ணைப் பார்த்த வலி வேறு!

அதற்கு மேல், மகன் இப்படித் தந்தையிடம் போய் நிற்பான் என்று, அவள் என்ன கண்டாள்?!

அவனைத் தன் பிள்ளையே இல்லை என்று சொன்னான் உன் தந்தை என்று, நந்தனிடம் சொல்லாதிருந்தது தப்போ? பிள்ளைக்குப் புரிகிற வயது ஆகட்டும் என்று தள்ளிப் போட்டாளே! அந்த வயது ஆகிறவரை, இந்தப் பக்கம் வந்திருக்கவும் கூடாதோ?

ஆனால், நரேந்திரனும், இந்தச் சமயம் பார்த்து, இங்கே வரக் கூடும் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லையே! கடவுளே!

இப்போது நரேன் என்ன செய்யப் போகிறான்?

அவளை ஒதுக்கிய மாதிரி, மகனையும் தள்ளி விடுவானா? பிள்ளை எப்படித் தாங்குவான்?

ஐயோ! அதை விடக் கேவலமாய், மகனையே அவனிடம் அவள்தான் அனுப்பியதாக எண்ணி விடுவானோ?

'வீணே சிரமப்பட வேண்டாம். நாங்களே ஆட்டோ பிடித்து வந்து விடுவோம்!' என்று அத்தைக்கு எழுதாமல் இருந் திருக்கலாமோ? எதிர்கொண்டு அழைத்துப்போக, இப்போது



யாராவது வந்திருந்தால், அவனுக்குத் தப்பாகத் தோன்றி யிருக்கக் கூடுமோ?

விவாகரத்து கேட்டதால், அவனை விடாமல் பிடிக்க வென்று வந்ததாக எண்ணுவானோ?

'கண் மூடித் திறக்குமுன் உலகைச் சுற்றிவரும் வல்லமை கொண்ட மனம்', மீண்டும் ஏதேதோ எண்ணிக் கலங்கியது.

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக்கொண்டு, மகனை அழைக்க ரஞ்சனி முயன்றபோது, தந்தையின் கையை விடாமலே, நந்தன் படபடவென்று பேசினான்!

''பாருங்கப்பா, ஆட்டோ பிடிக்கச் சீக்கிரமாகப் போகலாம் என்றால், அம்மா அசையவே இல்லாமல் நிற்கிறார்கள்! அப்புறம்தான் எனக்குத் தெரிந்தது, நீங்கள் எங்களைக் கூட்டிப்போக வந்திருக்கிறீர்கள் என்று!...'' என்று மகன் மேலும் உளற, அவமானத்தில் ரஞ்சனியின் முகம் ரத்தமெனச் சிவந்தது!

பெரு முயற்சி செய்து, சமாளித்துக்கொண்டு, ''நந்து, வா, நாம்.. நாம், நம் அத்தைப் பாட்டி வீட்டுக்குப் போகலாம்! தனியாக...!'' என்று மகனை அழைத்தாள்.

புரியாமல் விழித்துவிட்டு, வெளியே பார்த்தான் அவன். பிறகு, ''எப்படிப் போவது? எல்லா ஆட்டோவும் போய் விட்டதே!'' என்றான் எரிச்சலோடு.

''எப்படியாவது போகலாம்! வா!'' என்று அவள் அடிக்குரலில் சீறும்போதே, ''கூலி, அந்தச் சாமான்களையும் நம் காரில் வையப்பா!'' என்றான் நரேந்திரன் தோரணையாக.

பெரிய மனிதனின் உத்தரவல்லவா? கூலி அவசரமாக அவளது சூட்கேசையும் தோள் பையையும் தூக்கலானான்.

"இஇல்லைப்பா.. பரவாயில்லை..." என்ற ரஞ்சனியின் குரல், அவன் காதில் விழுந்த மாதிரியே இல்லை!

நரேந்திரன் அழைத்துச் செல்ல வந்த அந்தப் பெண்ணின் பெரிய பெரிய பெட்டிகளோடு, ரஞ்சனியின் சுண்டைக்காய் அளவிலான பெட்டி, பையையும் தூக்கிக் கொண்டு கூலி முன்னே செல்ல, ஏங்கித் தவித்து, இப்போது கண்டு பிடித்தும் விட்ட தந்தையின் கையை விடாமல் பிடித்தபடி அவனுடனேயே நந்தகுமாரன் செல்ல, ஓர் எரிச்சலான முகச் சுழிப்புடன் அந்த அழகி நரேந்திரனின் மறுபுறமாய் ஒட்டி நடக்க, வேறு வழியின்றி, ரஞ்சனி அவர்களைப் பின் பற்றிப் போக நேர்ந்தது!

நரேந்திரன் 'ரிமோட்'டை அழுத்திக் காரைத் திறந்ததுமே, சட்டென முன்புறம் ஏறி அமர்ந்து கொண்டாள் அந்தப் பெண்!

வேறு வழியின்றித் தந்தையின் கையை விட்டுவிட்டு, நந்தனும் பின்புறமாகக் காரில் அமர்ந்தான்.

இனி ஏற மறுப்பதும் அசட்டுத்தனமாகத் தோன்றும்! ஆனால், அந்தக் காரில் இயல்பாக ஏறி அமரவும் ரஞ்சனியால் இயலவில்லை!

போர்ட்டருக்குப் பணம் கொடுத்துவிட்டுத் திரும்பியவன், அவள் தயக்கத்துடன் நிற்பதைக் கண்டு, "ஏறிக்கொள். உன் அத்தை வீட்டில் விட்டுவிட்டுப் போகிறேன்," என்றான்.

அவளுக்குத் தொண்டை இப்படி அடைக்கும்போது, அவனால் மட்டும் யாரோ போல எப்படிச் சாதாரணமாகப் பேச முடிகிறது? அல்லது, குரலில் லேசாகப் பிசிர் அடிக்கிறதோ?

வழக்கமான அனாயாசத்துடன் நரேந்திரன் காரை எடுத்தபோது, அந்த எண்ணம் அடிபட்டுப் போனது.



அவளுள் ஏதோ நிமிரவும் செய்தது!

அநியாயம் செய்த அவனால் இயல்பாக இருக்க முடியும் போது...

வெகுவாகத் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு, "எங்களால் உங்களுக்கு வீண் தொந்தரவு..." என்று, முறைப்படி அன்னியளாய் நன்றி தெரிவித்தாள்.

அவனை மட்டும் நினைத்துப் பேசியவளுக்கு இன்னோர் இடத்திலிருந்து அடி விழுந்தது. "அப்படி உண்மையிலேயே நினைப்பவர்கள், முதலிலேயே ஆட்டோ பிடிக்கச் சென்றிருப்பார்கள்!" என்றாள், நரேந்திரன் அருகே, உரிமையோடு முன்னிருக்கையில் அமர்ந்திருந்தவள்.

மீண்டும் அவமான உணர்வு ரஞ்சனியைத் தகித்தது!

அவளுடைய கணவனின் காரில், உரிமையோடு இன்னொருத்தி அவன் அருகே அமர்ந்து செல்ல, இவள் யாரோ போலப் பின்னே முடங்கி யிருப்பதோடு, அப்படி உட்கார்ந்திருப்பதற்கும் சமாதானம் சொல்லும் நிலையே கேவலம் என்றால், அதை அந்த இன்னொருத்தி கிண்டலாக மட்டம் தட்டினால் எப்படி?

ஆனால், இதற்கு ரஞ்சனி என்ன பதில் சொல்ல முடியும்?

விவாகரத்தை வேண்டும் கணவனைக் கண்ட பாதிப்பில், ஒன்றும் தோன்றாமல் மரமாய் நின்றேன் என்றும்தான், எப்படி ஒப்புவது? கொஞ்சமும் சுய மதிப்பே இல்லாமல், அவன் காலடியில் புழுவாய்க் கிடக்கத் துடிப்பதுபோல ஆகாதா?

ஒன்றும் சொல்ல மாட்டாமல் அவள் திணறியபோது, நல்ல வேளையாக நந்தன் ஏதோ பேச, அதற்கு நரேந்திரன் பதில் சொல்ல, அந்த உரையாடலின் மறைவில், ரஞ்சனி மௌனமாக இருந்துவிட முடிந்தது!

நல்ல வேளையாகப் பயணமும் நீண்ட தூரமில்லை! ஐந்தாறு கிலோ மீட்டர்தான்.

ஸ்ரீ வைகுண்டத்துக்கு இப்புறமும், அப்புறமுமாகத் தாமிரபரணி ஆற்று நீர்ப் பாசனத்தை நம்பி உருவாகியிருந்த சிற்றூர்களில் ஒன்றில், பார்வதியின் வீடு இருந்தது! ஐந்து நிமிஷங்களில் வீட்டை அடைந்து விட்டார்கள்!

பார்வதி அம்மாளின் வீட்டின் முன் காரை நிறுத்தியவனை வெறும் வாய் உபசாரமாகக் கூட, உள்ளே வருமாறு ரஞ்சனி அழைக்கவும் இல்லை!

டிக்கியைத் திறந்து, சாமான்களை இறக்கிய நரேந்திரன், அவற்றை உள்ளே கொண்டு வைக்க முயலவுமில்லை. வீட்டு வாயிலோரமாகப் பெட்டி பைகளை வைத்தவன், "பை" என்பது போன்ற முணுமுணுப்புடன் காரில் ஏறிக் கிளப்பிக் கொண்டு போய்விட்டான்!

வேண்டாத சுமை!

இறக்கித் தள்ளியதோடு, தொல்லை விட்டது என்று ஓடி விட்டான் என்று, உள்ளூர வலியுடன் எண்ணியது ரஞ்சனியின் உள்ளம்!

## 4

குப்பையைக் கொட்டுவது போலத் தள்ளிவிட்டுச் செல்லும் கணவனின் செயலும், அவன் காரில் மீண்டும் ஏறியதுமே அவன் புறமாக அவள் சாய்ந்ததுமாக ரஞ்சனியை நோகடித்தது என்றால், "ஏம்மா, அப்பா ஏன் நம் கூட



வரலை?" என்று நந்தன் கேட்க, அவளுக்குத் தலையில் அடித்துக்கொண்டு 'ஓ'வென்று அழலாம் போல இருந்தது.

தொண்டையில் அடைத்ததை விழுங்குவதே பெரும் பாடாக இருந்தது! அதற்கு மேல் இந்தக் கேள்விக்கும்தான், அவள் என்ன பதில் சொல்லுவாள்?

இறக்கி விட்டுவிட்டுப் போனவனைக் கேள் என்றா?

யோசித்து, "அப்பா, அவருடைய அம்மாவைப் பார்க்க வந்திருக்கிறார், கண்ணா! அதனால், அந்த அம்மா இருக்கும் இடத்துக்குத்தானே, அவரும் போக வேண்டும்! அந்த வீடு வேறு இடத்தில் இருக்கிறது..." என்று ஏதோ சொன்னபடியே, குனிந்து சாமான்களைத் தூக்கினாள்.

"அது எனக்குத் தெரியும்!" என்றான் பிள்ளை.

எப்படித் தெரியும் என்று ரஞ்சனி யோசிக்குமுன், "ஆனால், நாம் ஏன் அப்பா கூடப் போகலை?" என்று மறு கேள்வி கேட்டான் மகன்.

அலுப்புடன் மகனைப் பார்த்தாள் ரஞ்சனி.

இவன், தன் தகப்பனைப் பற்றிப் பேசாமல் இருந்தால், கொஞ்சமேனும் நன்றாக இருக்குமே என்றிருந்தது அவளுக்கு. ஆனால், அதைச் சொன்னால், ஏன் என்ன என்று அடுத்த கேள்விகள் தொடரும்! அந்த மாதிரிக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் மனநிலை இப்போது அவளுக்கு இல்லை! வெறுமனே, 'வாயை மூடு' என்று நந்தனை அடக்குவதும் முடியாத காரியம். எனவே வேறு வழியில் பேச்சைத் திருப்பினாள்.

"நந்து, நாம் வந்திருப்பது, உடம்பு சரியில்லாத அத்தைப் பாட்டியைப் பார்க்க! அவர்களை விட்டுவிட்டு, வேறு எங்கோ

போவது சரியா, சொல்லு! அநாகரீகமில்லை? உள்ளே போன பிறகும், இதே பேச்சுப் பேசாமல், நல்லபடியாக நடந்துகொள்!'' என்றாள் சற்றுக் கண்டிப்பான குரலில்.

தந்தையைப் பார்த்ததில் மனம் நெகிழ்ந்திருந்ததாலோ என்னவோ, சமீபத்திய பிடிவாதத்தைக் காட்டாமல், பையனும் அடங்கிப் போனான்!

அல்லது, தந்தை தங்களை அழைக்கவில்லை என்பதை, அவனும் உணர்ந்திருக்கலாம்!

உணர்ந்து வேதனைப் படுகிறானோ என்று ஒரு கணம் தாய் மனம் தவித்தபோதும், மகனைப் பொறுத்தவரையில், இப்போது நரேந்திரனைச் சந்திக்க நேர்ந்ததும் ஒரு விதமாய் நல்லதுதானோ என்றும் அவளுக்குத் தோன்றியது.

தந்தை வெறுத்து ஒதுக்குகிறான் என்று தெரியும்போது, துன்பமாக இருந்தாலும், தாயிடம் குற்றமில்லை என்பதும் புரிந்துவிடும் அல்லவா? அவனை வேண்டாம் என்று சொல் லும் தந்தைக்காக இடையில் வந்த முசுட்டுத் தனமும் மறைந்து, பிள்ளை பழைய பத்தரை மாற்றுத் தங்கமாகி விடுவான்!

கையில் சுமையோடு வீட்டுப்படி ஏறும்போது, கடிதத்தில் வருந்தி அழைத்த அத்தை, வீட்டு வாயிலுக்கும் வந்து வரவேற்றிருக்கலாமோ என்று தோன்றியது.

பார்வதி என்றைக்குமே எந்த உணர்வையும் வெளிப் படையாகக் காட்டியது இல்லை என்றாலும், வேண்டாத சுமையாகக் கணவன் புறக்கணித்துப் போன விதம், ஏதோ ஓர் ஆதரவுக்காக அவளை ஏங்க வைத்தது போலும்!

பெருமூச்சை அடக்கியபடி, ரஞ்சனி வாயில் கதவைத் தட்டினாள்.



கதவைத் திறந்த வேலைக்கார வள்ளியம்மை முகத்தில் ஒரே ஆச்சரியம்!

''ஐயோ! அதுக்குள்ள வண்டி வந்திருச்சாம்மா? வண்டி வந்து, ஆட்டோ பிடிச்சு, அதுக்குள்ள வந்திட்டீங்களே! கொண்டாங்க, அந்தப் பெட்டியை. நீங்கல்லாம் இதைப் போயித் தூக்கிகிட்டு! ஆட்டோக்காரனைக் கொண்டாந்து வைக்கச் சொல்லப்படாது? என்னையாவது கூப்பிட்டிருக்கலா மில்ல? யம்மா, இவுங்கதான் சின்ன அய்யாவா? எம்புட்டு வளந்துட்டாங்க! வாங்கய்யா, ராசா! யம்மோய், பெரியம்மா, உங்க மருமக வந்துட்டாங்கம்மா! ரயிலு வெரசா வந்திட்டு தாம்!'' என்று உரக்கக் குரல் கொடுத்தபடி உள்ளே சென்றாள்.

''உள்ள வாங்கம்மா! அம்மாளுக்குக் காலிலே வீக்கம். நடக்குறது கஷ்டம்!''

உள்ளத்தின் ஏக்கம், விரைந்து மறைந்துவிட, ''வாம்மா!'' என்று மகனைக் கையில் பிடித்தபடி ரஞ்சனி வேகமாக உள்ளே சென்றாள்.

பார்வதி முயன்று எட்டு எடுத்து வைத்து வருவதைக் கண்டதும், அவள் மனம் உருகியே போய்விட்டது!

ஓடிப்போய், ''நான்தான் வந்துவிட்டேனே! நீங்கள் எதற்கு அனாவசியமாக நடந்து கொண்டு... உட்காருங்கள்! கால் இவ்வளவு மோசமாக இருப்பது எனக்குத் தெரியாதே! உட்காருங்கள் அத்தை!'' என்று பார்வதியைப் பிடித்து உட்கார வைத்தாள்!

''இப்போது எவ்வளவோ பரவாயில்லை. ரஞ்சனி! நம் உதயமூர்த்தி நினைவு இருக்கிறதா? அவன்தான் பார்க்கிறான்! நடப்பேனா என்றிருந்தேன்! சீக்கிரமே, இன்னும் நன்றாகி

விடும் என்றான். நந்தன் நன்றாக வளர்ந்து விட்டானே! நன்றாகப் படிக்கிறானா?''

மகன் முகம் கறுப்பதைக் கவனியாதது போல, ''ம்! நன்றாகப் படிப்பான், அத்தை! எப்போதும், முதல் மூன்று பையன்களில் ஒருவனாக இருப்பான்!'' என்று, அவனது பழைய நிலையைச் சொல்லிச் சமாளித்தாள் ரஞ்சனி. தொடர்ந்து, ''உதயமூர்த்தி என்றால்... ஓ, உதயண்ணன்! முன்பு டாக்டருக்குப் படித்துக் கொண்டிருந்தாரே, ஒல்லியாகக் குச்சி மாதிரி... அவரா? படித்து, முடித்து, இப்போது வைத்தியமெல்லாம் செய்கிறாரா?'' என்று வியப்பும் ஆர்வமும் காட்டி வினவினாள்.

ஒன்பது ஆண்டுகளில் எத்தனை மாற்றம்!

''ஆமாம்! மருத்துவமனை தொடங்கி, ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டனவே! என்னைப் பொறுத்தவரையில், மருத்துவம் மட்டுமல்ல! மருத்துவருக்கு இலவசமாக வருமே, அந்த மருந்துகள், டானிக்குகள் என்று எனக்குப் பாதி மருந்துகூட, அவனே கொண்டு வந்து தருவதுதான்! ஓசி வைத்தியம் பண்ணிக் கொள்ளக் கூடாதுப்பா என்றால், குரு தட்சிணை என்கிறான். அதனால் இது ஓசியில்லையாம்! நன்றி தெரிவித்தலாம்!'' என்று பெருமையோடு விவரித்தாள் பார்வதி!

பேசிக் கொண்டிருக்கும்போதே, ஒருவன், ஒரு சிறு காய்கறிக் கூடையைக் கொண்டு வைத்து விட்டுப் போனான். பட்டணத்தில் இருந்து வந்திருக்கும் பெண்ணுக்கு என்று, காரட்டும் பட்டாணியும் பீன்சும் வந்திருந்தன!

அதுவும் குரு தட்சிணைதான்!

முன்தினம் பழுது பார்த்த மோட்டார் சரியாக ஓடுகிறதா என்று கேட்டு வந்தான் ஒரு பழைய மாணவன்!



ரஞ்சனிக்கும் அறிமுகம் ஆனவன்தான்.

அவளைப் பார்த்து இரண்டு வார்த்தை நலம் விசாரித்து விட்டு, ''தங்கச்சி வந்ததும், ஒரு தரம் கடைக்குக் கூட்டி வரும்படி, ஜவுளிக்கடைப் பெருமாளு சொல்லச் சொன்னான் டீச்சர்! நைஸ் சேலைங்க நிறைய வந்திருக்குதாம்! பாப்பாவுக்கு வேண்டியது பார்த்து எடுத்துக்கிடச் சொன்னான்!'' என்று தகவல் தெரிவித்துவிட்டுப் போனான்!

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அதே ஊரில் ஆசிரியப் பணி புரிந்ததன் மகத்துவம்! அதிலும், கடைசி இருபது ஆண்டுகள் தலைமை ஆசிரியை! உண்மை உழைப்புக்கு, ஓய்வு பெற்ற பிறகும், ஊரின் மதிப்புக்குரிய அங்கமாகக் கருதி, மக்கள் பார்வதிக்கு மரியாதை செய்து வந்தனர்! பூவோடு சேர்ந்த நாரும் இறைவன் கழுத்தில் ஏறிச் சிறப்படைவது போல, அத்தை பார்வதி வீட்டில் வளர்ந்த ஒரே காரணத்தால், ரஞ்சனிக்கும் இந்த நலங்களில் சில வந்து சேர்ந்தன!

ஆனால், இதெல்லாம் நரேந்திரனுக்கு எங்கே புரிந்தது?

'அதுதான், உன்னைச் சந்திப்பதற்காக, உன் அத்தை வீட்டுக்கு எதையாவது தூக்கிக்கொண்டு எத்தனையோ பேர் வருகிறார்களே, யாரையென்று சொல்வது?' என்று கூசாமல் சொன்னானே!

முப்பது நாட்களுக்கும் மேலாக, ஒருயிராக வாழ்ந்துவிட்டு, அவனால் எப்படி, அப்படிக் கேட்க முடிந்தது?

கூசாமல் கேட்டவன், கட்டியவள் கண் முன்னே, இன்னொருத்தியைக் கூட அழைத்துப் போகக் கூசவில்லையே! கொஞ்சமும் தயங்காமல் முன்னிருக்கையில் அமர்த்திக் கொண்டு! அவனது தோளில் பதிந்திருந்த அவளது கையைக்கூட விலக்கவில்லை!

எவ்வளவோ முயன்றும், ரஞ்சனிக்குத் தூக்கம் வர மறுத்தது. மீண்டும், மீண்டும் கணவன் நினைவே தோன்றி, அவளைத் துடிக்க வைத்தது! மணவிலக்கே கேட்டுவிட்டானே என்று மனம் தவித்தது!

காலம் மனப் புண்ணைப் பெரிதும் ஆற்றிவிட்டது என்று நினைத்ததெல்லாம் எவ்வளவு பெரிய முட்டாள்தனம்! இடைப்பட்ட ஒன்பது ஆண்டுகளும் நிகழ்வே இல்லாதது போல, என்ன வலி! என்ன வேதனை!

இரவெல்லாம் தூக்கமின்றித் தவித்தவளுக்குக் காலையிலும் கூடச் சற்று நேரம் உறங்க முடியவில்லை!

வழக்கமாக விழித்தெழும் நேரத்தில் அவளுக்கே தூக்கம் கலையத் தொடங்கியதோடு, பரபரப்புற்றிருந்த மகனும் அவளை எழுப்பி விட்டுவிட்டான்!

கிராமப் புறங்களைப் பார்த்தறியாத அவனுக்குத் தாயிடம் கேட்பதற்கு ஆயிரம் கேள்விகள் இருந்தன!

பல்வேறு கேள்விகளுக்குப் பதிலைக் கேட்டு அறிந்த பின், அவனே சற்று வெளியே சுற்றிப் பார்த்துவிட்டு வரலாமா என்று பதவிசாகக் கேட்டான்!

மறுப்பதற்குக் காரணம் இருப்பதாக ரஞ்சனிக்குத் தோன்றவில்லை!

ஏனெனில், இப்போதெல்லாம் பார்வதி காலையில் சற்றுத் தாமதமாகத்தான் படுக்கையை விட்டு எழுவது என்று இரவே வள்ளியம்மை சொல்லியிருந்தாள்.

தூக்க மாத்திரையின்றி, உடம்பு வலி மறந்து நன்கு தூங்க முடிவது இல்லையாம்! மாத்திரை போட்டுக் கொள்ளும்போது, அதன் வேகம் அடியோடு தீர்ந்து, இயல்பாக நடமாடப் பத்து



மணி வரை ஆகிவிடுமாம். அதுவரை, யாரிடமும் பேசிப் பழகப் பெரியம்மாவுக்குப் பிடிக்காது என்றிருந்தாள், கூடவே இருந்து பணி புரியும் வேலைக்காரி.

பார்வதியும் அதையே, ''எங்கேயும் செல்லத் தேவை இல்லாததால், நான் இப்போது தாமதமாகத்தான் எழுவது, ரஞ்சனி. உனக்குக் காலைப் பலகாரம் எட்டு மணிக்கெல்லாம் செய்யச் சொல்லியிருக்கிறேன். அதைவிடச் சீக்கிரம் வேண்டுமானாலும், வள்ளி வருத்தப் படாமல் செய்து தருவாள். உனக்குக் காலையிலேயே விழிப்பு வந்து விட்டால், அங்கே, இங்கே உலாவப் போவதானால் போய்விட்டு வா! பையனையும் விருப்பம் போல ஓடியாட விட்டுவிடு! இந்தச் சின்ன ஊரில், அவன் எங்கும் தொலைந்து போக வாய்ப்பில்லை! அப்படியே, வழி மறந்தாலும், பெரிய டீச்சர் வீடு என்று கூட்டி வந்து விட்டு விடுவார்கள் என்று, அவனிடம் சொல்லி வை! ஸ்ரீவைகுண்டம் வரை போனால்தான் அயலார் கூட்டமும் நெரிசலும்! அதற்கு ஐந்தாறு கிலோ மீட்டர் போக வேண்டுமே! அவ்வளவு சுற்ற மாட்டான் இல்லையா?'' என்று கூறியிருந்தாள்.

அதன்படியே ரஞ்சனி மகனை எச்சரிக்க, அவனும் நல்லதனமாக, உடனே தலையாட்டி வைத்தான்! கூடவே, கிராமப்புறங்களில் எந்தெந்த மாதிரிக் கவனத்தோடு செல்ல வேண்டும் என்றும் சொல்லி அனுப்பினாள்.

ரஞ்சனியும், காஃபியை மட்டும் குடித்துவிட்டு, உலாவப் போனாள்.

பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த ஒற்றையடிப் பாதை அப்படியே இருந்தது!

கிழக்கே குறுக்கு வழி பிரியும் இடம் வந்ததும், அவளது கால்கள் அப்படியே நின்றன!

இந்த வழியே சென்றால், பண்ணை வீட்டின் பின்புறம் விரைவிலே வந்துவிடும்!

அப்போதெல்லாம், பள்ளி முடிந்ததும், அந்த வழியே சென்றுதான், பண்ணை வீட்டு அம்மாவுக்குக் கணக்கெழுதிக் கொடுத்துவிட்டு வருவாள்.

அப்போதெல்லாம், அந்த அம்மாள் நன்றாகத்தான் நடந்து கொண்டாள்!

விறு விறென்று வந்து, வேகமாக வேலை செய்யும் பெண்ணுக்குக் காபி, பலகாரம் வரும்!

வேலையில் கவனமாகச் சாப்பிடாமல் வைத்திருந்தால், வந்து வேலையை நிறுத்திச் சாப்பிட்டுவிட்டு வேலை செய்யச் சொல்லுவாள்..

அப்போதெல்லாம் ரஞ்சனிக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். இது போலச் சின்ன ஊரில், படிக்கும்போதே வேலை செய்து சம்பாதிக்கும் வாய்ப்பு வேறு யாருக்குக் கிடைக்கும்? அதுவும் நல்ல காபி பலகாரத்தோடு!

சகுந்தலா தேவி அம்மாள் சம்பளமும் நிறையத்தான் கொடுத்தாள்!

ஆனால் ஒன்று, என்ன தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தாலும், அந்த அம்மாள் வந்தால், வேலையை விட்டுவிட்டு மரியாதையாக எழுந்து நின்றுவிட வேண்டும்! அந்த பந்தாவை மட்டும் பண்ணை வீட்டம்மா விட்டுக் கொடுத்ததே இல்லை!

ரஞ்சனி பிளஸ் டூ முடித்ததுமே பண்ணை வீட்டில் வேலையில் சேர்ந்து விட்டாள்! ஹாஸ்டலில் தங்கிக் கல்லூரியில் படிப்பது அதிகச் செலவாகும் என்று, தபால்



மூலம்தான் கல்லூரிப் பாடங்களைப் படித்து வந்தாள் அவள். உடல் சிரமத்தைப் பாராமல், பள்ளி வேலை முடிந்து வந்ததும், தம்பி மகளுக்கு அந்தப் பாடங்களைப் பார்வதி கற்றுக் கொடுப்பாள்.

அத்தையிடம் திட்டு வாங்க நேருமோ என்ற பயத்தில், ரஞ்சனி எப்போதுமே நன்றாகப் படிப்பாள். இப்போது, இரு மடங்குக் கவனத்துடன் படிக்க, பார்வதிக்கு வெகு திருப்தி!

அந்த மகிழ்ச்சியில்தான், கணக்கு வழக்குப் பார்க்கப் பண்ணையில் ஆள் தேடிக் கேட்டபோது, பார்வதி தன் மருமகளையே அனுப்பி வைத்தது!

அடுத்த கிராமம் என்பதால், இடைப்பட்ட இரண்டு கிலோ மீட்டர் தூரத்தை இலகுவாகக் கடக்கவென்று, ரஞ்சனிக்கு ஒரு சைக்கிளும் கொடுத்தார்கள்!

ஏதோ பென்ஸ் காரே கிடைத்தாற்போலப் பெருமிதம் அவளுக்கு!

இந்த ஒற்றையடிப் பாதை வழியேதான் உற்சாகத்துடன் போய் வருவாள்! ஆற்றங்கரை ஓரமாகவே பாதை! அங்கங்கே ஆற்றுக்கும் ஒரு கிளைப் பாதை போகும்! நேரம் இருக்கும் போது, ஆற்றங்கரை ஏறி இறங்கி, நூலாகவோ, வாய்க் காலாகவோ, அந்தந்தக் காலத்துக்குத் தக்கபடி ஓடும் ஆற்றில் கால் நனைத்துவிட்டு வருவாள்! மழைக் காலத்தில் மட்டும் ஆற்றில் இறங்குவது இல்லை! திடுமென நீர் மட்டம் மிகுதியாக உயர்ந்து விடுவதுண்டு என்று எச்சரிக்கப்பட்டிருந்த தால், சிவப்பு நிறத்தில் ஓடும் வெள்ளத்தைக் கரை மேலிருந்தே பார்த்துவிட்டுச் சென்று விடுவாள்!

ஆள் நடமாட்டம் இல்லாத இடம்தான்! ஆனால், பெரிய டீச்சர் வீட்டுப் பெண் என்பதால், அபூர்வமாக எதிர்ப்

படுவோரும், அவளிடம் மரியாதையாகத்தான் நடந்து கொள்வார்கள்!

நிம்மதியும், மகிழ்ச்சியும் நிரம்பி வழிந்த வாழ்க்கை!

அப்போதுதான், ஒரு நாள், பண்ணை வாரிசான நரேந்திரனை ரஞ்சனி சந்தித்தது!

அதன் பிறகு...

எவ்வளவோ நீர் அடித்துக் கழுவியபோதும், முழுமையாக மறையாதபடி, சிறு வீக்கத்துடன் சிவந்திருந்த இமைகளுடன், ஆற்றங்கரையிலிருந்து ரஞ்சனி திரும்பி வந்தபோது, அவளது தவிப்பின் மூல காரணமே, அவளை நோக்கி வந்தான்!

வந்தவன் கேட்ட கேள்வியில், அவளது நெஞ்சு பதறியது!

## 5

ஒரு மாதம் ஆசைக் கணவனாக வாழ்ந்தவனை அந்த இடத்தில் - அவன் அவளைத் துரத்தித் துரத்திக் காதலித்த அந்த இடத்தில் காணவும், ஒரு கணம் ரஞ்சனியின் உள்ளம் சிட்டுக் குருவியாய் ஜிவ்வென்று சிறகடித்துப் பறந்தது!

இவனும் பழைய நினைவில்தான் வந்திருப்பானோ?

இவன், தன்னிடமிருந்து விவாகரத்துக் கேட்டிருப்பவன் என்பதைப் பிடிவாதமாக நினைவுக்குக் கொணர்ந்து, ரஞ்சனி தன் பரபரப்பை அடக்கிக் கொண்டாள்.

உள்ளே இல்லாத நிதானத்தை வெளிக்காட்டி, அவள் தன் வீட்டுத் திசையில் செல்ல முயன்றபோது, அவன் அவசரமாக வந்து வழியை மறித்தான்.



அவள் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு பேசாமல் நிற்கவும், ''உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும் என்றுதான் இந்தப் பக்கமாக வந்தேன்! அநேகமாக, நீ இந்தப் பக்கம்தான் சுற்றிக் கொண்டிருக்கக் கூடும் என்று எண்ணினேன்...'' என்றவன், ஏதோ புரியாத பாவனையில், லேசாகப் புருவத்தைச் சுருக்கினான்.

என்ன கேட்கப் போகிறான்? மண விலக்கு பற்றியா? அவனது முகமும் குரலும், அப்படி எதையோதான் எதிர்பார்க்க வைத்தன!

நூலறுந்த பட்டமாய், உள்ளத்தின் துள்ளல் அடியோடு மறைந்துவிட, ''என்ன?'' என்று சுருக்கமாக வினவினாள்.

தலையசைத்தான் அவன். ''பார்த்துக் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன! இவ்வளவு காலமாகப் பணம் கேட்டு நீ வரவில்லை என்பதால், அப்படி வந்து பயனில்லை என்று, கருவை அழித்திருப்பாய் என்று நினைத்தேன்! ஆனால், பெற்றிருக்கிறாயே! ஒரு வேளை, அழிக்கக் கூடிய காலம் தாண்டி விட்டதா? அல்லது, பயந்து விட்டாயா?'' என்று விசாரித்தான்.

அன்றிருந்த அதே தீ நாக்கு! அப்போது போலவே, நெருப்பைத்தான் உமிழ்கிறது!

காரில் போலவே, அப்போதும் அவளுள் ஒன்று நிமிர்ந்தது!

இவனும், இவனுடைய தாயும் இருக்கும் உலகில் வாழ்வதற்கே அவள் பயப்படவில்லையே! வேறு எதற்கு அஞ்சப் போகிறாள்?

வேண்டும் என்றே, அவன் பேச்சைத் தவறாகப் புரிந்து கொண்டவள் போன்று, ''எதற்கு? உங்களிடம் பணம்

கேட்பதற்கா? சொத்துக்காகவே உருவாக்கிவிட்டுப் பணம் கேட்க மட்டும் பயம் எதற்கு?" என்றாள் அவள், வெறுத்த குரலில், துடுக்காக!

மீண்டும் தலையசைத்து, "நான் அதைச் சொல்லவில்லை..." என்றவனை, ரஞ்சனி ஆத்திரத்துடன் இடை மறித்தாள்.

"பாருங்கள், நான் கூலிக்கு மாரடிக்கிற கூட்டத்தைச் சேர்ந்தவள்! உட்கார்ந்து உண்டு, உண்டது செரிக்க உருண்டு பழக்கம் இல்லை! நேற்று முழுவதும் வேலை ஏதும் செய்யாதது, கொஞ்சம் மந்தமாக இருப்பதால், நடந்தாலாவது நன்றாகும் என்று எண்ணி வந்தேன்! தயவு பண்ணி, வழியை விடுகிறீர்களா?" என்று பட்டென்று கை கூப்பிக் கேட்டாள்.

அவன் அசையாமல் நின்று இமையிடுக்கி நோக்கியதை அலட்சியம் செய்து, "அப்புறம் இன்னொன்று! என் மகன் ஊர் சுற்றிப் பார்க்கவென்று போயிருக்கிறான்! என்னைத் தேடி, அவன் இங்கே கூட வரலாம்! இப்போதே கூட வேண்டு மானாலும்! என் பிள்ளை உங்களைச் சந்திப்பதை நான் கொஞ்சமும் விரும்பவில்லை! அதனால், அவன் வரு வதற்குள் ப்ளீஸ்!..." என்று கூப்பியிருந்த கைகளாலேயே, அவனது வீடு செல்லும் வழியை, ரஞ்சனி காட்டினாள்.

சொல்லாலும் செயலாலும், இதைவிட இளக்காரத்தைக் காட்ட முடியாது!

நரேந்திரனுக்கும் கொஞ்சம் உறைத்தது போலும்!

குழப்பம் கலந்த பார்வையுடன், மீண்டும் தலையசைத்து விட்டு, ஆற்றுக்கு எதிர்ப் புறமாகச் சாலையை நோக்கிச் சென்றான் அவன்!

ஆத்திரம் அடங்க, ரஞ்சனிக்குச் சற்று நேரமாயிற்று.



கொஞ்சமும் கூசாமல், என்ன கேள்வி கேட்கிறான்!

நல்லவேளை! உலாவலுக்கு நந்தனை உடன் அழைத்து வரவில்லை!

இவனைப் பார்த்து, இந்தப் பேச்சையும் கேட்டிருந்தால், அவ்வளவுதான்! என்ன என்ன, ஏன் ஏன் என்று அவன் வேறு, அவளைத் துளைத்து எடுத்திருப்பான்!

இங்கே இருக்கும்வரை, இந்த உன்னதத் தந்தையை, நந்தகுமாரன் சந்தியாது இருப்பதே நல்லது! எல்லோருக்குமே!

ரஞ்சனி இப்படி ஆசைப்பட்டுக் கொண்டிருக்க, தாய் சொன்னதற்கெல்லாம் பதவிசாய்த் தலையாட்டிய அவ ளுடைய அருமை மகன் சென்றது, தந்தையைத் தேடியே!

எங்கே செல்கிறான் என்று தெரிந்தால், தாய் தடுத்துவிடக் கூடும் என்ற பயத்தில், அது பற்றி, அவளிடம் நந்தன் மூச்சுக்கூட விடவில்லை! பொழுது போவதற்காகச் சும்மா ஊர் சுற்றிப் பார்த்துவிட்டு வருவதாக மட்டும்தான், அவன் ரஞ்சனியிடம் சொல்லியிருந்தான்.

செல்லும் இடம் பற்றிய விவரமும் அவனுக்குச் சொல்லளவில் தெரிந்திருந்தது.

ரயில் நிலையத்திலிருந்து காரில் வருகையில், நந்தன் நந்தையிடம், பெற்றவனது இருப்பிடம் பற்றி விசாரித்து அறிந்து கொண்டிருந்தான்.

நரேனுடைய விருந்தாளியின் குத்தலின் பாதிப்பிலிருந்து தன்னைச் சமாளித்துக் கொள்வதில் ரஞ்சனி முழுமூச்சுடன் ஈடுபட வேண்டியிருந்ததால், மகனது கேள்வியையோ, நரேந்திரனின் பதிலையோ, அவள் கவனிக்கவே இல்லை!

எனவே நந்தன் தந்தையைத் தேடிப் போகக் கூடும் என்ற எண்ணமும் அவளுக்கு இல்லை!

அந்தச் சிற்றூரின் வாடகை மிதி வண்டி நிலையத்தில் இருந்த ஒரே சின்ன சைக்கிளை எடுத்துக் கொண்டு, நந்தகுமாரன் தந்தையின் வீட்டுக்குத்தான் சென்றிருந்தான்.

அந்தப் பகுதியில் எல்லோரும் அறிந்த இடமான பண்ணை வீட்டைச் சென்று அடைவது, நந்தனுக்குக் கடினமாக இருக்கவில்லை.

ஆனால், அம்மாவுக்கே தெரியாமல், ரகசியமாகச் சந்திக்கச் சென்ற தகப்பன் வீட்டில் இல்லை. எப்போது வருவான் என்று தெரியாது என்று அறிந்ததும், சிறுவனின் உற்சாகமும் பரபரப்பும், ஊசி குத்திய பலூனாக ஒன்றுமில்லாமல் வடிந்து போயின!

அடுத்துச் செய்யக் கூடியது, இங்கு வந்த அடையாளமே இல்லாமல், மீண்டும் அத்தைப் பாட்டி வீட்டுக்குத் திரும்பிச் சென்று விடுவதுதான்! தந்தையைத் தேடி வந்ததைத் தாய் அறிந்தால், இன்னொரு முயற்சி செய்யக்கூட முடியாமல் போகலாம்!

திரும்பி வரும்போது, சைக்கிளின் டயர் வேறு முள்ளோ ஆணியோ குத்திக் காற்று இறங்கி விட்டது.

அவனுக்குக் கண்ணீர் வராத குறைதான்!

வருத்தத்துடன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு சாலை ஓரமாக நடக்கும்போதுதான் அந்த ஒலி நந்தனுக்குக் கேட்டது!

கார் ஹாரனின் ஒலி! அதுவும், அவனுடைய தந்தையின் காரின் ஹாரன் ஒலி!

தலையைத் தூக்கி, வளைந்து நெளிந்து வரும் சாலையைக் கவனித்தால், அடுத்த வளைவுக்கே அந்தச் சிவப்புக் கார் வந்துவிட்டது!



சட்டென சைக்கிளை விட்டு விட்டுச் சாலை மத்திக்கு ஓடி, இரு கைகளையும் உயர்த்திக் கொண்டு நின்றான்!

சே! காரை நிறுத்துவது என்றால், இப்படியா? பிள்ளை வளர்த்திருக்கும் அழகு!

முழுப் பலத்தையும் கூட்டி, பிரேக்கை அழுத்தி மிதித்துக் காரை நிறுத்தினான் நரேந்திரன்.

விபத்தைத் தவிர்த்துவிட்ட போதும், அவனுக்கு உடல் குலுங்கி விட்டது!

ஆவலோடு அருகில் ஓடி வந்த சிறுவனின் உற்சாகம் கவனியாது, "என்ன முட்டாள்தனம்!" என்று அதட்டிவிட்டான்!

நந்தகுமாரனின் முகம் அப்படியே வாடிப் போயிற்று.

கூம்பிய முகத்துடன், "உங்களைப் பார்க்க வேணும் என்றுதான்ப்பா! காலையில், உங்கள் வீட்டுக்குப் போயிருந்தேன்! ஆனால், அங்கே நீங்கள் இல்லை! திரும்பி வரும்போது பார்த்தேன்! ஹாரன் சத்தம் கேட்டு, எட்டிப் பார்த்தேன்! நீங்களே வந்தீங்களா... அதான்! ஆனால்... ஆனால், அப்பா, உங்களுக்கும் என்னைப் பிடிக்கலியாப்பா? அம்மா மாதிரியே திட்டுகிறீர்களே!" என்றான் கண்கலங்க.

நரேந்திரனுக்கு ஒரு மாதிரியாகி விட்டது. "சேச்சே! அதெல்லாம் ஒண்ணும் இல்லைப்பா. கார் கொஞ்சம் பிரேக் பிடிக்காமல் போயிருந்தாலும், உன் மேல் மோதி, உனக்கு அடிபட்டிருக்குமே! அந்தப் பயம்தான்! நீ ஒதுங்கி நின்று கையைக் காட்டியிருந்தால் கூட, நான் காரை நிறுத்தியிருப்பேனே!" என்று விளக்கம் கொடுத்தான்.

சிறுவனின் முகம் பளிச்சென்று மலர்ந்த போதும், பையன் பேச்சில், நரேந்திரனுக்கு ஒன்று உறுத்தியது.

உங்களுக்கும் என்னைப் பிடிக்கலையா என்றல்லவா பையன் கேட்டான்! அம்மா திட்டுவதாகவும் சொல்கிறான். அப்படியானால், ரஞ்சனி, அவளுடைய சொந்த மகனையே வெறுக்கிறாளா? என்ன அநியாயம்! அப்படி வெறுப்பவள், ஏன் பெற்றுக் கொண்டாள்?

பையன் முகத்தில் ஏக்கத்தைக் கண்டவனுக்கு, ரஞ்சனி மீது ஆத்திரம் வந்தது.

கள்ளமில்லாத சின்னப் பிள்ளையைப் பெற்று வைத்துக் கொண்டு வெறுப்பதற்கு, அவனை உருவாக்காமல் விட்டிருக்கலாம்! அல்லது, கருவிலேயே அழித்திருக்கலாம்!

காரின் பக்கத்துக் கதவைத் திறந்து விட்டான். "ஏறிக் கொள்!" என்றான் நந்தனிடம்.

ஆவலாக ஏறி உட்கார்ந்தவன், உடனே, "ஐயையோ!" என்று மீண்டும் காரை விட்டு இறங்க முற்பட்டான்.

"என்னப்பா?"

"அதோ!" என்று, சற்றுத் தள்ளிக் கிடந்த சைக்கிளைக் காட்டினான் சிறுவன். "வாடகை சைக்கிள், அப்பா. அதைக் கடையில் கொண்டு ஒப்படைக்காமல் எப்படி வருவது? அம்மா திட்டுவாங்க!" என்ற பையனின் முகத்தில், ஏமாற்றம் அப்பியிருந்தது.

இதற்குத் திட்டுவது சரிதான் என்று உள்ளூர ஒப்புதல் அளித்தவனுக்குச் சிறுவன் வருந்துவதும் பிடிக்கவில்லை!

எனவே, காரை விட்டிறங்கிச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

பெரிய சைக்கிளில் வந்த ஒருவன், நரேந்திரனைப் பார்த்ததும், சைக்கிளை நிறுத்தி, இறங்கி வந்து, அவனுக்கு வணக்கம் தெரிவித்தான். "பண்ணைத் தம்பி சுகமா? சின்னையா எப்ப வந்ததுங்க?'' என்று மரியாதையுடன் கேட்டான்.



"நேற்றுத்தான். எனக்கு ஒரு காரியம் செய்ய வேண்டுமே, சிங்காரம்! இந்த சைக்கிள் சித்தூரில் எடுத்தது. சைக்கிள் கடையில் வண்டியை விட்டுவிட்டுப் போக முடியுமா? கட்டணம் எவ்வளவு ஆகிறதோ, கொடுத்துவிடு!" என்று ஓர் ஐம்பது ரூபாய் நோட்டை அவனிடம் நீட்டினான், நரேந்திரன்.

"இங்கல்லாம், இவ்வளவு ஆவாதுங்களே!" என்றவாறு பணத்தை வாங்கிக் கொண்டான் அந்த சிங்காரம்.

"மீதியை நீ எடுத்துக் கொள்!" என்று எதிர்பார்த்த பதில் வரவும், முகம் மலர, சின்ன சைக்கிளை ஒரு கையில் பிடித்தபடி, சந்தோஷமாக அவன் கிளம்பி விட்டான்!

நந்தனின் விழிகள் வட்டமாய் விரிந்தன. "என்னப்பா, நீங்கள்! ஐம்பது ரூபாயைத் தூக்கிக் கொடுத்து விட்டீர்களே! உங்கள் வீட்டுக்கு எதிரே, நான் காத்திருந்த நேரத்தையும் சேர்த்து, இரண்டு மணி நேரம்தான் ஆகியிருக்கும்! மொத்தம், மிஞ்சி மிஞ்சி ஐந்து ரூபாய்! சைக்கிளைப் பத்திரமாகக் கொண்டு வந்து கொடுத்து விட்டால், பணமே தர வேண்டாம் என்றுகூட, சைக்கிள் கடைக்காரன் சொன்னான்! நீங்கள், முழுதாக ஐம்பது ரூபாயைக் கோட்டை விட்டு விட்டீர்களே!" என்று, கார் கிளம்பியதும் புலம்பித் தீர்த்தான் பையன்!

"ஐம்பது ரூபாய்! அம்மாவுக்குத் தெரிந்தால், திட்டித் தீர்த்து விடுவார்கள்! ஊதாரித்தனம் வீட்டைக் கெடுக்கும் என்று, சொற்பொழிவு வேறு நடக்கும்!"

"சொற்பொழிவு மட்டும்தானா நடக்கும்? வேறு ஒன்றும் நடக்காதா?'' என்று அப்பாவி முகத்துடன் கேட்டான் நரேந்திரன்.

''ம்ம்ம்...'' என்று கண்ணை உருட்டினான் சிறுவன். ''இப்பல்லாம், அம்மா ரொம்ப அடிக்கிறதே இல்லைப்பா! ஆனால், நல்ல திட்டு விழும். என்னைத் திட்டி, அப்புறம் அம்மா அழுது... ஆனால் அடிக்க மாட்டார்கள்!''

''என்ன நீ? நான் என்னென்ன நடந்தது என்றுதானே கேட்டேன்?''

''அதுதான் சொன்னேனேப்பா! அவ்வளவுதான்! வேற ஒன்றும் நடக்காது!''

நம்பாத பாவனையுடன், ''நிஜமாகவா? ஆடு, மாடு, கோழி, கன்று ஒன்றுகூடவா நடக்காது? நம்ப முடியவில்லையே!'' என்றான் நரேந்திரன்.

திகைப்புடன் திரும்பிப் பார்த்துவிட்டு, கை தட்டிக் குலுங்கிக் குலுங்கி நகைத்தான் பையன். ''அப்பா, இது கடி ஜோக்காப்பா? பிரமாதம்ப்பா! நீங்கள் ரொம்ப ஜோராகப் பேசுகிறீங்க, அப்பா! எனக்கு உங்களை ரொம்பப் பிடித்திருக்குப்பா!''

எத்தனை 'அப்பா' போடுகிறான்! ரஞ்சனி இவனுக்குத் தகப்பனைக் காட்டவே இல்லையா? இன்னும் ஏதேனும் திட்டமா? அல்லது, பழைய திட்டத்தை விடவே இல்லையா?

ஆனால், அதற்கு இத்தனை ஆண்டுகள் காத்திருப்பானேன்?

ஏதோ நினைவில் முகம் கடுக்க, காரை ஸ்ரீவைகுண் டத்துக்குத் திருப்பியவாறு, ''உன் அம்மா சொல்லித்தானே, என்னைப் பார்க்க வந்தாய்?'' என்று, கீழ்க்கண்ணால் பையனைக் கூர்ந்தான்.

கண்களில் பயச் சாயையுடன், ''ஐயோ! அம்மாவுக்குத் தெரிந்தால், உங்கள் பக்கம் என்னைத் திரும்பக் கூட விட மாட்டார்கள், அப்பா! அதனாலே, ஊரைச் சுற்றிப் பார்க்கப்



போவதாகப் பொய் சொன்னேன்ப்பா! இல்லாவிட்டா, அம்மா என்னை உண்டு இல்லை என்று ஆக்கி விடுவார்கள்! அதனாலேயே, அம்மாவிடம் வழிகூடக் கேட்கவில்லை! நேற்று நீங்கள் சொன்னதை வைத்து, நானே கேட்டுக் கேட்டு வந்தேன். தயவு பண்ணி, நான் அங்கே வந்ததை நீங்களும் அம்மா கிட்டே சொல்லாதீங்கப்பா!'' என்று மிரட்சியுடன், சுற்றிலும் பார்த்தான் அவன்.

''பயப்படாதே! உன் அம்மா இங்கே வந்து விட மாட்டாள்!'' என்று நரேந்திரன் சிரித்தான்.

மெய்யாகவே, அவனுக்குச் சிரிப்பு வந்தது.

தகப்பன் இவன் என்று சொல்லி வளர்த்திருக்கும் ரஞ்சனி இந்தப் பக்கம் இவன் வீட்டுக்கு மகனை அனுப்பி விட்டு அந்தப் பக்கம் மகன் அவனைச் சந்திப்பதே பிடிக்காதவள் போல நடித்தாளோ என்ற ஐயம் நரேந்திரனுக்கு.

பொய் சொல்லவோ, நடிக்கவோ அஞ்சாதவள் ரஞ்சனி என்பது, அவன் அனுபவத்தில் அறிந்த உண்மை ஆயிற்றே!

ஆனால், இந்த விஷயம் அப்படி இல்லை என்று ஆனதாலோ, என்னவோ, அவனுக்குத் தகப்பன் என்று அழைக்கும் இந்தப் பையனோடு கூடத் தடையின்றிச் சிரிக்க முடிந்தது போலும்!

## 6

ஐஸ்கிரீம் பார்லரில், கார்னட்டோவையும் கஸாட்டாவையும் பையன் மிகவும் ரசித்து ரசித்து விழுங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்த நரேந்திரனுக்கு, ரஞ்சனியின் மீது ரொம்பவே கோபம் வந்தது.

சின்னப் பிள்ளை! சொந்த மகன்! இவனுக்கு இது போலெல்லாம் வாங்கிக் கொடுத்து மகிழாமல், என்னதான் பண்ணிக்கொண்டு இருக்கிறாள்?

அவளும் மெலிவாகத்தான் இருக்கிறாள்!

அணிந்திருக்கும் உடையும் சிறப்பாக இல்லை! நேற்று சுந்தரி பக்கத்தில், அலுங்கிக் கசங்கிய உடையில் எவ்வளவு சாதாரணமாகத் தெரிந்தாள்! பிள்ளை அணிந்திருப்பதும், சாதாரண டெரிகாட்டன்! அவ்வளவாகக் கசங்காது. லேசில் கிழியாமல் உழைக்கும் அவ்வளவே!

உண்ணாமல் உடுக்காமல், அப்படி என்ன, எதற்குச் சேர்க்கிறாளாம்?

அல்லது, அதற்குக் கூட, அவள் சம்பாதிக்கவில்லையா?

அப்போது பிளஸ்டூ முடித்துவிட்டு, தபாலில்தான் ஏதோ படித்துக் கொண்டிருந்தாள்.

ஒருவேளை... படிப்பை முடிக்கவே இல்லையோ? முடித்திருந்தாலும், நல்ல வேலை கிடைக்கவில்லையோ? வருமானம் சரியில்லாததால்... ஆசையை அடக்கி... பசியையும்கூட அடக்க நேர்ந்திருக்குமோ?

பையன் ஒல்லியாகத்தான் இருக்கிறான்! அவளும்கூட...

ஏதோ யோசனையில் மூழ்கியிருந்தவனின் கவனத்தை ஈர்க்க, சிறுவன் இருதரம் உரக்க அழைக்க வேண்டியிருந்தது.

அழைத்து, "ஐஸ்கிரீம் ரொம்ப நன்றாக இருக்கிறதுப்பா! நீங்களும் கொஞ்ம் சாப்பிடுகிறீர்களா?" என்று பேப்பர் தட்டை நீட்டிக் கேட்டான்.

மனம் உருகிட, லேசாக முறுவலித்து, "இல்லையப்பா! நீயே சாப்பிடு! இன்னும் வேண்டுமா?" என்று வினவினான் நரேந்திரன்.



ஒரு கணம் கண்களில் ஆசை மின்னியபோதும், மறுப்பாய்த் தலையசைத்து, "இல்லைப்பா! ஐஸ்கிரீம் நிறையத் தின்றால், நல்லதில்லைன்னு, அம்மா சொல்லி இருக்கிறாங் கப்பா! அதனாலே போதும்!" என்றான் நந்தகுமாரன்.

"அம்மா சொன்னபடிதான் எல்லாம் செய்வாயா?"

பதிலேதும் கூறாமல், பையன் தலையைக் குனிந்து கொண்டான்.

"என்னப்பா, என்ன விஷயம்? அம்மா பேச்சுக் கேட்பதில்லையா?"

"பின்னே என்னப்பா? உங்களைப் பற்றிக் கேட்கவே கூடாது என்றால் எனக்குக் கோபம் வராதா? இப்போ எனக்கு, இன்னும்கூடக் கோபம்! இவ்வளவு நல்ல அப்பாவாக இருக் கிறீர்கள். உங்களை இதுவரை பார்க்கவே விடவில்லையே! நான் மட்டும், இந்த அம்மா என்ன சொன்னாலும், கேட்க வேண்டுமா?" என்று, அழுத்தத்துடன் கேட்டான் நந்தன்.

இவனிடம் என்னவென்று விளக்குவது?

சற்று யோசித்துவிட்டு, "நீ சின்னப் பையன், நந்தகுமார், பெரியவர்கள் விஷயம் சிலது உனக்குப் புரியாது, கொஞ்சம் பெரியவன் ஆன பிறகு அதெல்லாம் சொல்லலாம் என்று உன் அம்மா நினைத்திருக்கலாம்! இந்த வயதில்... ஏன், எந்த வயதிலும் தாயின் சொல்லைக் கேட்டு நடப்பதுதான் நல்லது. மீறி நடந்தால், கடைசியில் நமக்குத்தான் துன்பமாகி விடும்!" என்று, எடுத்துச் சொல்லிவிட்டு, எதையோ நினைத்துப் பெருமூச்சு விட்டான் நரேந்திரன்.

"ஆனால், உங்களைப் பார்க்கக் கூடாது என்கிறாங்களே! அதை எப்படிப்பா கேட்கிறது?" என்று ஆத்திரப்பட்டான் பையன்.

இவனுக்கு என்னவென்று பதில் சொல்வது? தன்னாலும் கூட, இவனை அடிக்கடி வந்து சந்திக்க முடியாது என்று, எப்படிப் புரிய வைப்பது?

முதலில், இவன் 'அப்பா, அப்பா' என்பதே குழப்பத்தை ஏற்படுத்திவிடக் கூடும்.

என்ன சொல்லி, எப்படி விளங்க வைப்பது? இப்படித் தந்தை முறை வைத்து அழைக்காதே என்றாலே, இந்தப் பிள்ளை உடைந்து விடுவான் போல இருக்கிறதே!

தர்ம சங்கடமான நிலையை அவனுக்கு ஏற்படுத்தி விட்டாளே என்று, ரஞ்சனி மீது, நரேந்திரனுக்குக் கோபம் வந்தது!

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தச் சமயம் பார்த்து ஊருக்கு வந்தது வேறு!

எத்தனையோ ஆண்டுகளாகத் தாயார் வருந்தி வருந்தி அழைத்தும், நரேந்திரன் ஊர்ப் பக்கம் வந்ததே இல்லை. பெற்றவள் பெரிதும் வருத்தப்படுகிறாளே என்று மனம் இளகியிருந்ததோடு, சில நிலப் பிரச்சினைகளும் அவனே நேரில் பார்க்க வேண்டிய அளவுக்கு அப்போது தலை தூக்கியிருந்தன. இதையும் பார்க்கலாம், கூடவே அம்மாவுக்கும் திருப்தியாக இருக்கும் என்று ஒருவாறு மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு வந்தால், இப்போதுதான், இவளும் இங்கே வந்தாக வேண்டுமா?

மனம் மீண்டும் குட்டையாகக் குழம்பி விட்டதே! இன்னும் எத்தனை நாட்கள் இங்கேயே இருந்து, மீண்டும் அவனை நாசமாக்கப் போகிறாள்?

பூனைக்குட்டி உரசுகிற மாதிரி உரசிக்கொண்டு, "அப்பா, எனக்கு உங்கள் பக்கத்திலேயே இருக்க வேண்டும் என்று



ஆசையாக இருக்கிறதுப்பா!" என்று சிறுவன் ரகசியம் பேசவும், அதற்கு மேல், அவனால் தாங்க முடியவில்லை. எழுந்து விட்டான்.

"என்னப்பா?" என்ற பிள்ளையின் திகைத்த தோற்றத்தை, எப்படியோ போய்த் தொலைகிறான் என்று அலட்சியம் செய்யவும் அவனால் முடியவில்லை.

இந்த நிலைக்குக் காரணமான ரஞ்சனி மீதுதான் மீண்டும் அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. எல்லாக் கஷ்டங்களும் இருக்கட்டும். இப்போதைக்கு, இதிலிருந்து எப்படி மீள்வது?

"உன்னை அம்மா தேடுவாள் இல்லையா? அத்தோடு, எனக்கும் எவ்வளவோ வேலை இருக்கிறதே."

நரேந்திரன் சொன்னது புரிந்தவன் போல, அதற்கு மேல் நந்தன் தயக்கம் காட்டவில்லை. எழுந்து, "ஐஸ்கிரீமுக்கு ரொம்ப நன்றிப்பா!" என்று முறைப்படி நன்றி தெரிவித்தான்.

மறுபடியும் மனம் நெகிழ, "உனக்கு என்ன மாதிரி உடை பிடிக்கும், நந்து?" என்று வினவியவாறே, நரேந்திரன் ஐஸ்கிரீம் பில்லுக்குப் பணத்தை எடுத்துக் கொடுத்தான்.

தகப்பனோடு ஒட்டி நடந்தவாறே, "தீபாவளிக்கு முழு ஜீன்ஸ் வேணுமின்னு அம்மாவிடம் கேட்டேன்ப்பா! ஆனால், சீக்கிரமே குட்டையாகி, வீணாகிப் போகும்னு சொல்லி, அம்மா வாங்கித் தரலை! என் சினேகிதர்கள் எல்லாரிடமும் ஜீன்ஸ் இருக்குதுப்பா! மற்றவர்களுக்குத் தம்பி, தங்கை இருப்பதால், சின்னதாகிப் போனாலும் அவர்களுக்குப் போடலாமாம்! அதனால், வாங்கியிருக்கிறார்கள் என்கிறார்கள். அப்படியானால், அம்மாவும் அவர்களைப் போலச்

சாமியிடம் போய், இன்னொரு பாப்பா வாங்க வேண்டியதுதானே? சொன்னால், அம்மா கவனித்துக் கேட்பது கூட இல்லை!" என்று பிள்ளை புகார் பட்டியல் படிக்க, தன்னை மீறி முகம் கறுக்க, ஒன்றும் சொல்லாமல், சும்மா நடந்தான் பெரியவன்.

இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல, ரஞ்சனிக்கும் சிரமமாகத்தான் இருந்திருக்கும்!

புத்திசாலித்தனமான கேள்விகள் வேறு.

துறுதுறுப்பான பையன்! கெட்டிக்காரனாகவும் தோன்றுகிறான். பேச்சுவாக்கில் வீட்டைப் பற்றிக் கேட்டு, தேடி வரவும் செய்துவிட்டானே!

பார்வதி அம்மாள் வசித்த சித்தூரின் எல்லையிலேயே பையனை இறக்கி விட்டுவிட்டுப் போகத்தான் நரேந்திரன் முதலில் எண்ணினான். ஆனால், சிறுவனை அவனோடு பார்த்த யாரேனும், ரஞ்சனியிடம் போய்ச் சொல்லக் கூடும். அப்போது, அவளுக்கு மறைத்துச் செய்ததாகத் தோன்றுமே என்ற எண்ணத்தில், வீட்டுக்கே கூட்டி வந்தான்.

வீட்டின் வெளியே இருந்த பைக்கும், சைக்கிளும் உள்ளிருந்து கேட்ட அவுட்டுச் சிரிப்புகளும், அவன் முகத்தைக் கடுக்க வைத்தன!

காரிலிருந்து நந்தன் இறங்கிக் கொண்டிருந்தபோதே வீட்டுக்குள்ளிருந்து, டாக்டர் உதயமூர்த்தியும், இன்னொருவனும் வெளியே வந்தனர்.

இருவரும் சற்றுத் திகைத்தாற்போல நிற்க, நரேந்திரன் தானும் இறங்கி "என்ன டாக்டர், சிரிப்புச் சிகிச்சையா? ஊரே அதிர்கிறதே!" என்று கிண்டலாக வினவினான்.



ரஞ்சனியும், அவளுடைய கணவனும் பிரிந்துவிட்டது ஊர் அறிந்த விஷயம்! இன்றைக்கு அவள் இருக்கும் வீட்டு வாயிலில் நிற்கிறான் என்றால், நிலைமை வந்திருந்த இருவருக்குமே புரியாத நிலை! நல்லதாக மாறக் கூடுமோ என்ற நலம் நாடும் ஆவலும் அவர்களுக்கு இருந்தது.

எனவே, வாய் தவறி எதையாவது சொல்லி, சீராகும் உறவைக் கெடுத்து விடக் கூடாதே!

சொல்வது அறியாமல் இருவரும் தடுமாறுகையில், அவர்களை வழியனுப்பவென்று பின்னோடு வந்த ரஞ்சனி, கணவனுக்குப் பதில் சொன்னாள். "வாய் விட்டுச் சிரித்தால், நோய் விட்டுப் போகும் என்பது பழமொழி! அநியாயமாய் அழ வைத்து, உள்ள ஆரோக்கியத்தையும் கெடுப்பவர்கள் பெருகி வரும் இந்த நாளில், சிரிக்க வைத்துக் குணப்படுத்துகிறீர்களே, உதயண்ணன்! என் பாராட்டுகள்!" என்றாள் அவள்.

"புரையோடிவிட்ட புண்களைச் சிரித்துக் குணப்படுத்த முடியாது! வலிக்க வலிக்க, அறுத்துத்தான் ஆக வேண்டும்! வேதனைக்குப் பயந்தால், உயிரே போய்விடும்! அப்படித்தானே, டாக்டர்? நான் சொல்வது சரிதானே?" என்று விடாமல் கேட்டான் நரேந்திரன்.

பேச்சு வேறு எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது என்பது புரியாத மக்குகள் அல்ல, வந்தவர்கள்! ஆனால், என்னதான் பிரிந்து இருந்தாலும், கணவன் மனைவிக்கிடையே குறுக்கிடுவது சரியல்லவே! அவர்களுக்குள் என்ன நடந்ததோ? மணமான முப்பதே நாட்களில், ஆளுக்கொரு திசையாகப் பிரிந்து சென்றது மட்டும்தான் எல்லாருக்கும் தெரியும்.

ஆயினும், நேரடியாகக் கேட்டுவிட்டதால், "அது... புண்ணைப் பொறுத்தது..." என்று தொடங்கி, உதயமூர்த்தி தடுமாற, ரஞ்சனி குறுக்கே புகுந்தாள்.

"உதயண்ணன், இதுவரை இங்கே ஒரே வைத்தியராக இருந்து நடத்திய தனிக்காட்டு ராஜ்யம் குளோஸ்! இதோ, இன்னொரு மருத்துவரும் வந்தாயிற்று! ஆனால்.. ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்பார்கள்! அப் படியானால், முழு வைத்தியன் ஆவதற்கு, இரண்டாயிரம் பேரைக் கொன்றிருக்க வேண்டுமே! முழுசாய்க் கொல்வது எப்படியோ? ஆனால், குற்றுயிரும், குலையுயிருமாய் விடப்பட்ட ஒருவரைப் பற்றி எனக்குத் தெரியும்! அதனால், இவர் வைத்தியர்தான் என்பதும், எனக்கு நிச்சயம்!" என்றாள் ரஞ்சனி விழிகளில் ஆத்திரப் பளபளப்புடன்.

உரையாடல் அபாயகரமாகப் போவதை உணர்ந்து, "அப்போது, நான் கிளம்புகிறேன், ரஞ்சனிம்மா! நேரம் கிடைக்கிறபோது, நம்ம கடைக்கு ஒரு தரம் வந்து விட்டுப் போ! வேண்டியதை எடுத்துக் கொள்ளுகிறதோடு, கடையிலே இன்னும் என்ன பண்ணலாமின்னு, எனக்கு யோசனையும் சொல்லு! இப்ப போய் வரட்டுமா?" என்று எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு, ஜவுளிக் கடைப் பெருமாள் சைக்கிளில் கிளம்பினான்.

இன்னொரு நோயாளியை வீட்டில் போய்ப் பார்க்க வேண்டும் என்று; உதயமூர்த்தியும் நில்லாமல் நழுவி விட்டான்.

அவன் செல்வதைப் பார்த்துவிட்டு, "அழகான பெண்கள் கூட, அடுத்தவரை அரை உயிர் ஆக்குவதில் வல்லவர்கள்தான். உதாரணம் வேண்டுமானால் தரட்டுமா? ஆனால், சொல்லத்



தேவையே இல்லாமல், உன் சக்தி பற்றித்தான் உனக்கே தெரியுமே!" என்றான் நரேந்திரன் கிண்டலாக! ஆனால், இப்போது வந்து, சிரித்து மகிழ்ந்துவிட்டுப் போனவர்களுக்குத் தான் கொஞ்சமேனும் தெரியுமோ, என்னவோ, பாவம்!" என்றான் தொடர்ந்து.

நாராசம்போல நாக்கில் நரம்பே இல்லாமல் என்னமாகப் பேசுகிறான்!

வெறுப்புடன் திரும்பியபோது, வெகு தூரத்தில் வள்ளியம்மை ஆடி ஆடி வந்து கொண்டிருப்பது, ரஞ்சனியின் பார்வையில் பட்டது.

அவள் மட்டும் நரேந்திரனை இங்கே பார்த்துவிட்டால், வேறு வினையே வேண்டாம்!

வீட்டு மாப்பிள்ளையை உள்ளே அழைத்து விருந்து உபசாரம் செய்யாமல் விடவே மாட்டாள்!

அவளது வயதான கண்கள் அருகில் வந்து, அடையாளம் காணுமுன், இவனை அனுப்பியாக வேண்டும்.

"உங்களுக்கு எத்தனையோ வேலைகள் இருக்கும். அதை விட்டு, அனாவசியமாக இங்கே எதற்காக வரவேண்டும்? வீட்டில் விருந்தாளி வேறு!" என்று அவனை விரட்ட முயன்றாள்.

"நந்தகுமாரை வழியில் பார்த்தேன். சரி, வீட்டில் கொண்டு விட்டுவிட்டுப் போகலாமே என்று அழைத்து வந்தேன்!" என்று விளக்கம் கொடுத்தான் நரேந்திரன்.

உன்னைப் பார்க்கும் ஆவலில் வந்துவிடவில்லை என்று தெளிவு படுத்துகிறானாக்கும்!

''ஊரார் பிள்ளைகளுக்கு உபகாரம் செய்யும் பணி யெல்லாம் தொடங்கி யிருக்கிறீர்கள் போல! செய்த பாவங்களுக்குக் கழுவாயா?'' என்றாள் குத்தலாக.

''பாவம் செய்தால்தானே பிராயச்சித்தம் செய்ய வேண்டும்?'' என்றான் அவன் பதிலுக்கு. ''தெரிந்தவர்கள் பையன்! தொலைந்து போனால், வருந்துவார்களோ என்று நினைத்தது கூடத் தப்பு போலத் தெரிகிறதே!''

அவள் வருந்துவாளே என்று அழைத்து வந்தானாமா? கொதித்துக் கொண்டு வந்தது அவளுக்கு. ''அடுத்தவர் வருத்தம் பற்றி, இவ்வளவு அக்கறை என்றால், நம்பவே முடியவில்லையே...'' என்று ஏளனமாக மொழிந்தவள், பெற்றவர்களின் பேச்சைப் புரிந்துகொள்ள முயன்றவாறு, மாறி மாறி இருவரின் முகங்களையும் பார்த்துக்கொண்டு நந்தன் நிற்பதைக் கவனித்தாள்.

இந்தப் பேச்சு வார்த்தையில், நந்தனுக்கு என்னென்ன புரிந் திருக்கும்? என்னென்ன கேள்வி கேட்டுத் தொணதொணப்பான்?

''சுற்றி முடித்தாயிற்று என்றால், போய்க் கைகால் கழுவு! சும்மா நின்று, பெரியவர்கள் பேச்சை வாய் பார்க்காதே!'' என்று கண்டிப்பான குரலில் கட்டளையிட்டு, அவனை உள்ளே அனுப்ப முயன்றாள்.

அதட்டலுக்குப் பணிந்து, மகன் உள்ளே போக வேண்டுமே என்றிருந்தது அவளுக்கு! பழைய நந்தன் என்றால் அப்படிக் கவலைப்படத் தேவையே இராது! இப்போதைய பிள்ளை, அப்படியில்லையே!

அவள் உள்ளூரப் பயந்தது போலவே, நந்தகுமாரன் வீட் டினுள் செல்ல மனமின்றித் தந்தையை அண்ணாந்து பார்த்தான்.



அவனது தலையில் கை வைத்து, ''போம்மா! அம்மா சொல்லுகிறார்கள் இல்லையா? வாழ்க்கையில் மீறக் கூடாத ஒன்று உண்டு என்றால், அது அம்மாவின் வார்த்தைதான்! அதைத் தட்டி நடப்பவர்கள் நிச்சயமாகக் கஷ்டப்படுவார்கள்! அதனால், இப்போதே, அம்மாவுக்குப் பணியக் கற்றுக்கொள்! மற்றவர்களைப் போலப் பட்டுத் தெரிந்து கொள்ள வேண்டாம்!'' என்று புத்தி சொன்னான் தந்தை.

அதாவது, தன்னைப் போலப் பட்டுத் தெரிந்து கொள்ளக் கூடாதாம்!

பெற்றவளின் பேச்சைக் கேளாமல், பிடிவாதம் பிடித்து, ரஞ்சனியை மணந்து, நரேந்திரன் பெரும் இடும்பைக்கு ஆளாகி விட்டானாம்!

அவனைப் போல, நந்தனும் நடந்து, துன்பப் படக் கூடாதாம்!

என்ன மாதிரிப் புத்திமதி!

ஆக, அன்றையக் கீழ்ப் படியாமையை ஈடு கட்டத்தான், இப்போது தாயின் சொல்படி விவாகரத்து நோட்டீஸ் அனுப்பியாகிறதா?

பெற்றவள் உள்ளூரப் பொருமிக்கொண்டு இருக்கையில், மீண்டும் ஒரு தரம் தந்தையின் பார்வையைச் சந்தித்துவிட்டு, நந்தகுமாரன் வீட்டினுள் சென்றான்.

பொருமிப் புகைந்து கொண்டிருந்த ரஞ்சனி, இந்தப் பார்வைப் பரிமாற்றத்தைக் கவனியாது, ''அப்படி அன்னைக் குப் பணிந்ததால்தான், அந்த நோட்டீஸ் வந்ததா?'' என்று ஒரு மாதிரிக் குரலில் நரேந்திரனிடம் கேட்டாள்.

''எனக்குச் சுய மூளையே இல்லை என்று எண்ணமா? முப் பத்து மூன்று வயதிலுமா, சரியான முடிவெடுக்க முடியாது?''

அதாவது, இருபத்து மூன்று வயதில் அவளை மணக்க முடிவெடுத்தது தப்பாம்!

அத்தோடு, இந்த மண விலக்கு முடிவும், இவனாக எடுத்ததுதான்! பெயரளவில், அவளுடைய கணவனாக இருப்பதுகூட, இப்போது நரேந்திரனுக்குப் பிடிக்கவில்லை!

அவளைக் கை கழுவத் துடிக்கிறான்! அதை அவளுக்கும் தெளிவாகவே தெரிவிக்கிறான்! குத்திக் குத்தி, என்னமாகப் பேசுகிறான்!

எதிரில் நின்ற கணவன் தன் தவிப்பை அறிந்துவிடாமல் தடுக்க, ரஞ்சனி வெகுவாக நடிக்க வேண்டியிருந்தது.

## 7

மீண்டும், அன்று இரவும், ரஞ்சனியால் நன்கு உறங்க முடியவில்லை!

இந்த ஊருக்கு வந்தது பெரிய தப்போ என்று அவளுக்குத் தோன்றியது.

இல்லையில்லை! அதைத் தப்பு என்று சொல்வதுதான் தப்பு! அவள் அனாதையாக நின்றபோது ஆதரவு கொடுத்த அத்தை, உடம்பு சரியில்லை வா என்று அழைத்த பிறகு, வராமல் இருந்திருந்தால், அதுதான் பெரிய தப்பாக இருந்திருக்கும்.

செய்ந்நன்றி கொன்ற பிழை!

பிரச்சினை இங்கே வந்ததில் இல்லை!

முன்னேயும் இருமுறை வந்துதானே இருக்கிறாள்!



அப்போதெல்லாம் இந்தப் பக்கம் எட்டிப் பாராமல் இருந்த நரேந்திரன் இந்தச் சமயம் பார்த்து இங்கே வந்திருக்கிறானே, அதுதான் பிரச்சினையாகி விட்டது!

எந்தத் தகப்பனை மறக்க வேண்டும் என்று, மகனை ஊர் விட்டு அழைத்து வந்தாளோ, அந்தத் தகப்பனை அவன் தினமும் பார்க்க நேரும்படி ஆகிவிட்டதே!

எவனை மறப்பது அவளுக்கு நல்லதோ, அவனைத் தினமும் சந்திக்க வைத்து, மனதை மேலும் ரணமாக்கித் துடிக்க வைக்கிறதே, அந்த விதியைத்தான் நொந்து கொள்ள வேண்டும்!

வார்த்தைகளால் என்னமாய்க் குத்திக் கிழிக்கிறான்!

ஏன் மாட்டான்? அந்தக் கலையில்தான், அவன் மகா வல்லவன் ஆயிற்றே!

ஏற்கெனவே ஒரு தரம் வார்த்தைகளால் அவளைக் கொல்லாமல் கொன்றவன் அல்லவா?

என்ன வார்த்தை சொன்னான்!

நந்தனை - அப்போது அவளது வயிற்றுச் சிசுவாக இருந்தவனை - அவனுடைய பிள்ளை இல்லை என்று விட்டானே!

அந்தக் கொடிய வினாடிகளை என்றேனும் மறக்கக் கூடுமா?

அவனுடைய தாய் சொன்ன மாதிரி, அப்போதே அவன் முடிவு செய்து விட்டான் -

சாதாரண நிலையில் உள்ள ஒரு அனாதைப் பெண்ணை, அவன் தாயாரின் மொழியில் சொல்வது என்றால், கூலிக்கு

மாரடிப்பவளை, கண நேர மயக்கத்தில் மணந்தது தப்பு என்று உணர்ந்து, அவளைத் தன் வாழ்வை விட்டு விரட்டியே ஆக வேண்டும் என்ற முடிவு செய்திருக்கிறான்!

பல பேர் பார்க்கத் தாலி கட்டித் திருமணம் செய்து கொண்டவளை, அப்படி எளிதில் கை கழுவிவிட முடியாதல்லவா?

அதனால் சொல்லத் தகாத அபாண்டப் பழி சொல்லி, மிரட்டி ஓட வைத்தான்! வார்த்தைகளால் அவளைக் கொல்லாமல் கொன்றானே!

இந்த அழகில், அவளல்லவா, அவனை அரை உயிராக்கி னாளாம்!

அவனால் அவள் சாகாமல் இருந்ததல்லவா, அதிசயம்! நந்தன் மட்டும் இல்லை யென்றால், அவளைப் புதைத்த இடத்தில், இப்போது புல்... புல்லென்ன, பெரிய மரமே வளர்ந்து, கப்பும் கிளையுமாக நின்று கொண்டிருக்கும்!

படுத்திருக்க மாட்டாமல் எழுந்து சென்று, நந்தனின் அருகே போய் அமர்ந்தாள்.

நிலவின் ஒளி முற்றத்தின் வழியே கசிந்து வந்து, நந்தனின் முகத்தை ஓரளவு தெளிவாகவே காட்டியது.

ஆனால், வழக்கமான ஆறுதல் உண்டாக மறுத்தது. இதுவரை, மனம் கலங்கும் சமயங்களில், எனக்கு என் மகன் போதும் என்று எண்ணித் திடம் கொள்வாளே, அது இப்போது முடியவில்லை.

அவளுடைய மகனுக்குத் தந்தை அல்லவா பெரிதாகத் தோன்றுகிறான்!

அவனைத் தன் பிள்ளையே இல்லை என்று சொன்ன தந்தை!



உள்ளூரப் பரிதாபம் மேலிட, மகனை மெல்ல வருடினாள்.

தூக்கம் லேசாகக் கலைந்து புரண்டு படுத்தவன், "அப்பா, இந்தக் காரிலே..." என்று ஏதோ முனகவும், நெஞ்சு பதறக் கையை இழுத்துக் கொண்டு எழுந்து விட்டாள்.

மகனது கனவிலும் அவனா? இது எங்கே போய் முடியக் கூடும்? அவளது உள்ளம் உடைந்தது போல, மைந்தனின் மனமும் நொறுங்கிப் போகுமா?

மனங்களை உடைப்பவனிடம் அன்பு வைத்தால், அப்படித்தானே ஆகும்?

மீண்டும் படுக்கப் பிடிக்காமல், பின் கதவைத் திறந்து கொண்டு, வெளியே சென்று, கிணற்றடி துவைக்கிற கல் மீது அமர்ந்தாள். மனம் கலைகிறபோது, அவ்வப்போது அமர்கிற கல்தான்! பெற்றோரின் ஏக்கத்தில்... பிறகு...

பழைய நினைவுகள் முட்டி மோதிக் கொண்டு மனத் திரையில் குழுமின.

பண்ணை வீட்டில் அன்று கணக்கை எழுதிக் கூட்டல் கழித்தல்களைச் சரி பார்த்துக் கொண்டிருந்தபோது, சாண்டல் களைக் கழற்றாமலே உள்ளே வந்த நீளக் கால்களைத்தான், ரஞ்சனி முதலில் கவனித்தது!

பொதுவாகப் பண்ணை வீட்டுக்குள் யாரும் செருப்புப் போட்டுக் கொண்டு வருவதில்லை! அவ்வளவு மரியாதை!

அதிலும், கணக்கெழுதும் அறையில் சுவாமி படங்கள் வேறு இருக்கும்! எனவே, தலை தூக்கிப் பராமலே, "காலணியை வெளியே கழற்றி வைத்துவிட்டு உள்ளே வர வேண்டும்!" சற்றுக் கண்டிப்பான குரலில் கூறியவள், தொகையைக் கூட்டுவதிலேயே தீவிரமாக ஈடுபட்டிருந்தாள்.

இடையில் விட்டுவிட்டால், மறுபடியும், முதலிலிருந்து கூட்ட வேண்டுமே!

திடுமெனக் கணக்குப் புத்தகத்தில் நிழல் விழுகிறதே என்று பார்த்தால், அவன் அவ்வளவு அருகில் வந்து நின்று கொண்டிருந்தான்!

மிரண்டு போய் எழுந்து, "ஏ.. யா.. யார் நீங்கள்? மமரியா.. தையாக வெளியே போகா விட்டால், ஆட்களைக் கூப்பிடுவேன்!" என்று அவனை மிரட்ட முயன்றாள்.

"ஆட்களை நீயென்ன கூப்பிடுவது? நானே வரச் சொல்லுகிறேன்!" என்றுரைத்து விட்டு, "மாரிமுத்து, வைகுண்டம், கென்னடி... எல்லாரும் இங்கே வாருங்கள்!" என்று அதிகாரமாக அழைத்தான் அவன்.

விழிகள் வட்டமாக அகல விரிய, அவள் திகைத்து நிற்கையிலேயே, அவன் அழைத்தவர்களில் இருவர் வேகமாக ஓடி வந்தனர். "அய்யா, கென்னடி கடைக்குப் போயிருக் கிறாங்க! அவன் வந்ததும் வரச் சொல்லட்டுங்களா?" என்று விளக்கமும் கொடுத்து வினவினர்.

கேள்வியாய்ப் புருவத்தை ஏற்றி இறக்கி, "கென்னடி கடைக்குப் போயிருக்கிறானாமே, என்ன செய்வது? அவனை அப்புறமாகக் கூப்பிட்டுக் கொள்ளலாமா?" என்று அவன் கண்ணில் சிரிப்புடன் கேட்கவும் ரஞ்சனிக்கு மிகவும் வெட்கமாக இருந்தது.

வீட்டு எஜமானனை, வேலையாட்களைக் கொண்டு விரட்டப் போவதாக மிரட்டியிருக்கிறாள்! என்ன மடத்தனம்!

நல்ல வேளையாக, அவன் வேடிக்கையாக எடுத்துக் கொண்டிருக்கிறான்!



அவன் மட்டும் கோபப் பட்டிருந்தால், அவளது வேலையே போயிருக்குமே!

பிறகும்கூட, அவன் கோபப்பட்டு விடக் கூடாதே என்று, "எனக்கு நீங்கள் யார் என்று தெரியாது சார்!" என்று தடுமாறியபடியே மன்னிப்புக் கேட்டு முடித்தாள்.

நரேந்திரனோடு, ரஞ்சனியின் முதல் சந்திப்பு அது!

அந்த முதல் சந்திப்பே, அவள் மன்னிப்புக் கேட்பதில்தான் முடிந்திருக்கிறது என்பதையே உணராமல், அந்தச் சந்திப்பை நினைத்து நினைத்து மகிழ்ந்தாளே! அவனிடம் மன்னிப்புக் கேட்கும் அளவுக்கு அவள் கீழிறங்கி விட்டது பற்றி எண்ணவே, அவளுக்குத் தோன்றவில்லை.

இன்னும் கீழாக இறங்கக் கூடுமோ என்ற யோசனையும் வரவில்லை.

ஆனால், ஈர்ப்பு அவளுக்கு மட்டுமாக இல்லை!

மறுநாள் வீட்டுக்குத் திரும்புகிற வழியில், நரேந்திரன் வந்து காத்திருக்கவும், அவளுக்கு உச்சி குளிர்ந்து போயிற்று.

அதனால்தான், அவ்வளவு விரைவில், நீராகக் கரைந்து விட்டதோ?

யார் என்ன என்று விவரம் கேட்டான்.

அவனிடம் பேச, அவளுக்கும் தயக்கமே தோன்றவில்லை.

அவனும் எந்த விதத் தயக்கமும் இன்றி, அவனைப் பற்றிய விவரங்களை எல்லாம் சொன்னான்.

வீட்டுக்குத் தேவையான தானியங்கள் பயிரிடுவது தவிரப் பல ஆண்டுகளாக, இங்கே பெரும்பான்மை நிலங்களைக் குத்தகைக்கு விடுவது என்று ஆகிவிட்டதாம்! அதை மாற்றிப்

பயிர்த் தொழிலைக் கைக் கொள்ளுவதற்கு உரிய படிப்பை அவன் படிக்கவில்லையாம். அதனால், சில நண்பர்களோடு சேர்ந்து, அடிப்படை எலக்ட்ரானிக் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று தொடங்கப் போகிறானாம்!

பெரிய நிறுவனம் ஒன்றில், அவனும் நண்பர்களும் பயிற்சி எடுத்து முடித்து விட்டார்களாம்! அவனுடைய தாயார் சகுந்தலாதேவிக்கும் இது சம்மதம்தானாம். ஆனால், அரசின் சிறு தொழில் நிறுவனத்தில் கடன் வாங்கித் தொழில் நடத்துவதில், அவளுக்கு விருப்பம் இல்லையாம்! இங்கே சும்மா துருப்பிடித்துக் கிடக்கும் பணத்தைப் பயன்படுத்திக் கொள்ளச் சொல்லுகிறாளாம் அன்னை! மற்ற இரு நண்பர்கள் வீட்டிலும் இதே எண்ணம்தான்.

தொழில் நன்கு வளர்ச்சி அடையுமுன், அதிலிருந்து கடனை அடைக்கப் பணம் எடுத்தால், தொழில் வளர்ச்சி அவ் வளவு வேகமாக இராதாம்! அத்தோடு, வீட்டில் பணம் இருக்கும் போது கடன் வாங்குவானேன் என்பது, தாயின் வாதம்!

சரி என்று பணம் வாங்கிப் போகத்தான் வந்திருக்கிறான்.

தொழிலைத் தொடங்கி விட்டால், அதன் பிறகு, விருப்பம் போல அலைய முடியாதல்லவா? அத்தோடு, படிப்பு முடிந்த பின், தொழில் பற்றிய பேச்சு வார்த்தையை ஒரு நிலைக்குக் கொண்டு வரும் வரை, சென்னையிலேயே இருந்து விட்டானாம். தொழிலைத் தொடங்கி விட்டாலும், கொஞ்ச காலம், அங்கே இங்கே என்று சுற்ற முடியாது! எனவே, இந்த முறை, தொடர்ந்து கொஞ்ச நாள் தங்கியிருந்துவிட்டுப் போகப் போகிறான்.

"எவ்வளவு நாட்கள்?" என்று பயந்துகொண்டே கேட்டாள் அவள்.



"அங்கே, தொழிலுக்கு, அரசிடம் அனுமதி, இடம் பார்த்து அடித்தளம் அமைப்பது போன்ற வேலைகளை நண்பர்கள் செய்து முடிப்பதற்குச் சுமார் இரண்டு மாதங்கள் ஆகும். அதுவரை இங்கேதான் இருப்பேன்!" என்றான் அவன்.

"அப்பாடி!" என்று அவள் மனதை மறையாது பெருமூச்சு விட, கண்டு கொண்டு அவன் சிரிக்க, ரஞ்சனியின் முகம் ரோஜாப்பூ ஆனது!

ஒற்றை விரலால் அவள் கன்னத்தைத் தொட்டு, இன்னமும் சிவக்க வைத்தான், அவன்.

ஒருவருக் கொருவர் ஈடுபாட்டை ஒத்துக் கொள்ள, இருவருக்குமே நான்கு நாட்கள்தான் தேவைப்பட்டன! அவ்வளவு வேகம்! அவ்வளவு ஆவல்!

அவளுக்கும்கூடத் தயக்கமே தோன்றவில்லை. அந்த அளவுக்கு முதல் பார்வையிலேயே மனதைப் பறி கொடுத்திருந்தாள் ரஞ்சனி.

வேலை நடுவே, குறுக்கே நெடுக்கே வந்து, அவள் கவனத்தை அவன் ஈர்ப்பதில்லை. ஏனெனில், கவனம் கலைவதால் ஏற்படும் பிசகுகளைச் சரி செய்து முடித்து, அவள் கிளம்பத் தாமதம் ஆகிவிடுகிறதாம்! அதனால், மாலைத் தனிமையின் கால அளவு மிகவும் குறைந்து விடுகிறதாம்!

அவளுக்குப் பெருமையும், பூரிப்பும்தான். அத்தோடு, அவளது ஆவலும் கொஞ்சமும் குறைந்ததாக இருக்கவில்லை.

அதனால்தான், சட்டென்று அவளை, அப்படி அவனால் சொல்ல முடிந்ததா?

அல்லது, அவனுடைய தாயார் சொன்னதுபோல, அவளை அகற்றத்தான், அப்படித் திட்டமிட்டானா?

எவ்வளவு யோசித்தாலும், வேறு முடிவுக்கு வழியில்லை!

எண்ணில் அடங்காத எத்தனையோ தடவைகளைப் போல, எப்படி முடிந்தது என்ற தவிப்புதான், ரஞ்சனிக்கு இப்போதும் உண்டாயிற்று.

ஆனால், அன்றைக்கு இந்த மாதிரி எதையும் எதிர்பார்க்கக் கூடத் தோன்றாமல், உல்லாசமும் உற்சாகமுமாய் வளைய வந்தாள். மாலை வேலை முடிந்தால், துள்ளிக் கொண்டு கிளம்புவாள்.

வழியில், நரேந்திரன் காத்திருப்பான் அல்லவா?

சகுந்தலா தேவிக்குச் சந்தேகம் வந்தது போலும்.

அன்று வேலை முடிகிற நேரத்தில், அருகில் வந்து, "என்ன ரஞ்சனி, பலகாரம் சாப்பிட்டாயா?" என்று பரிவுடன் விசாரித்தாள்.

இவ்வளவு பிரியமாகக் கேட்கிறவள், மகனின் விருப்பத் துக்கு மாறு சொல்லவா போகிறாள் என்று எண்ணும்போதே, மரியாதை நிமித்தம் தான் எழுந்து நிற்பதை உணர்ந்து ரஞ்சனி உள்ளூரத் துணுக்குற்றாள்.

இவ்வளவு பந்தா பார்க்கும் எஜமானி அம்மாள், அவளிடம் வேலை பார்க்கும் பெற்றோரற்ற ஒரு சாதாரணப் பெண்ணை, மகனுக்கு மணமுடித்து வைப்பாளா?

முதல் முறையாக, ரஞ்சனியின் நெஞ்சு கலங்கியது.

அவளது கலக்கம் சரியே என்பதுபோலப் புன்முறுவல் செய்து, "இப்போது கொஞ்சம் கூட்டல், கழித்தல், இரண்டு மூன்று கடிதங்கள் மட்டும்தான். விரைவிலே வேலையை முடித்துக்கொண்டு ஓடி விடுகிறாய். தம்பிக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டால், உறவு, நட்பு என்று எல்லோருக்கும் விவரம் தெரிவிக்கக் கடிதம் எழுதி முடிக்குமுன் உனக்குக் கை ஓய்ந்து போய்விடும்!" என்று ஓர் அழகிய பெண்ணின் படத்தைக் காட்டினாள். "பெண் எப்படி இருக்கிறாள், பார்! தஞ்சைப் பக்கம்! பழைய ஜமீன் குடும்பம்! சொத்திலும், அந்தஸ்திலும் எங்களுக்கு எல்லா வகையிலும் பொருத்த மானவர்கள்!"



கண்ணீரை அடக்கிக் கொள்ள, ரஞ்சனி அரும்பாடு பட வேண்டியிருந்தது!

அன்றைய தினத்தைப் பொறுத்த வரையில், சகுந்தலாதேவி நடப்பைச் சொன்னதாக ரஞ்சனி எண்ணினாளே தவிர, தன்னை விரட்டுவதற்காகக் கூறியிருக்கக் கூடும் என்று கொஞ்சமும் நினைக்கவில்லை.

பெற்ற தாய்! சம நிலையில் மகனுக்குப் பெண் பார்த்திருக்கிறாள், பெற்றவள் சொல்லுக்கு, நரேன் பணிந்துதானே ஆக வேண்டும்?

ஏழு நாள் ஆசை, கனவில் கண்ட தனம் என்பார்களே, அது போலச் சுவடே இல்லாமல் மறைந்துவிடப் போகிறது என்று எண்ணித் தவித்தாள்.

எதையும் காட்டிக் கொள்ள முடியாமல், "இதோ வருகிறேன்..." என்று குளியலறைக்கு ஓடிச் சென்று முகத்தை நன்கு நீர் அடித்துக் கழுவிக் கண்ணீரை நிறுத்திவிட்டுத் திரும்பி வந்தாள்.

புன்னகையோடு காத்திருந்த பண்ணைக்காரம்மாவிடம், "பெண் அழகாக இருக்கிறாள், அம்மா!" என்று அவளது நிலைமைக்குத் தக்கபடி சொல்லிப் படத்தைத் திருப்பிக் கொடுத்தாள்.

படத்தை ரசனையுடன் பார்த்து, "பின்னே? என் பிள்ளைக்கு எல்லா விதத்திலும் பொருத்தமாக இருக்க வேண்டாமா? ஒரு பொருத்தம் குறைந்தாலும், எட்டிக்கூடப் பார்க்க மாட்டேனே!" என்றாள் பெரியவள் தீர்மானமாக.

நம் கனவுகள் அவ்வளவுதான் என்று, அடக்கமாட்டாமல் வழிந்த கண்ணீருடன், வழக்கத்தை விடத் தாமதமாக ரஞ்சனி வீட்டுக்குத் திரும்பிச் செல்ல, அப்போதும் காத்திருந்து அவளைச் சந்தித்தான் நரேந்திரன்.

அவளது வாட்டத்தின் காரணத்தை அறிந்ததும் வாய் விட்டுச் சிரித்தான்.

"பைத்தியம்! அம்மாக்கள் அப்படித்தான் ஆசைப் படுவார்கள்! ஆனால், திருமணம் எனக்கா? வேறு யாருக்குமோவா? தாலியை எடுத்து நான்தானே கட்ட வேண்டும்? இந்தக் கைகள், உன்னைத் தவிர வேறு யாருக்கும் தாலிகட்டாது! கவலைப்படாதே!" என்று உறுதியான குரலில் தெளிவாகக் கூறி, அவளைத் தேற்றி அனுப்பியவன், பிடிவாதமாகத் தாயிடம் திருமணத்துக்கு அனுமதி வாங்கி விட்டான்!

"பெரிய அளவிலே செய்தால், அத்தனை பேருக்கும் விளக்கம் சொல்லி மாளாது! அதனால், ஏதாவது கோயிலில் வைத்து, மாலை மாற்றி, எளிமையாகச் செய்யலாம்!" என்றாளாம் சகுந்தலாதேவி.

அத்தை பார்வதிக்கும், இந்தத் திருமணத்தில் அவ்வளவாக விருப்பம் இல்லைதான்! ஆனால், முனைந்து தடுக்கவும் இல்லை! எப்போதும் போல, ரொம்பப் பட்டுக் கொள்ளாத நிலை! ஆனால், கோயிலில் என்றாலும், திருமணத்தை முறையாக நடத்தும்படி மட்டும் கேட்டுக் கொண்டாள்.



"கட்டாயம்!" என்று நரேந்திரன் கூற, அதுவே நடந்தது.

திருமணம் வரை பிரச்சினை எழவில்லை. அதன்பிறகு...

## 8

பண்ணைத் திருமணம் என்கிற அளவுகோலை வைத்துப் பார்த்தால், பொன் வைக்கும் இடத்தில் பூ என்பார்களே, அது போலத்தான் அவர்கள் திருமணம்!

அதுவும்கூட, ரோஜாவோ, மல்லிகைப் பந்தோ அல்ல! மழை பெய்தால், சாலையோரம் பூத்துக் குலுங்கும் காட்டுப் பூதான்.

தாயின் சில நகைகள், பண்ணையில் தந்த சம்பளப் பணம் தவிர, பணமோ பொருளோ, ரஞ்சனியிடம் கிடையாது! எப்போதும் போல, ஓரளவுக்கு மேல், பார்வதி தன் பணத்தைச் செலவு செய்யத் தயாரில்லை. ஆனால், அவளுடைய பழைய மாணவ மணிகளின் பெரும் போக்கினால், மளிகைச் சாமான், காய்கறி, பூ, துணிமணி போன்றவைக்குப் பஞ்சமில்லாமல், திருமணமும் விருந்தும் நல்லபடியாகவே நடந்தன. மேளம்கூட அப்படி அமைந்ததுதான்!

ரஞ்சனியைப் பொறுத்த வரையில், இதெல்லாம் பெரிதாக அவள் மனதில் படவே இல்லை. யார் யார் என்ன கொண்டு வந்தார்கள் என்று சகுந்தலா அம்மாள் விசாரிக்க, மகிழ்ச்சியோடு விவரம் தெரிவித்தபோதுகூட, அந்த வினாடியோடு, அதெல்லாம் அவளது மனதை விட்டு அகன்று போயின.

அவளது மனம் முழுக்க நிறைந்திருந்தவன் நரேந்திரன் தான்!

அறிந்தவர், தெரிந்தவர் முன்னிலையில், நரேந்திரனின் கையால் தாலி கட்டிக் கொண்டபோது, ரஞ்சனி தேவ லோகத்தில் இருந்தாள்.

அதே போல உணர்வதாகத்தான் நரேந்திரனும் அப்போது சொன்னான்!

ஆனால், அவள் உணர்ந்தது, உயிரோடு ஒன்றிவிட்ட, உள்ளார்ந்த காதலில்!

அவன் சொன்னது, அனுபவித்ததும் அலுத்து மறைந்து போய் விடக் கூடிய வெறும் இனக் கவர்ச்சி வேகத்தில் என்பது, பிறகுதான் அவளுக்குத் தெரிந்தது.

திருமணமான பிறகு, திருநெல்வேலி, குற்றாலம், கன்னியா குமரி என்று, அந்தப் பக்கம் இருந்த முக்கியமான இடங் களுக்கு, நரேந்திரன் மனைவியை அழைத்துப் போனான்.

வெளியூர் போவதைத் தெரிவிப்பதோடு, ஏதேனும் வாங்கி வர வேண்டுமா என்று கேட்பதற்காக, ரஞ்சனி அத்தை வீட்டுக்குப் போய் வருவாள். தேவைப்பட்ட நேரத்தில் ஆதரித்து வளர்த்த அத்தை என்று, மரியாதை நிமித்தமாகவும் செல்வதுண்டு. 'காலத்தினால் செய்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிது' அல்லவா? அத்தோடு, பிறந்த வீட்டு உறவு பார்வதி அம்மாள் மட்டும்தானே?

சில சமயங்களில், நரேன் அவளோடு போவான்.

திரும்பி வந்தால், அங்கே அத்தை வீட்டில் யார்யார் இருந்தார்கள், என்ன நடந்தது என்று சகுந்தலா தேவி கேட்பதுண்டு.



மாமியார் இறங்கி வந்து தன்னிடம் பேசிப் பழகுகிறாள் என்று, ரஞ்சனி மகிழ்ச்சியோடு, விலாவாரியாக விவரம் தெரிவிப்பாள்.

மாணவர்களுக்கு இருக்கும் பிரியம், மாணவிகளுக்குக் கிடையாது போலத் தெரிகிறதே என்று மாமியார் ஆச்சரியப்பட, பூக்காரி தனத்தைப் பற்றி, ரஞ்சனி எடுத்துச் சொன்னாள். "தினமும் ஒரு கை நிறைய அரும்பு கொணர்ந்து தந்துவிட்டுப் போவாள், அத்தை! அதைத் தொடுத்து, பாதி சுவாமி படங்களுக்கு வைத்துவிட்டு, மீதியை நான் வைத்துக் கொள்ளுவேன்!" என்றாள் மருமகள்.

"என்னவோ, அவள் ஒருத்திக்காவது குரு பக்தி இருந்ததே! இல்லாவிட்டால், உன் அத்தை வீடு, ஆண்கள் மட்டுமே வருகிற இடமாகிப் போகும்!" என்று விட்டுப் போனாள் சகுந்தலா அம்மாள்.

பெண் மாணவிகள் ஏன் இப்படி இருக்கிறார்கள் என்று, ரஞ்சனிக்கு உள்ளூர உறுத்தலாக இருந்தது. பள்ளிகளில் பையன்களுக்குப் போலவேதானே, பெண்களுக்கும் கற்றுத் தருகிறார்கள்?

பழைய மாணவர்கள் அளவு பழைய மாணவிகள் வரக் காணோமே என்று நரேனும் ஒரு தரம் குறிப்பிட்டான்.

நல்ல வேளையாக, அவன் அதைப் பார்வதி அம்மாளின் முன்னிலையிலேயே சொல்ல, ரஞ்சனிக்கு வருத்தமாக இருந்த போதும், பார்வதியிடம் அதற்குப் பதில் இருந்தது!

"இந்தப் பையன்கள் போலத் தனியே சுற்ற, இங்குள்ள பெண்களுக்கு உரிமை கிடையாதே! பெண்களில் பலர், திருமணமாகி வெளியூருக்குச் சென்று விடுகிறார்கள். உள்ளூரிலேயே இருந்தாலும், குழந்தை குட்டி என்று

ஆகிவிட்டால், வீட்டோடு பெண்களைச் சங்கிலிகொண்டு கட்டினாற்போல ஆகி விடுகிறதே!'' என்று ஆசிரியை கொடுத்த விளக்கம், மருமகளுக்கு ஆறுதல் அளித்தது.

''உதய மூர்த்தி, பெருமாள், கந்தப்பன் இவர்களை அடிக்கடி உன் அத்தை வீட்டில் சந்திப்பது ஒரு மாதிரி இருக்கிறது. உன்னிடம் வேறு, ரொம்பச் சாதாரணமாகப் பேசுகிறார்களே!'' என்று நரேந்திரன் ஒரு தரம் சொன்னான்.

ஆனால், இதையெல்லாம் ரஞ்சனி பெரிதாக நினைத்தது கிடையாது.

அவளது ஆனந்தமான வாழ்க்கையில், சுருதி பேதத்துக்கே இடம் இருக்கவில்லை.

இரவு முழுவதும் உல்லாசமும் சல்லாபமுமாக நேரம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது.

பகலில், அவ்வப்போது, ஏதோ வேலையாக, நரேந்திரன் வெளியே செல்ல நேர்ந்தாலும், அவனைப் பற்றிய நினைவிலேயே காலம் செல்ல, அதுவும் ரஞ்சனிக்கு இனிமையாகவே இருந்தது. சென்ற காரியம் முடிந்து விட்டால், அப்புறம் மீண்டும் சொர்க்க போகம்தான்.

எல்லாம், அந்தப் பொல்லாத நாள் அணுகி வரும் வரை!

நாலைந்து நாட்களாக, ரஞ்சனிக்கு ஏனோ வயிற்றைப் பிசைந்து கொண்டே இருந்தது.

''ருசியாக இருக்கிறது என்று உருளைக் கிழங்கு வறுவலை வைத்து வைத்துத் தின்றதால், வாய்வாக இருக்கும்! தானாகச் சரியாகிவிடும்,'' என்று சகுந்தலா அம்மாள் சொன்னது சரியாக இருக்கக் கூடும் என்று இளசுகள் இருவருமே எண்ணிக் கொண்டு சும்மா இருந்து விட்டனர்.



பிறகும், ஒருநாள் நரேந்திரன் வெளியே சென்றிருந்த போது, மாமியாரேதான், ''நாள் கணக்கைச் சரிபார்த்தாயா?'' என்று கேட்டுவிட்டு, ''ஏய், கென்னடி...'' என்று வேலையாளிடம் ஏதோ சொல்வதற்காக எழுந்து சென்றாள்.

பிரமித்துப் போய் அமர்ந்திருந்தாள் ரஞ்சனி.

அவள் அம்மா ஆகப் போகிறாளா?

பதினெட்டாவது பிறந்த நாள் முடிந்து ஒரு வாரத்தில் திருமணம்! அதன் பிறகு நாற்பது நாள்கூட ஆகவில்லை! அதற்குள்...!

நரேனும் அவளும் சேர்ந்து, ஓர் உயிரையே உருவாக்கி விட்டார்களே!

குழந்தை ஆணா, பெண்ணா? யாரைப் போல இருக்கும்? அவனைப் போலக் குட்டியாக ஒரு குழந்தை மடியில் கிடப்பது போன்ற கற்பனையில் ரஞ்சனியின் உடம்பு முழுவதும் புல்லரித்தது.

கணவன் எப்போது வருவான் என்று வாசலையே பார்த்த வண்ணம், வழி மேல் விழி வைத்துக் காத்துக் கிடந்தாள்.

மிகவும் தாமதமாக வீடு வந்த கணவனின் முகத்தில் இருந்த வாட்டத்தை, ரஞ்சனி பெரிதாக நினைக்கவில்லை.

வேலையினால் வந்த சோர்வாக இருக்கலாம். ஆனால், என் சேதியைக் கேட்டால், சோர்வு மறந்து துள்ளிக் குதிக்க மாட்டானா என்று எண்ணியவளாய், ''உங்களுக்கு ஒரு நல்ல சேதி சொல்ல, எவ்வளவு நேரமாகக் காத்துக் கிடக்கிறேன், தெரியுமா?'' என்றாள் கொஞ்சலாக.

தோளில் படிந்திருந்த கையை மெல்ல விலக்கியவாறு, ''நானும்கூட, உனக்கு ஒரு விஷயம் சொல்லியாக வேண்டிய

நிலையில்தான் இருக்கிறேன், ரஞ்சனி. ஆனால், அது... அது நல்ல சேதி அல்ல!'' என்று சோர்ந்த குரலில் தொடங்கியவன், மேலே பேசுவதற்குச் சிரமப்பட்டான்.

தொழில் தொடங்குவதில் ஏதோ பிரச்சினையாக இருக்கும் என்பது ரஞ்சனியின் ஊகமாயிற்று.

போகட்டுமே! என்ன பிரமாதம்? ஒரு தொழில் போனால், இன்னொன்றைத் தொடங்க முடியாதா என்ன? அப்படியென்ன, இல்லாத குடும்பமா? ஒரு தொழிலும் செய்யாவிட்டாலும், பல தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிடச் சொத்து உள்ளவன்தானே? வயிற்றுக்கே இல்லாதவன் போல என்ன வருத்தம் இது? அதுவும் இன்று பார்த்து...!

தன் நல்ல சேதிக்கு முன்னதாக வேறு எந்த எதிர்மறை விஷயத்தையும் கேட்க அவளுக்கு மனமில்லை. எனவே, அவசரமாக, ''இதோ பாருங்கள்! உங்கள் கெட்ட சேதி எதுவானாலும், இன்றைக்கு, குறைந்த பட்சமாக இப்போது, அதைச் சொல்ல வேண்டாம்! முதலில் நான் சொல்லும் நல்ல செய்தியைக் கேட்டு விடுங்கள்! அந்த சந்தோஷத்தில், எந்தத் துன்பமும் உங்களுக்கு மறந்து போய்விடும்!'' என்றவள், சற்றுத் தள்ளிப் போய், அவன் முகத்தை நன்கு பார்க்கும் விதமாக நின்று கொண்டாள்.

இப்போது இருக்கும் வாட்டம் மாறி, நேர் எதிராக அவன் முகம் மகிழ்ச்சியில் மலர்வதைப் பார்த்து ரசிக்க வேண்டுமாம்!

கணவன் முகத்தையே பார்த்தபடி, நாணமும் பெருமையும் கலந்த புன்னகையோடு, ''நீங்கள் அப்பா ஆகப்போகிறீர்கள், நரேன்!'' என்று பெருமிதத்தோடு தன் செய்தியைத் தெரிவித்தாள்.

நரேந்திரனின் முகம் மாறத்தான் செய்தது! சோகமும் மறைந்து போயிற்று.



ஆனால், அதற்கு மேல், அவள் எதிர்பார்த்த உணர்ச்சிகள் எதுவும் அவன் முகத்தில் வெளிப்படவில்லை. நேர் மாறாகப் பொங்கிப் பெருகிய ஆத்திரத்தில், அவன் முகம் சீறிச் சினந்தது!

''என்ன உளறுகிறாய்?'' என்ற கேள்வியும் பயங்கரக் காட்டு மிருகத்தின் உறுமலாக வெளிப்பட்டது.

## 9

நரேந்திரனை விட்டுப் பிரிந்து சென்ற புதிதில் ஓயாமல் நினைத்து நினைத்து நொந்த நிகழ்ச்சிகள் - கொஞ்சம் மனதில் திடம் வந்த பிறகு நினைக்கவே கூடாது என்று பிடிவாதமாக ஒதுக்கி வைத்தவை எல்லாம் காட்டாற்று வெள்ளத்தின் வேகத்துடன் கண் முன்னே நடப்பது போல மனத்திரையில் திரைப் படமாக ஓடிக் கொண்டிருக்க, அதைத் தடுக்கும் வல்லமையற்று ரஞ்சனி சும்மாதான் உட்கார்ந்திருந்தாள்.

அந்தந்த நேரத்து உணர்வுகளை அனுபவித்தபடி, அவற்றை இழந்து விட்டதை எண்ணி ஏங்கியபடி...

அதிலும் அந்தக் கடைசி நாள் நிகழ்ச்சி கல்லில் பொறித்தாற்போல, அவளது மனதில் பதிந்துவிட்டிருந்தது போலும்! நடந்தது எல்லாம் இம்மி பிசகாமல் துல்லியமாக, அப்படியே நினைவு வந்தது!

நரேந்திரனின் உடலின் விரைப்பு, புருவச் சுழிப்பு, கண்களின் சிவப்பு, முகத்தின் கோபக் கன்றல்... நெஞ்சைக் குளிரடித்த உறுமல்... எல்லாமே!

சற்று நேரம் ரஞ்சனிக்குத் தன் கண், காது எதையுமே நம்ப முடியவில்லை.

எவ்வளவு சந்தோஷமான விஷயம்! அவன் தந்தையாகப் போகிறான், குலம் தழைக்கப் போகிறது என்றதும் துள்ளிக் குதித்துக் கூத்தாடுவான் என்று பார்த்தால், ஆத்திரப் படுகிறானே!

அதுவும், கண் மண் தெரியாத சீற்றம்!

ஏன்?

அவர்கள் ஒன்றும், இப்போது குழந்தை வேண்டாம் என்றும்கூட இருக்கவில்லையே! அதிலும், 'என் தாத்தாவுக்கு அப்பா ஒரே பிள்ளை, என் பெற்றோருக்கு நானும் அப்படித் தான். அந்தமாதிரி இல்லாமல், நாம் மூன்று பிள்ளைகளேனும் பெற்றுக் கொள்ள வேண்டும், அதிலும், பெண் குழந்தைகள் கட்டாயம் இருக்க வேண்டும்!'' என்றது அவனே அல்லவா?

அப்படிச் சொன்னவன், குழந்தை என்றதும், உளறுவதாகச் சொல்லி உறுமுவதா?

காரணம் புரியாத்தோடு, அந்த உறுமல் அவளுள் பயக் குளிரையும் ஏற்படுத்த, கண்கள் அகலக் கணவனைப் பார்த்தாள் அவள்.

அந்தப் பார்வையில் என்ன தெரிந்ததோ? அவன் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். குரலும் தணிய, "இதோ பார் ரஞ்சி, இதெல்லாம் உனக்குத் தெரியாது! ஒவ்வொருவர் உடம்பு ஒவ்வொரு மாதிரி இருக்குமாம்! நீ தப்பாக எண்ணிக் கொண்டு குதிக்கிறாய் என்று நினைக்கிறேன். அதனால், இந்தப் பேச்சை நிறுத்து. ப்ளீஸ்!'' என்றான் நரேந்திரன் அலுப்புடன்.

ரொம்பவும் எதிர்பார்த்து மகிழ்ந்துவிட்டுப் பிறகு இல்லை என்று ஆகிவிட்டால் மனைவி வேதனைப் படுவாளே என்று எண்ணுகிறானா? விஷயம் அப்படியில்லை என்று, இவனுக் கல்லவா தெரியவில்லை!



புன்னகையோடு, ''அப்படியில்லை, நரேன். இது குழந்தைதான். எனக்குத் தெரியும்...'' என்று ரஞ்சனி மீண்டும் தொடங்க, அவன் சுள்ளென்று விழுந்தான்!

"சொன்னால் கேட்க மாட்டாயா? இது குழந்தை இல்லை என்பது எனக்கு நிச்சயம். இத்தோடு இந்தப் பேச்சை விடு!''

அதென்ன கீறல் விழுந்த கிராமபோன் ரிக்கார்டு மாதிரி, அபசகுனமாக இல்லை இல்லை என்று, அதே பேச்சு?

சுள்ளென்று தோன்றிய எரிச்சலில், "அதெப்படி உங்களுக்கு நிச்சயமாம்?'' என்று திருப்பிக் கேட்டாள் ரஞ்சனி.

"அது...'' என்று தொடங்கிய நரேந்திரன் சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டு, ''எப்படியோ தெரியும். அதனால்தான் சொல்லுகிறேன் அனாவசியமாக ஏமாந்து போய், அது வேறு வேதனைப்படாதே!'' என்றான் அவன் கனத்த குரலில்.

ஏமாறுவதா?

தன் ஊகம் உறுதியாகிவிட, ரஞ்சனி சிரித்தாள்.

முகம் திருப்பி நின்றவனைப் பின்புறமாகப் போய்த் தழுவி, ''நீங்கள் சரியான மக்கு, அத்தான்! உங்களுக்குத்தான் ஒன்றுமே தெரியவில்லை! நான்.. நான் ஒன்றும் எனக்குள் கணக்கிட்டு, அதை வைத்து, உங்களிடம் சொல்லவில்லை. இன்றைக்கு நம் நாட்டு வைத்தியர் வந்திருந்தார். அவரது கணிப்பு எவ்வளவு சரியாக இருக்கும் என்று, உங்களுக்கும் தெரியும்தானே! அவர் என் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு, இரட்டை நாடி ஓடுகிறது. இது குழந்தைதான் என்று விட்டுப் போனார்!''

''... எஎன்ன?'' என்று, பேச்சின் இடையில், அவன் முரட்டுத்தனமாகத் திரும்பி அவளை விலக்கித் தள்ளவும் திகைப்புற்றுக் கேட்டாள்,

தள்ளியது மட்டுமின்றி, ''பாதகி!'' என்றான் அவன் கண்ணில் தீயெழ.

அவன் தள்ளிய வேகத்தில் விழப் போனவள் ஒருவாறு சமாளித்து நின்றுகொண்டு, திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

வெறுப்பும், அருவருப்புமாக அவன் முகமே அடியோடு மாறியிருந்தது.

என்னவோ தப்பு என்று அவள் உணர்ந்தது, அப்போது தான்!

''என்ன சொல்லுகிறீர்கள்? என்ன விஷயம், நரேன்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!'' என்று, புரியாமல் வினவினாள் அவள்.

அவளது வார்த்தைகளால், அவனது ஆத்திரம், வெறுப்பு, அருவருப்பு எல்லாமே அதிகமானது போலத் தோன்றியது. அதற்கேற்ப, "புரிய... வில்லையா? பாவி! பாதகி! நீ இவ்வளவு மோசம் என்று நான் எண்ணவே இல்லையே! அம்மா குறிப்பால் உணர்த்த முயன்ற போதெல்லாம், நான் காது கொடுத்துக் கேட்கவே இல்லையே! 'குலத்தளவே ஆகுமாம் குணம்' என்று அவர்கள் அனுபவத்தில் சொன்னதைக்கூட அலட்சியம் செய்தேனே! பெற்ற தாய்க்கு உரிய மரியாதை கொடுக்காத எனக்கு, இது வேண்டியதுதான்! ஆனால், நீ என்னை இவ்வளவு கேவலப்படுத்துவாய் என்று, நான் கனவில்கூடக் கருதவில்லையே!'' என்று கொதிப்பும் கோபமுமாகப் பொருமினான் நரேந்திரன்.

உண்மையான கோபம்! உண்மையான வருத்தம்! ஏன்?

"எனக்குப் புரியவில்லையே!" என்றாள் ரஞ்சனி மீண்டும்.



''அறைந்து கொன்று விடுவேன்!'' என்றான் அவன் ஆத்திரத்துடன். "போ. போய்விடு! இந்தக் குழந்தையுடைய தந்தை யாரோ, அவனிடமே போய்விடு! அதுதான் பழைய மாணவன் என்ற போர்வையில் எத்தனையோ பேர் உண்டே!'' என்று அவன் நஞ்சைக் கக்கவும்தான், ஓரளவு அவளுக்கு விஷயம் புரிந்தது.

நரேந்திரன் அவளைத் தவறாக நினைக்கிறான்.

ஏன்? எப்படி முடியும்? துரத்தித் துரத்தித் திருமணம் புரிந்துவிட்டு, ஈருடல் ஓருயிராக வாழ்ந்துவிட்டு, இவ்வளவு கேவலமாகச் சந்தேகப்படுவதா?

''என்ன உளறுகிறீர்கள்?'' என்றாள், இப்போது அவள் ஆத்திரம் கொண்டு.

''முட்டாளாக இருந்து, உன்னை நம்பிக் கண்ணே மணியே என்று உளறிய காலம் முடிந்து விட்டது! அதனால், இன்னமும் நடிக்காதே! வருத்தப் படும்படியாக நான் ஏதேனும் செய்து விடுமுன், விலகிப் போய்விடு!'' என்றான் அவன், இறுகிய குரலில்!

போய்விடு, போய்விடு என்கிறானே! பிரிந்து வாழ்வது, முடிகிற காரியமா? அவனாலும் முடியாதுதானே!

பேசிப் புரிய வைக்கும் நோக்கத்தோடு, "நீங்கள் ஏதோ தப்பாக எண்ணிப் பேசுகிறீர்கள், நரேன்! இது...'' என்று யோசித்தவளுக்கு, இவர்களது திருமணத்துக்கு விருப்பம் இல்லாமல், மகனின் பிடிவாதத்துக்காகச் சம்மதித்த மாமியாரின் நினைவு வந்தது.

அவ்வப்போது, அத்தை வீட்டுக்கு வரும் பழைய மாணவர் களைப் பற்றிப் பேசுவாளே! இதற்காகத்தானா? என்ன அநியாயம்!

இந்தச் சூழ்ச்சியை முறியடித்துவிடும் வேகத்தில், அவனைப் பெற்ற தாயைச் சொல்லுகிறோம் என்பதை மறந்து, ''நரேன், அசிங்கமாக என்ன பேச்சு, இது? எனக்கென்னவோ, நீங்கள் பேசுவதைப் பார்த்தால், இது அத்தையின் வேலை என்று தோன்றுகிறது! சத்தியமாக, இது உங்கள் பிள்ளை தான்...'' என்ற அவள், வாக்கியத்தை முடிக்கு முன்னரே, கன்னத்தில் இடி இறங்கிக் காது 'நொய்'யென்றது!

அடித்திருக்கிறான்!

செவிப்பறை கிழியாத குறை! கன்னத்தில் தீப் பட்டாற் போல எரிந்தது.

என்னவென்று ஒரு வார்த்தை கேட்கக் கூட மாட்டானா? என்ன அநியாயம்!

என்னென்னவோ எண்ணியபோதும், அடி பட்ட அதிர்ச்சியில் அவளுக்கு வாயில் வார்த்தை வர மறுத்தது.

அவள் திகைத்து நிற்கும்போதே, அவன் பேசினான்.

கையெட்டுகிற தூரத்தில் இருந்தால், மேலும் அடித்து விடுவோமோ என்று அஞ்சியவன் போல, வேகமாகப் பின்னோக்கி நகர்ந்து நின்று, ''என்னைக் கொலைகாரனாக்கி விடாதே! ஆனால், இதே ரீதியில் தொடர்ந்து பேசினாயோ, என் கையால் நீ சாவது நிச்சயம்! இதோ பார், நான் சொல்வதை நன்றாகக் கேட்டுக் கொள். என்னால், ஒரு குழந்தைக்குத் தந்தை ஆக முடியாது! அதை, டாக்டரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டுதான் வந்தேன்! இந்த உண்மையை உன்னிடம் சொல்லி, நாம் சேர்ந்து வாழ்வதோ, பிரிந்து விடுவதோ உன் விருப்பத்துக்கு விடலாம் என்று, மனதைத் திடப்படுத்திக் கொண்டு வந்தேன்! ஆனால், நீயோ உண்மை தெரியாமல், எவனுக்கோ உண்டான குழந்தையை என்னுடையதாக்கி விடத்



திட்டம் போடுகிறாய்! எவ்வளவு பெரிய துரோகம்! போ! போய்விடு! நீ உயிரோடு இருக்க வேண்டுமானால், இங்கிருந்து எங்கேனும் போய்விடு! இல்லாவிட்டால்... கவனி. நான் இப்போது வெளியூர் போகிறேன்! இரண்டு நாட்களில் திரும்பி வருவேன்! அப்படி நான் திரும்பி வரும்போது, நீ இங்கே இருக்கக் கூடாது! மீறி இங்கேயே இருந்தாயானால், வருவது வரட்டும் என்று மெய்யாகவே, உன்னைக் கொன்றே விடுவேன்!'' என்று முடித்துவிட்டு அறை வாயிலை நோக்கி நடந்தான்.

கணவன் பேசிய பேச்சில், ரஞ்சனிக்கு எதுவும் புரியவில்லை!

அவன் சொன்னது எப்படிச் சரியாகும்?

மிகவும் களைத்துப் போனவனைப் போல, நரேந்திரனின் நடை ஒரு பக்கம் மனதைத் தாக்க, ''நரேன்!'' என்று அவனை அழைத்தாள்.

அவன் நின்று பார்க்கவும், ''நீங்கள் எதற்காக இப்படிப் பேசுகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை! ஆனால், இது உங்கள் பிள்ளைதான். எனக்கு நன்றாகத் தெரி...'' என்று அவள் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, ''ஏய்...!'' என்று கையை ஓங்கிக் கொண்டு, அவளை நோக்கிப் பாய்ந்தான் அவன்.

ஆனால் பாதியிலேயே நின்று, ''சை!'' என்று கையை உதறிவிட்டு, ''போய்விடு! நான் திரும்பி வரும்போது நீ இங்கே இருந்தால், நிச்சயமாக உன்னைக் கொன்று விடுவேன்! கொன்றுவிட்டு, நானும் தற்கொலை செய்து கொள்வேன்!'' என்று தாழ்ந்த குரலில் கூறியவன், அதற்கு மேல் நில்லாமல், அங்கிருந்து சென்று விட்டான்.

சில நிமிஷங்களில், கார் கிளம்பிச் செல்லும் ஓசை கேட்டு, தேய்ந்து மறைந்தது.

அதுவரை நடந்ததெல்லாம், ரஞ்சனிக்குத் தெள்ளத் தெளிவாக நினைவு இருந்தது!

அப்புறம் ஒரு தெளிவற்ற நிலை! ஆத்திரம்! அழுகை! குழப்பம்! பயம்! கலக்கம்!

தன்னை இப்படியொரு பழி சொன்னானே என்று முதலில் கோபம்தான் வந்தது. பிறகு சொல்லில் அடங்காத வேதனை.

அழுது தீர்த்த பிறகே ஓரளவேனும் யோசிக்க முடிந்தது. ஆனால், என்ன யோசித்தும், ஒரு தெளிவும் தோன்றவே இல்லை!

வைத்தியரிடம் போய்ப் பிள்ளை பிறக்காது என்று தெளிவுபடுத்திக் கொண்டு வந்ததாகச் சொன்னானே! அது எப்படி முடியும்?

அந்த மருத்துவரின் சோதனையோ, முடிவோ, நிச்சயமாகத் தவறாகத்தான் இருக்க முடியும்!

மற்றவர்கள் சந்தேகப்படலாம்! ஆனால், அவளுக்கு நிச்சயமாகத் தெரியுமே!

அந்த வைத்தியரிடமே மீண்டுமோ, அல்லது, வேறொரு மருத்துவரிடமோ போய் மீண்டும் பரிசோதனை செய்து கொள்ளும்படி சொல்லிப் பார்க்கலாமா? ஆனால், அவன் திரும்பி வரும்போது, கண்ணில் பட்டாலே கொன்றுவிடப் போவதாகச் சொல்லுகிறானே!

அதைவிடக் கொடூரம், அவனும் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகச் சொன்னது!

அதுவும், அந்தக் குரலில் சொன்னது! அதைக் கொஞ்சமும் அலட்சியம் செய்ய முடியாதே!



அவர்களது திருமணம் நடக்கும் என்று அவன் சொன்னது, இந்தக் குரலில்தான். நடத்திக் காட்டினான்! இப்போது, பிரிவுக்கும் அதே குரலைப் பயன்படுத்தி விட்டானே!

இதுவும் நடந்துதான் தீருமா?

இது சமயம் அங்கே வந்த மாமியாரும் அப்படித்தான் சொன்னாள். "அவன் ஒரு முடிவு பண்ணிவிட்டால், அதை நிறைவேற்றாமல் விடமாட்டான்! மற்றப்படி, மலையும் மடுவும்போல அந்தஸ்தில் இவ்வளவு ஏற்றத் தாழ்வுள்ள நீங்கள் இருவரும் எப்படி மணந்து கொள்ள முடியும்?" என்று கேட்டாள்.

நீர் வழியும் கண்களால் அவளைப் பார்த்து, "என்னை அவர் மணந்து கொண்டது உங்களுக்குப் பிடிக்கவில்லை தானே?" என்றாள் ரஞ்சனி.

சகுந்தலாதேவி மறுக்கவில்லை. "சற்று நியாயமாய் யோசி, ரஞ்சனி. என் வீட்டு மருமகளாவதற்கு அழகு அழகாய் ஆயிரம் கோடீசுவரிகள் காத்துக் கிடக்கும்போது, அன்றாடம் காய்ச்சியான உன்னை எனக்கு எப்படிப் பிடிக்கும்? ஆனால், என் மகனின் பிடிவாதம் அறிந்ததால் ஒத்துப் போனேன். ஒத்துக் கொள்ளாவிட்டால், செத்துப் போவேன் என்றான்! ஒரே பிள்ளை! அவன் உயிரை விட, எனக்கு எது பெரிது? இப்போது, தொழில் செய்யச் சென்னைக்குப் போவேன் என்கிறானே, அது மட்டும் என்ன? நிலபுலத்தைப் பார்த்துக்கொண்டு, பிள்ளை இங்கே கண்ணெதிரே இருக்க வேண்டும் என்றுதானே, எனக்கு இருக்கும்? அங்கே தொழில் என்று தீர்மானித்து விட்டான்! கடன் வாங்கியாவது தொழில் நடத்துவேன் என்கிறான்! வேண்டாம் என்றால், பிள்ளையை இழக்க வேண்டியிருக்கும் என்றுதான், அதிலும் அவனுக்கு

விட்டுக் கொடுத்து விட்டேன்... இவ்வளவு தியாகம் செய்தும், உன்னால், என் மகனை இழந்து விடுவேன் போல இருக்கிறதே!" என்று அந்த அம்மாள் கண் கலங்கினாள்.

இரும்பு மனுஷி என்று, அவள் நினைத்திருந்த மாமியாரே கண்ணீர் விடவும், ரஞ்சனி அரண்டு போய் விட்டாள். சும்மாவே, சூறாவளியில் சிக்கிய மாதிரித் தவித்துக் கொண்டு இருந்தவள்!

"ஆனால், என்னைத் தப்பாகக் கருதுகிறாரே! நான் அப்படி இல்லையே..." என்று அழுதாள் மருமகள்.

சற்று நேரம் பேசாதிருந்துவிட்டு, "இப்போதுதான் விஷயம் புரிகிறது!" என்றாள் சகுந்தலாதேவி. "இந்த விஷயத்தின் உண்மை பொய் பற்றி, நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை! எனக்குத் தெரியாது! ஆனால், உன்னைப் பார்த்ததும், நரேந்திரனுக்கு வந்த மோகம் இப்போது தீர்ந்து விட்டது என்பது, தெளிவாகத் தெரிகிறது! பெரிய இடத்துப் பிள்ளையாக வளர்ந்த அவனுக்குக் கீழ் மட்டத்தைச் சேர்ந்த உன் பழக்க வழக்கங்கள் பிடிக்கவில்லை! எனக்கே, சில சமயம் ஒரு மாதிரி இருக்கும்! அவனுக்கு, முழுசாக அருவருத்து விட்டது என்று நினைக்கிறேன். அதனால், உன்னை விரட்ட, இந்த வழியைக் கையாளுகிறான் என்று தோன்றுகிறது! எப்படியும், இவ்வளவு சொல்லிவிட்டான்! இனி மாற மாட்டான். ஏதாவது காரணம் சொல்லி இங்கேயே இருந்து, என் பிள்ளையைக் கொன்று விடாதே, அம்மா! உன் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன்! ஏதாவது பணம் வேண்டுமானாலும் கொடுக்கிறேன்..."

அதற்குமேல், ரஞ்சனி அங்கே தங்கவில்லை. அந்த வீட்டில் மட்டுமல்ல. அந்த ஊரிலேயே இருக்கவில்லை.



## 10

பார்வதியின் வீட்டிலேயே வளர்ந்திருந்த போதும், பிறந்த வீட்டு உறவு அவள் ஒருத்திதான் என்ற போதும், ரஞ்சனி தன் அவலத்தை, அவளிடம் கூட, முழுமையாகச் சொல்லவில்லை.

கடமை என்று பொறுப்பேற்றதை வெளிப்படையாகச் சொன்னவள், அதற்குமேல் ஒட்டுறவாகப் பழகியும் அறியாத வளிடம், தன் கேவலத்தை எப்படித்தான் சொல்லுவாள்?

ஒத்து வரவில்லை, இனி அந்த உறவைத் தொடர வழியில்லை என்று மட்டுமே சொன்னாள்.

"அந்தப் பெரிய வீட்டுச் சம்பந்தம் எனக்கு முதலிலேயே பிடிக்கவில்லை! ஆனால், உன் வாழ்க்கை, உன் விருப்பம் என்று சும்மா இருந்தேன்! இனி என்ன செய்யப் போவதாக இருக்கிறாய்? வேண்டுமானால், யாரையாவது அனுப்பி அவர்களிடம் பேசிப் பார்க்கலாமா?" என்று பார்வதி கேட்கவும் ரஞ்சனிக்கு உடல் சிலிர்த்தது.

போய் என்ன பேசுவது?

பிள்ளை தனதில்லை என்கிறானே, அதைப் பற்றியா? அல்லது, வெறுத்து விட்டவன் காலில் விழுந்து, வாழ்வு கொடு என்று கெஞ்சுவதா?

இத்தனையையும் யாரிடம் பேசுவது?

இவளைக் கண்டாலே உயிரை விட்டு விடுவேன் என்கிற ஒரு பிடிவாதக்காரனிடம், யார் என்ன பேச முடியும்?

மறுப்பாய்த் தலையாட்டிவிட்டு, "இந்த ஊரிலிருந்து, எங்காவது போக வேண்டும், அத்தை! அதற்கு ஏதாவது வகை

செய்து தந்தீர்களானால், மிகவும் நன்றியுடையவளாக இருப்பேன்!'' என்றாள் சின்னவள்.

தம்பி மகளின் முகத்தை ஒரு தரம் கூர்ந்து பார்த்த பார்வதி, அதன் பிறகு ரஞ்சனியின் மணவாழ்வு பற்றிப் பேசவில்லை.

என்ன செய்வது என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே, தாய் வீடு வந்து சீராடி விட்டுப் புகுந்த வீட்டுக்குத் திரும்பிச் செல்லக் கிளம்பிக் கொண்டிருந்த பழைய மாணவி செல்லம்மா, அவள் படித்த பள்ளித் தலைமை ஆசிரியையைப் பார்த்து விடை பெற்றுப் போக வந்தாள்.

அவளிடம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, பார்வதி ரஞ்சனியை அழைத்தாள்.

ஏதோ ரஞ்சனியை டாவடிப்பதற்காகப் பார்வதியுடைய பழைய மாணவர்கள் மட்டுமே டீச்சரைப் பார்க்க என்று சொல்லிக் கொண்டு அவள் வீட்டுக்கு வருவது போல, சகுந்தலா ஜாடையாகச் சொல்லுவாள். அதையே, இப்போது நரேந்திரன் குற்றச் சாட்டாகச் சொன்னான். ஆனால், இருவர் பேச்சையும் பொய்யாக்குவது போல, பழைய மாணவி செல்லம்மா அங்கே வந்ததோடு, எந்தப் பழைய மாணவனும் செய்யாத உதவியையும், ரஞ்சனிக்குச் செய்தாள்.

ரஞ்சனியின் பிழைப்புக்கு ஏற்பாடு செய்தாள். மூச்சு முட்டிக் கொண்டிருந்த அந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேறி, நல்ல மூச்சு விடவும் வகை செய்தாள்.

அவளோடு, ரஞ்சனி திருச்சி சென்றாள்.

''கருவுற்றுக் குழந்தை பெறும் காலத்துச் செலவுக்கு என்று, உன் பணத்தில் கொஞ்சம் மீதி வைத்திருந்தேன். இப்போது, அதை எடுத்துப் போ! முதல் செலவுகளுக்குப் பயன்படுத்திக்



கொள். அதற்குள் சம்பளம் வந்துவிடும்! இந்தக் குழந்தை வேண்டுமா, இல்லையா என்று சற்று சீக்கிரமாகவே முடிவு செய்! காலம் கடந்து விட்டால், ஒன்றும் செய்ய முடியாது.''

கனிவோ, பாசமோ இல்லாத இயந்திரக் குரலில் பார்வதி பேசியது, ஏதோ ஒரு வகையில், ரஞ்சனியைத் திடப் படுத்தியது. அத்தை சொன்னது போல, முடிவெடுக்க வேண்டியது அவளேதானே!

நரேந்திரன் எப்படியோ? ரஞ்சனியுடையது, உண்மையான காதல்தானே! அந்தக் காதலில் உருவான குழந்தையை எப்படி அழிப்பது?

அதிலும், கண்ணும் மூக்கும் இப்படியிப்படி என்று கற்பனையில் ஓர் உருவத்தையே படைத்து மகிழ்ந்து விட்டாளே! அந்தச் செல்வத்தை எப்படி இழப்பது?

பெற்றுக் கொள்ளப் போவதாக ரஞ்சனி தெரிவித்தபோது, வேண்டாம் என்று பார்வதி வற்புறுத்தவும் இல்லை.

'சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். அப்புறம் உன்பாடு' என்கிற வழக்கமான இயல்புதான்.

திருச்சியில், செல்லம்மா, இன்னும் கொஞ்சம் பிரியம் காட்டினாள். பேறு காலத்தின்போது, ரொம்பவே உதவி செய்தாள்.

அவளுடைய கணவனுக்கு மாற்றல் கிடைத்து, அவள் ஊரை விட்டுச் சென்றபோது, கொஞ்சம் கஷ்டமாக இருந்த போதும், மகனில் மூழ்கி, ரஞ்சனி மற்ற எல்லாவற்றையும் மறந்து போனாள்.

திடுமென, நந்தன் தன் அப்பாப் பாட்டைத் தொடங்கும் வரை, எவ்வளவோ நன்றாகவே இருந்தது.

ஆனால் இப்போது நரேந்திரனும் இங்கே வந்து, பிரச்சினை இரு மடங்காக அல்லவா பெரிதாகி விட்டது! இரு மடங்கா? பதின் மடங்கு!

பார்வதியிடம் விவரம் சொல்லி, ஆலோசனை கேட்கலாமா என்று யோசித்தாள். ஆனால், தப்பைச் சகிக்காத தலைமை ஆசிரியை அவள். சொன்ன பேச்சைக் கேட்காவிட்டால், நந்தனுக்குத் தண்டனை கொடு என்பாள். பிள்ளை தந்தைக்காக ஏங்குவது புரியாது! வாய் திறந்து கேட்ட பிறகு, அத்தை சொல்லும் ஆலோசனைகளைப் புறக்கணிக்க முடியாது. அத்தோடு, எத்தனையோ ஆண்டுகளாகத் தேவைப்படும் தீர்மானங்களை, ரஞ்சனி அவளேதானே செய்திருக்கிறாள்!

இப்போது மட்டும் என்ன மாற்றம்?

நரேனைப் பார்த்த பிறகு, மனோதிடம் குறைகிறதா? கூடாதே!

மறுநாளும் காலையிலேயே விழிப்புத் தட்டிவிட்டது. தன்னையறியாமல், உலாவச் செல்லக் கால்கள் கிளம்பின.

ஆனால், வாயிலை அடைந்ததும் மூளை பலம் பெற்று யோசித்தது. யோசித்துவிட்டு, இன்னொரு புறமாக நடந்தாள். அந்த வழியில்தானே, நரேந்திரன் வருவான்?

அவனைப் பார்ப்பது எதற்கு? அப்புறம் துடிப்பதுதான் எதற்கு?

ஆனால், மறு திசையில் செல்லக் காலைச் சற்றுப் பிடிவாத மாகத்தான் நகர்த்த வேண்டியிருந்தது.

பசும் புல்லும், ஊடே சிறுசிறு புதர்களும், அவைகளில் நீலமும் மஞ்சளும், இளம் சிவப்புமாகச் சின்னச் சின்னதாய்ப் பூக் குவியலும், அவற்றின் மேல் காலைப் பனித் துளிகளுமாகப் பார்த்துக் கொண்டே நடக்கையில் ரஞ்சனி மெல்ல அமைதியடைந்தாள்.



அங்கங்கே உடை மரங்களும், தொண்ணூறு டிகிரி நேர் கோணத்தில் இரட்டை இரட்டையாக அவைகளின் சாம்பல் பூசிய கூரிய முட்களும், வளையம் வளையமாகக் காதணிகளைப் போலத் தொங்கிய காய்களும், வேறு எங்கே காணக் கிடைக்கும்?

ஒருவாறு மனம் லேசாகிவிட, ஓர் இளம் முள்ளைப் பறித் துக் கடித்து, அதன் துவர்ப்பு கலந்த இனிப்பை ரசித்தவாறே அவள் நடந்தபோது, சட்டென எல்லாம் சிதறிப் போயிற்று!

வளைந்து நெளிந்து செல்லும் ஒற்றையடிப் பாதை!

ஒரு வளைவு திரும்பினால், எதிரே நரேந்திரன் வந்து கொண்டிருந்தான்.

வளைவை ஒட்டி நின்ற சிறு மரத்தின் மீது, கோவைக் கொடி ஒன்று அடர்ந்து படர்ந்திருந்ததால், வளைவு திரும்பியதும், இருவரும் நேராக மோதிக் கொள்ளவில்லை! அவ்வளவுதான்!

அவ்வளவு அருகில் அவனைக் கண்டதும், தன்னிச்சை யாகப் பின்னடைந்த ரஞ்சனியின் கால்கள் தடுமாறின.

உதவும் நோக்கத்தோடு நீட்டிய கரங்கள் பட்டு விடாமல், மேலும் பின்னே நகர்ந்தபடி, "சே, இங்கேயும் நீங்களா?" என்றாள் அவள் ஆத்திரத்தோடு.

"என்ன செய்வது? உலகம் ரொம்பச் சின்னதாகி விட்டது என்று எல்லோரும் சொல்வது நிஜம்தான் போல இருக்கிறது!" என்றான் அவன்.

"அந்தப் பக்கம் போனால், உங்களைப் பார்க்க நேருகிறதே என்று இந்தப் பக்கமாக வந்தேன். இங்கேயும்... கடவுளே! இந்த

ஊரில், சுதந்திரமாக உலாவக் கூட முடியாதா?'' என்று ரஞ்சனி எரிச்சல் பட, முகத்தில் அடித்தாற் போல ஒரு பதில் வேறிடத்தில் இருந்து வந்தது!

''உண்மையாகவே நருவைத் தவிர்க்க எண்ணுகிறவள் வேறு வழியில் சென்றிருப்பாள்! இது நரேந்திரன் இடம் என்று, உனக்குத் தெரியாமலா இருக்கும்? சும்மா என்ன பேச்சு?'' என்றவள், அன்று ரயிலில் வந்தவள்! அவனது தோளில் தொத்திக் கொண்டு நின்ற கிளி!

அன்றைக்கும், இதே போலத்தான் பேசினாள். என்னவோ, ரஞ்சனி, நரேந்திரனைச் சந்திக்கவென்றே, இந்த ஊருக்கு வந்த மாதிரி! இன்றும் இளக்காரமாய் அதே குற்றச்சாட்டு!

''இது காலம் காலமாக இருந்து வரும் நடைபாதை! இந்தப் பாதையை யாரும் தன் சொந்தம் என்று சொல்லிக் கொள்ள முடியாது! சந்தேகமாக இருந்தால், உங்கள் 'நரு'விடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்! இப்போது வழியை விட்டீர்கள் என்றால், நான் மேலே நடப்பதற்கு வசதியாக இருக்கும்!''

''உன் வசதியைப் பற்றி எனக்கே...'' என்று அந்தப் பெண் கீச்சிடும்போதே'' வழி விடு, சுந்தரி!'' என்று அவளை நகர்த்தி நிறுத்தினான் நரேந்திரன்.

தான் கேட்டதைச் செய்து கொடுத்தான் கணவன் என்று, ரஞ்சனிக்கு ஆறுதல் உண்டாகவில்லை. மாறாக, அவளைத் தொட்டு நகர்த்தினானே, அப்படியானால் அவளோடு அவனுக்கு எவ்வளவு நெருக்கம் இருக்க வேண்டும் என்ற கேள்வி, நெருஞ்சியாய் நெஞ்சை உறுத்தியது.

பெயர் சுந்தரியா? வருங்கால திருமதி நரேந்திரன் இவள்தான் போல!



மற்றப்படி, மணவிலக்குக் கேட்பானா? அவளும் 'நரு' என்று கொஞ்சினாளே!

''ஸ்ஸ்... ஆ...''

பாதையில் கவனம் இல்லாது, எதையும் பாராத பார்வையாகப் பார்த்துச் சென்றதன் பலனாக, உடை மரத்தின் நீட்டிக் கொண்டிருந்த கிளையின் காய்ந்த முள் ஒன்று, அவளது முழங்கைக்குச் சற்று மேலாகக் குத்தித் தோலைக் கிழித்து விட்டது.

அதிகச் சத்தமின்றிக் குரலை அடக்கி விட்டதாகத்தான் ரஞ்சனி நினைத்தாள். ஆனால், ''என்ன, என்ன?'' என்று நரேந்திரன் ஓடி வரவும், அவளுக்கு முகம் கன்றிவிட்டது.

அவள், அந்த சுந்தரி என்ன நினைப்பாள்?

சும்மாவே, ரஞ்சனி மூச்சு விடுவதே, நரேனின் கவனத்தைக் கவர்வதற்காகவே என்பது போலப் பேசுகிறவள். அவள் மெல்லுவதற்கு அவல் கொடுத்தது போல ஆகிவிட்டதே!

''ஒன்றுமில்லை! ஏதோ ஓடியது போல...'' என்றவாறே, சேலை முந்தானையை விசிறித் தோளில் போட்டுக் கொண்டு மேலே நடக்க முயன்றாள் ரஞ்சனி.

சட்டெனக் கை வீசி, அவளைப் பற்றி நிறுத்தினான் நரேந்திரன்.

அவள் உதறி விடுவித்துக் கொள்ள முயன்றதில், சற்று முன் மூடிய முந்தானை சரிந்து, கரத்தின் காயம் வெளிப்பட்டதோடு, சொட்டுச் சொட்டாக ரத்தமும் கசியத் தொடங்கியது.

''கண்ணை வானத்தில் வைத்துக் கொண்டா நடந்தாய்?'' என்று அதட்டி விட்டுத் தன் கைக் குட்டையை எடுத்தான் நரேந்திரன்.

கணவனின் உத்தேசம் புரிந்து, ''நான் வீட்டில் போய் ஏதாவது மருந்து போட்டுக் கொள்கிறேன்!'' என்று கையை இழுத்தாள் அவள்.

''ஏன், அம்மையார் வருகைக்காக, டாக்டர் சார், இப்போதே வந்து காத்திருப்பாரா? பரவாயில்லை. போகிற வழியெல்லாம் ரத்தத்தைச் சிந்திக் கொண்டு போக வேண்டாம்... நான் தொடுவது உனக்குப் பிடிக்கவில்லை என்று புரிகிறது. சற்று அசையாமல் இருந்தால் அந்தத் துன்பம் சீக்கிரமே முடிந்துவிடும்!'' என்றவன், உதட்டைக் கடித்தபடி, அவள் சும்மா நிற்க, அவள் கையைச் சுற்றிக் கைக்குட்டையால் அழுத்தமாக ஒரு கட்டுப் போட்டு விட்டான். ''இப்போதைக்கு இனி ரத்தம் வராது! வீட்டுக்குப் போய் வேறு ஏதாவது மருந்து போட்டுக்கொள்.''

''ம்...'' என்றாள் இவள் சுருக்கமாக. மிகச் சுருக்கமாக!

மெல்லத் திரும்பி வந்து பார்த்துக் கொண்டு நின்ற சுந்தரிக்கு, நடந்தது எதுவும் பிடிக்கவில்லை. அந்தக் கூலிக்காரியைப் போய், இவன் தொடலாமா? இருபத்து மூன்று வயதில், ஏதோ கிறுகிறுப்பு ஏற்படலாம்! ஆனால், முப்பத்து மூன்று வயதில் முட்டாள்தனம் செய்யக் கூடாது!

ஆத்திரத்தை மறைக்க மாட்டாமல், ''இதற்கா அப்படிக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தாய்? ஏதோ பாம்பு கீம்பு கொத்தி விட்டதோ என்றல்லவா நினைத்தேன்!'' என்றாள் சுந்தரி குத்தலாக. ''ஆமாம், முள் அதுவாகத்தான் கிழித்ததா? அல்லது...''

''போதும், சுந்தரி...'' என்றான் நரேந்திரன் அழுத்தமான குரலில், ''உன் நடைப் பயிற்சி முடிந்து விட்டால், வீட்டுக்குத் திரும்பலாம். எனக்கு நிறைய வேலை இருக்கிறது!'' என்று



நரேந்திரன் வேகமாக நடக்க, சுந்தரியும், ரஞ்சனியை விட்டு, அவன் பின்னே ஓடினாள்.

ரஞ்சனி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தால், நந்தகுமாரன் வெளியே போயிருந்தான்.

அப்போது மட்டுமல்ல, தொடர்ந்த சில தினங்களில், அவன் அடிக்கடி இப்படித்தான் காணாமல் போய்க் கொண்டிருந்தான்.

எங்கே போனாய் என்று கேட்டால், அக்கம் பக்கம் சுற்றிப் பார்த்தேன் என்றான். இதில் பெரிய தப்பு தோன்றாததால், ரஞ்சனியும் அதிகமாகக் குடையவில்லை. புதிய சூழ்நிலையில் தந்தையை மறந்து, நந்தன் சந்தோஷமாக இருக்கிறான் என்றால், அவளுக்கும்தான், வேறு என்ன வேண்டும்?

இந்தச் சமயத்தில்தான், நந்தனைப் பண்ணை வீட்டுப் பக்கம் பார்த்ததாகப் பூக்காரி வந்து சொல்லிவிட்டுப் போனாள். மேலும் ஓரிருவர் இதே மாதிரிச் சொல்லவும், ரஞ்சனி திகைத்தாள்.

தந்தைக்காக ஏங்கும் பிள்ளை, பெற்றவனின் தரிசனத்துக் காகப் பண்ணை வீட்டைப் பார்த்தபடி தவம் கிடப்பது போல ஒரு கற்பனை தோன்றி, அவள் நெஞ்சைக் கசக்கியது.

மகனைக் காரில் நரேந்திரனோடு பார்த்ததாகக் கேள்விப்பட்டபோது, இருவருமாக ஐஸ்கிரீம் சாப்பிட்டதாகத் தெரிய வந்தபோது, அதுவும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

தன் பிள்ளையை இல்லை என்றவனோடு, எதற்கு நெருக்கம்?

இந்த ஐஸ்கிரீமிலும், கார் சவாரியிலும் மயங்கி, நந்தன் இன்னுமல்லவா தந்தை ஜபம் செய்வான்?

பிள்ளை மனம் மாறவென்று கூட்டி வந்துவிட்டு, இப்போது எல்லாம் நேர் மாறாக நடந்து கொண்டிருக்கிறதே! அவளுக்கும்!

வெகு தீவிரமாக யோசிக்கையில், இன்னொன்று தோன்றியது.

மகனை அழைத்துக் கொண்டு சுற்று வட்டாரத்தில் எங்கேனும் சென்று வரலாமா என்று நினைத்தாள்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி...

புதுப் புது இடங்களைப் பார்க்கையில் நந்தனின் மனம் அதில் பதியுமல்லவா?

அத்தை பார்வதியின் உடல் நிலையிலும், இப்போது பெரும் முன்னேற்றம் கண்டிருந்தது. எனவே, மகனோடு எங்கேனும் போய் வருவதில் தப்பில்லை.

இது பற்றிப் பார்வதியிடம் அவள் கூறியபோது, அவளும் சந்தோஷமாகவே அனுப்பி வைத்தாள். நந்தனுக்கு ஏதாவது வாங்கிக் கொடு என்று பணமும் கொடுத்தாள்.

தன்னிடம் இருப்பதாகச் சொல்லி, ரஞ்சனி பணத்தை மறுத்தபோது, "வாங்கிக் கொள், ரஞ்சி! நந்தன் யார்? எனக்குப் பேரன் மாதிரிதானே! அவனுக்குக் கொஞ்சம் கொடுப்பதில் நான் குறைந்து விட மாட்டேன்!" என்று, வற்புறுத்திப் பணத்தைக் கொடுத்தாள் பெரியவள்.

நெல்லையப்பர் கோயில் வரலாற்றைச் சொல்லி, அங்கிருந்த சங்கீத ஸ்வரத் தூண்களைத் தட்டிக் காட்டவும், நந்தன் உற்சாகத்தில் துள்ளிக் குதிக்க, அவள் மனம் எங்கோ போய் ஏதோ எண்ணித் தவித்தது.

அதை விடவும், "இதையெல்லாம் அப்பாவும் நம்மோடு சேர்ந்து பார்த்தால், மிகவும் நன்றாக இருக்கும்! என்னம்மா?"



என்று மகன் கேட்கவும் அவளுக்குத் தூக்கி வாரியே போட்டு விட்டது.

சின்னப் பிள்ளை! மனதில் இருப்பதை அப்படியே சொல்லி விட்டான்!

"நன்றாகத்தான் இருக்கும்..." என்று தன்னை மீறிச் சொல்லியவள், உடனே சமாளித்து, "ஆனால், அதெல்லாம் நடக்கிற காரியம் அல்ல, நந்து. நம்மோடு வர அவருக்குப் பிடிக்காது! வர மாட்டார்! அதனால் அசட்டுத்தனமாகப் பேசக் கூடாது!" என்றாள் அன்னை.

"அப்படி யெல்லாம் ஒன்றும் கிடையாது! அப்பா நல்லவர் தான்! நீ, அவரைத் திட்டி, விரட்டியிருப்பாய்! இப்போது கூப்பிடவும் இல்லை! அதனால்தான், அப்பா வரவில்லை!"

திகைத்துப் போனாள் ரஞ்சனி. அப்பா மோகம், இவ்வளவுக்கா தலைக்கேறி இருக்கிறது?

பொறுமையைக் கைவிடாமல், மகன் கையைப் பற்றி, "இதெல்லாம் உனக்குப் புரியாது, கண்ணா! நீ இன்னும் கொஞ்சம் பெரியவன் ஆனதும், எல்லாம் சொல்லுகிறேன். அதுவரை, எதையாவது யோசித்து மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே!" என்றாள் தாயார்.

கிட்டத்தட்ட இதேபோலத் தந்தையும் சொன்னது நினைவு வந்ததாலோ, என்னவோ, சிறு யோசனையின் பின், நந்தன் மேலே ஏதும் பிடிவாதம் பிடிக்காமல், நல்லபடியாக நடந்து கொண்டான்.

பெரிய துணிக் கடைக்குள் நுழைந்து, நந்தனுக்குச் சில ரெடிமேடு உடைகளைத் தேர்ந்து எடுத்துக் கொண்டிருந்த போது, "உலகம் சின்னதுதான் என்பது, ரொம்பவே சரிதான்

போலத் தெரிகிறதே!'' என்றது. ரஞ்சனியின் காதருகே ஒரு குரல்.

குரலுக்குரியவன் யார் என்று அறிய, ரஞ்சனி தலையைத் திருப்பிப் பார்க்க வேண்டி இருக்கவில்லை!

## 11

இன்னமும் ஐம்பது ண்டுகள் தனித்தே வாழ நேர்ந்தாலும், கண் காது என்று உறுப்புகள் செயல் மங்குகிற காலத்திலும்கூட, இந்தக் குரல் தனக்குத் தெரியாமல் போகாது என்பது, ரஞ்சனிக்கு நிச்சயமாயிற்று!

அத்தோடு, யார் என்று யோசிக்கிற அவசியமே இல்லாமல், ''அப்பா!'' என்று உற்சாகத்தில் துள்ளிக் குதித்தான் பையன்.

அருகில் விரைந்து, அவன் கையைப் பற்றிக்கொண்டு, ''நான் நினைத்துக் கொண்டே இருந்தேன்ப்பா. நீங்கள் வந்தால் நன்றாக இருக்கும் என்று அம்மாகிட்டே கூடச் சொன்னேன்! வேணுமானா, நீங்களே கேட்டுப் பாருங்கள்!'' என்றான்.

''கேட்பானேன்? எனக்கே தெரியுமே! ஆனால், உன் அம்மாவுக்குத்தான் நான் வருவது பிடிக்காது!'' என்றான் நரேந்திரன் இலகுவாக.

''இல்லைப்பா! நீங்கள் வந்தால் நன்றாகத்தான் இருக்கும் என்று அம்மாகூடச் சொன்னாங்கப்பா!'' என்று போட்டு உடைத்தான் பிள்ளை.

நரேந்திரனின் பார்வையை நேரடியாகப் பார்க்கா விட்டாலும் ரஞ்சனியால் உணர முடிந்தது.



காது மடல் வரை சிவந்துவிட, சட்டெனத் திரும்பி, ''எடுத்து வைத்தவைகளுக்கு பில் போடுங்கள், இது போதும்!'' என்று பில் போடுவதில் கவனம் செலுத்துவது போல நின்று கொண்டாள்.

''இந்த ஊரில் என்னவெல்லாம் பார்த்தீர்கள்?'' என்று பிள்ளையிடம் விசாரித்தான் நரேந்திரன்.

நெல்லையப்பர் கோயிலைப் பற்றி நந்தன் அளக்கையில், ரஞ்சனியின் முகம் மீண்டும் சிவந்தது. அவள் மகனுக்குக் காட்டியவையும், அளித்த விளக்கங்களும் நரேந்திரன் மூலமாக அவளுக்குத் தெரிந்தவைதானே!

அந்த ஒரு மாத சொர்க்கத்தில், கூட்டி வந்த இடங்களில், இந்தக் கோயிலும் ஒன்றல்லவா? இங்கேயே மகனை அழைத்து வந்தது பற்றி என்ன எண்ணுவான்? பழைய கதையை அசை போட்டு ரசிப்பதாக நினைக்க மாட்டானா?

அவளும்தான், மகனை இங்கே ஏன் கூட்டி வந்தாளோ?

அப்படியே அவள்தான் மடத்தனமாக வந்தாள் என்றால், இன்று பார்த்து, நரேந்திரனும் இந்தத் திருநெல்வேலிக்கும் வந்து சேர வேண்டுமா? வந்த இடத்தில், அவர்களைத்தான் சந்தித்தாக வேண்டுமா?

இதுதான் தலைவிதி என்பதா? இவனிடம் முட்டி முட்டிக் குனிவது!

பொம்மை அணிந்திருந்த ஜீன்சைப் பார்க்க மகன் செல்லவும், ''நான்.. நான் நந்தனுக்காகச் சொன்னேன்!'' என்று அவசரமாகச் சொல்லிவிட்டு, ''வா நந்து!'' என்று மகனைக் கூப்பிட்டாள் ரஞ்சனி. ''இப்போது கிளம்பினால்தான் இருட்டுவதற்குள் வீட்டுக்குப் போக முடியும்!''

''நம் காரிலேயே போகலாம்...'' என்று அழைத்தது அவன்தான். நரேந்திரன்!

இந்தத் தூண்டில் எதற்காக? ரொம்ப நல்லவன் போலக் காட்டுவதற்கா? அல்லது, அவள் எப்படியும் மறுத்து விடுவாள் என்ற நிச்சயத்தில், ஒப்புக்காகக் கேட்டானா?

திட்டமிட்டு விரட்டியவன் எதையும் செய்யக் கூடியவன் தான்!

அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போதே, ''ஆமாம்மா, பஸ்சிலே ரொம்பக் கூட்டம்! அதோட, தூக்கித் தூக்கிப் போடுவது வேறே கஷ்டம். அதனால அப்பா கூடப் போகலாம்மா!'' என்று நந்தகுமாரன், தகப்பனை ஒத்துப் பேசவும், மூன்றாவது முறையாக, ரஞ்சனியின் முகம் சிவந்தது.

''ஷ்! சும்மா இரு, நந்து! அவருக்கு என்னென்ன வேலைகளோ? சும்மா ஒரு பேச்சுக்காகச் சொல்லியிருப்பார்! அதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது!'' என்று மகனுக்குப் புத்தி சொன்னாள் அவள்.

''மன்னிக்க வேண்டும்!'' என்று அவள் பேச்சில் நரேந்திரன் குறுக்கிட்டான். ''வேறு வேலை இருந்திருந்தால், காரில் வருமாறு கூப்பிட்டிருக்கவே மாட்டேன்! இதோ சாவி! போய்க் காரில் உட்காருங்கள். உங்கள் பின்னோடேயே, ஐந்தே நிமிஷங்களில் வந்து விடுகிறேன்!'' என்று கார் சாவியைப் பையனிடம் கொடுத்து அனுப்பினான்.

திரும்பிப் பாராமல் காரை நோக்கிப் போவது, ரஞ்சனிக்குச் சிரமமாக இருந்தது.

திருமணமான புதிதில், ரஞ்சனிக்கு இதே கடையில் சல்வார் வாங்கிக் கொடுத்திருக்கிறான்! அந்த சுந்தரிக்கு எதையேனும் வாங்கத்தான் பின் தங்கினானா?



அப்படி வாங்குகிறவன், வாங்கிக்கொண்டு, அப்படியே போக வேண்டியதுதானே? இடையில் நந்தனைச் சீண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பானேன்?

யோசிக்கையில், அதுவும் தீராத குழப்பம்தான்!

கருவையே தன்னதில்லை என்று மனச்சாட்சியே இல்லாமல் மறுத்தவன், பிள்ளையின் ஒட்டுதலை மட்டும் ஏற்றுக் கொள்கிறானே! அப்படியானால், மாமியார் சொன்னதுதான் சரியா? அவள்தான் அலுத்துப் போனாளா? ஆனால், அவளுக்கு மட்டும்...

மொத்தத்தில், இங்கே வந்தது, அவளுக்குத்தான் நரக வேதனையாகி விட்டது.

''அம்மா, வாங்கம்மா!''

நரேந்திரனின் கார் கதவைத் திறந்து வைத்திருந்தான்.

முன்புறம் ஏறப்போன மகனை அவசரமாகத் தடுத்தாள் அவள். அந்தச் சுந்தரி, இடையில் எங்கேனும் வந்து ஏற மாட்டாள் என்று என்ன நிச்சயம்? வந்து இறங்கச் சொன்னாள் என்றால், மகாக் கேவலம் ஆகிப் போகும்!

அவர்கள் கண் மறைந்ததும், ''அந்தச் சிறுவனுக்கு எந்த சைஸ் வாங்கினார்கள்?'' என்று கடை விற்பனையாளரிடம் நரேந்திரன் விசாரித்தான்.

நரேந்திரனின் கையில் இருந்த பையில் ரஞ்சனியின் கவனம் இருக்க, காரின் அருகே வந்ததும், அவன் முகம் சுழித்தான்.

''நான் என்ன, உங்கள் வீட்டுக் காரோட்டியா? நீங்கள் இருவரும் பின்புறம் அமர்ந்து, நான் காரை ஓட்டினால், பார்க்கிறவர்களுக்கு அப்படித்தானே தோன்றும்?''

நந்தன் துள்ளிக்கொண்டு, காரை விட்டு இறங்கி விட்டான். ''அம்மா, நான் முன்னால உட்காரப் போகிறேன்!''

''இப்போது, உன் அம்மா வேலைக்காரி ஆகிறாளாக்கும். அம்மாவையும் முன்னே கூப்பிடு, நந்தன். இந்தக் காரில் மூன்று பேர் தாராளமாக முன்னே உட்காரலாம்!''

''பரவாயில்லை! நான் பின்புறமே அமர்ந்து கொள்கிறேன். யார் வேண்டுமானாலும், என்னை என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும்!'' என்றாள், அவள் அலட்சியமாக.

''உன்னிஷ்டம்! ஆனால், கொஞ்ச நேரத்தில் அங்கங்கே கட்டி வைத்திருக்கும் சாமான் மூட்டைகளை உன் பக்கத்தில், மடியில் அடுக்குவார்கள். பரவாயில்லையா?''

அவள் புருவம் சுழித்து நோக்கவும், ''ஏன்? நீ இங்கே வந்தது தெரிந்து பின்னோடு துரத்திக் கொண்டு வந்து, உன்னைத் தேடிச் சுற்றிக்கொண்டு இருந்தேன் என்று எண்ணினாயா? பண்ணைக்குச் சாமான் வாங்கத்தான் வந்தேன். டிக்கியில் உர மூட்டைகள் கூட இருக்கின்றன! ஐயமிருந்தால் பார்க்கிறாயா?'' என்றான் கணவன்.

அவன் குரலில் இருந்த சிறு ஏளனம் உசுப்ப, சட்டெனக் காரிலிருந்து இறங்கி, முன்புறம் ஏறினாள் அவள்.

மடத்தனம் புரிபட்டு, அவசரமாக இறங்குமுன், ''நீ ஓரமாக உட்கார்ந்துகொள், நந்து! வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டே போகலாம்!'' என்று மகனைப் பணித்து, அவள் ஏறியதும், கதவைச் சாத்திவிட்டு, மறுபுறமாக வந்து, தானும் ஏறிக்கொண்டான் நரேந்திரன்.

அவனது அருகில் இறுகிப் போய் அமர்ந்திருந்தாள் ரஞ்சனி!



அன்று, தன் இடத்தில் அந்தச் சுந்தரி அமர்ந்து வருவதா என்று தவித்தாள். இன்று, இவனுக்கு இவ்வளவு நெருக்கமாக அமர்ந்து எப்படிப் போவது என்று, அதுவும் தவிப்பாகத்தான் இருக்குது!

முன்தினம், கையில் கட்டுக் கட்டி விட்டதே, மின்சாரம் பாய்ந்தது போல, நாள் முழுவதும் உடல் சிலிர்த்துக்கொண்டே இருந்தது! இப்போது என்ன ஆகுமா... என்று உள்ளம் அலை பாய்ந்த போதும், இந்த அமைப்பை மாற்றி அமரவும் அவளால் முடியவில்லை.

முடிந்தவரை மகனை ஒட்டி ரஞ்சனி அமர்ந்திருக்க, இது, அது என்று மகனிடம் பேசியபடியே நரேந்திரன் இலகுவாகக் காரை ஓட்டினான்.

ஏதாவது வாகனத்தைச் சுற்றிக்கொண்டு முந்தும்போது, கையை நீட்டி எதையாவது காட்டும்போது, திடுமெனக் காரை நிறுத்தும்போது... இப்படிப் பல தருணங்களில் கணவன் மீது இடித்துக் கொள்வோமோ, என்று அதே கலவரத்தில், ரஞ்சனி இறுகிப் போய் அமர்ந்திருந்தாள்.

இரண்டொரு முறை, கணவனின் பார்வைகளையும் உணர்ந்ததால், இடையில், ''ஜூஸ் குடிக்கலாம்,'' என்று, ஒரு பழக்கடையின் அருகில், அவன் காரை நிறுத்தியது, அவளுக்கு வியப்பாக இருக்கவில்லை.

''என்ன பழச்சாறு வேண்டும் என்று நீ போய்ப் போடச் சொல்லு!'' என்று மகனை அனுப்பியதும் அப்படித்தான்.

நந்தன் சென்றதும், ''என்ன விஷயம்? இந்தக் காரில், நந்தனும் இருக்கையில், உன்னை நான் என்ன பண்ணி விடுவேன் என்று உனக்குப் பயம்?'' என்று கேட்டான் நரேந்திரன்.

என்னை நானே காட்டிக் கொண்டு விடுவேனோ என்பதுதான் என் பயம் என்று சொல்ல முடியுமா?

வேறு பதிலுக்காக வார்த்தைகளை அவள் தேடியபோது, "பயமோ, இல்லையோ, சாதாரணமாக இருக்க முடியவில்லை. அப்படித்தானே? எதை, எவ்வளவு அலட்சியமாக நினைத்து நடந்திருந்தாலும், சிலதை ஒதுக்க முடியாது என்பது, இப் போதுதான் தெரிகிறது. இல்லையா? சரி சரி, வா. நந்தன் தேடப் போகிறான்," என்றவாறு, காரை விட்டு இறங்கினான் நரேந்திரன்.

என்ன அலட்சியம்! என்ன சிலது!

அவனது பேச்சு முழுமையாகப் புரியா விட்டாலும், விளக்கம் கேட்கவும் அவளுக்குத் தோன்றவில்லை. அப்படிக் கேட்டுத்தான் என்ன பயன்? அதற்கும் பூடகமாக ஏதாவது சொல்லுவான். அதுவும், அவளைக் குற்றம் சாட்டுவது போலவே இருக்கும்.

அத்தோடு, அவன் என்ன சொன்னாலும், கடந்த காலத்தில் நடந்து முடிந்த எதுவும் இல்லையென்று ஆகுமா? இல்லையே!

இப்போதும்கூட, அவன் முன்பு அவசரப்பட்டு விட்ட தாகவோ, தவறாக எண்ணி விட்டதாகவோ, வருத்தப்பட்டு எதுவும் கூறவே இல்லையே! இன்னமும் தப்பு அவளிடம் என்றுதானே சாதிக்கிறான்?

அவனுடைய தாயார் சொன்னதுதான் சரி போலும்!

மற்றப்படி, யாரோ எப்படியோ போகிறாள் என்று இராமல், ஒரு காலத்தில் பழகிய தோஷத்தில் நரேந்திரன் இப்போது செய்வதைப் பெரிதாக நினைக்கக் கூடாது.

முன் தினம் நரேந்திரன் கைக்குட்டையைக் கட்டி விட்ட இடத்தைத் தன்னை யறியாமல் வருடியபடி, ரஞ்சனி பெருமூச்செறிந்தாள்.



இணையாக இன்னொரு பெருமூச்சின் மெல்லொலி கேட்கவும், திரும்பிக் கணவனைப் பார்த்தாள்.

"நான் பணம் கொடுத்துவிட்டு வருகிறேன், அப்பா!" என்று போய்ப் பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்த நந்தனைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

"மகாபாரதத்தின் அடிப்படை இப்போதுதான் புரிகிறது!" என்றபடி, காரில் மீண்டும் ஏறினான் நரேந்திரன்.

## 12

நரேந்திரன் விரைவிலே இரண்டாவது திருமணம் செய்யப் போவதாக ஒரு செய்தி பார்வதியின் இல்லத்தை எட்டியது.

கொண்டு வந்தவள் பூக்காரி தனம்தான்.

"பண்ணை வீட்டம்மா என் கிட்டயே சொன்னாங்கம்மா! சீக்கிரமாக் கலியாணம் வருது! அப்புறம், பூமுடிப்பு, வளைகாப்பு வரும். பொண்ணு வீடும் பெரிய இடம். நிறைய ஜனம் வரும். அதனாலே, நிறையப் பூ வாங்குவோம்னு சொன்னாங்க. பொண்ணு பேரு சுந்தரியாம்! ஆனா, அந்தப் பொண்ணோட கட்டை முடிக்கும், சட்டைக்கும், அது பூ எங்கே வச்சிக்கப் போகுது?" என்றவள், குரலைத் தணித்து, "ஏம்மா, நம்ம பாப்பாவை மெய்யாவும் அறுத்து விட்டிட்டாங்களா? கேக்கவே கஷ்டமா இருக்கும்மா!" என்று பார்வதியிடம் கேட்டாள்.

"இரண்டு பேருக்கும் மனம் ஒத்துவரவில்லை என்றால், பிரிந்து விடுவதுதானே நல்லது, தனம்? ஆனால், அது பற்றி

முடிவு செய்ய வேண்டியவர்கள், அவர்கள் இருவரும்தானே தவிர, அந்தப் பண்ணை வீட்டம்மா இல்லை. அதனால் அந்தப் பேச்சை விடு. சொல்லு, உன் தங்கைக்கு இது எத்தனாவது மாதம்?'' என்று பார்வதி விசாரிக்க, பேச்சு வேறு திசையில் செல்லலாயிற்று.

பேச்சு வேறு திசைக்குத் திருப்பி விடப்பட்டாலும், தனம் சொன்ன விஷயம், உடைந்த முள் முனையாய், ரஞ்சனியின் மனதில் குத்திக் கொண்டு அசைய மறுத்தது.

மண விலக்குக் கேட்டு நோட்டீஸ் அனுப்பியிருந்தானே! காரணம் இந்தச் சுந்தரிதான் என்று முதலில் அவள் எண்ணியது சரிதான் போலும்!

அவளும், அவனது தேர்வுதான்.

பெற்றவளுக்குப் பணிந்து மண விலக்குக் கேட்கிறாயா என்றதற்குச் சுய மூளை இல்லையா என்றானே! அதிலிருந்தே தெரியவில்லையா, பெண்ணும் அவனது தேர்வு என்று! ஆனால் இது பெற்றவளும் ஒத்துக் கொண்டுள்ள தேர்வு! பெரிய இடத்துப் பெண்! கீழ் மட்டத்துப் பழக்க வழக்கங்களால் வெறுத்துப் போகாது!

போகட்டும்! இனியேனும் நிம்மதியாகப் பல்கிப் பெருகி வாழட்டும்!

ஆனால்... ஏதோ பொருந்தாமல் உறுத்தியது.

என்னவோ, அவனுக்குக் குழந்தையே பிறக்காது என்று மருத்துவரே கூறியதாகச் சொன்னானே! இப்போது மட்டும் பல்கிப் பெருகுவது எப்படியாம்?

எந்தத் தைரியத்தில், மீண்டும் மணக்கிறானாம்?

மீண்டும் சகுந்தலா தேவி சொன்னதுதான் சரியென்று ஆகிறது!



அவளிடம்தான் வெறுப்பு!

ஆனால், அதற்காக அநியாயப் பழி சுமத்தலாமா? கட்டாயமாக, அவனிடம் கேட்க வேண்டும்! விடவே கூடாது!

இத்தோடன்றி, இன்னொருத்தியை மணக்கப் போகிறவன், அவளுடைய பிள்ளை மனதைக் கெடுப்பானேன்?

அப்பா நல்லவர்தான் என்று நந்தன் அவளைக் குற்றம் சாட்டியது நினைவு வர, ரஞ்சனிக்கு நெஞ்சு கொதித்தது.

எவ்வளவு நல்ல அப்பா! இதைப் பற்றி எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்ளுகிற வயது, நந்தனுக்கு இன்னும் ஆகவில்லையே! இப்போதைக்குக் கார் சவாரியும், ஐஸ்கிரீமும்தானே பெரிதாகத் தோன்றுகிறது!

எப்படியும், நரேந்திரன் பிள்ளையிடம் பழகுவதையாவது நிறுத்தி ஆக வேண்டும்! அவன் இன்னமும் அதிகமாக ஏங்கும்படி விட்டுவிடக் கூடாது!

இந்தத் தீர்மானத்தை ரஞ்சனி உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய நிலை, விரைவிலேயே வந்து சேர்ந்தது.

திருநெல்வேலித் துணிக்கடையில் நரேந்திரன் வாங்கியது, நந்தனுக்குத்தான். அவன் அணிய விரும்பிய முழுக்கால் ஜீன்ஸ் பான்ட் இரண்டு வாங்கியிருந்தான்.

ஆனால், அதை அன்றே கையில் கொடுத்துவிடவில்லை.

ரஞ்சனியின் முன்னிலையில் கொடுத்தால், ஏற்க மறுத்து, உடனே திருப்பி விடுவாளே!

பெற்ற தாயை எதிர்த்து, வைத்துக்கொள்ளுமாறு அவள் முன்னிலையிலேயே சொல்லவும் முடியாது!

இதனாலேயே, நரேந்திரன் தான் வாங்கியது என்ன என்று காட்டவும் இல்லை. ஓர் இணுக்குக் கூட வெளியே தெரிந்து

விடாமல், பை மேல் பை போட்டு மடக்கித் தன் அருகிலேயே வைத்துக் கொண்டான்.

மறுநாள் எப்படியாவது, நந்தன் தன்னைச் சந்திப்பான் என்பது அவனுக்கு நிச்சயம்! தாயின் இடையூறு இல்லாமல் அப்போது கொடுத்துக் கொள்ளலாமே!

புத்திசாலிப் பையன், பண்ணை வீட்டில், அவனுக்கு வரவேற்பு இருக்காதோ என்ற ஊகத்தில், உள்ளே நேராக வந்து நிற்க மாட்டான். ஒரே ஒரு தரம் வாயிலில் நின்று விசாரித்துவிட்டுப் போனதோடு சரி. அன்று கிடைத்த விசித்திரப் பார்வைகளில், அதன் பிறகு அவனே ஒதுங்கிக் கொண்டான்.

ஆனால், தந்தை என்று எண்ணியவனை விடவில்லை! வீட்டிலிருந்து, அவனது கார் செல்லக் கூடிய இரு வழித் தடங்களில் ஏதாவது ஒன்றில் காத்திருப்பான்.

அதை அறிந்ததில் இருந்து, நரேந்திரனும், ஒன்றில் நந்தன் இல்லாவிட்டால், அடுத்ததிலும் போய்ப் பார்த்துவிடுவான். ஆசையோடு காத்திருக்கும் சின்னப் பையனை எப்படி ஏமாற விடுவது?

அத்தோடு, பையனோடு பேசிக் கொண்டிருப்பது, விசித்திர மான வகையில் நரேனுக்கும் நன்றாகத்தான் இருந்தது.

அவன் எதிர்பார்த்தது போலவே, வெளியே செல்லும் போது, வழக்கமான ஓர் இடத்தில் நந்தன் வந்து நின்றான்.

சிறுவனைக் காரில் ஏற்றிக் கொண்டு, இரு ஜீன்ஸ் பான்ட்களையும் எடுத்துக் கொடுத்தான்!

நந்தனின் மகிழ்ச்சியைப் பார்த்து நரேந்திரனுக்கு உள்ளூரச் சிறு வலி உண்டாயிற்று.



மகாபாரதத்தை நினைத்ததாலோ என்னவோ, நந்தனைப் பார்க்கையில் உண்டாகும் சிறு உறுத்தல் இன்று அடியோடு ஏற்படாததோடு, இவனுக்கு இன்னும் நிறைய வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்ற ஏக்கம் கூடத் தோன்றி விட்டது.

கண்களில் நீர் மின்ன, "தாங்க்ஸ்ப்பா! ரொம்பத் தாங்க்ஸ்ப்பா!" என்ற நந்தனுக்குச் சற்று நேரம் வேறு ஒன்றுமே சொல்ல முடியவில்லை.

பிறகே, "ரொம்ப அழகான கலர்கள், அப்பா! இந்த நீலமும், கறுப்பும்தான் நான் ரொம்ப நாளாக ஆசைப்பட்டுக் கொண்டே இருந்ததுப்பா! ரொம்பத் தாங்க்ஸ்ப்பா!" என்று துணியை ஆசையாகத் தடவிக் கொடுத்தான்.

ஆனால், சிறிது நேரத்திலேயே, நந்தனின் முகம் வாடி விட்டது. "இதை வீட்டுக்கு எடுத்துப் போக முடியாதேப்பா! அம்மா திட்டுவாங்க! திருப்பிக் கொடுத்திட்டு வான்னு. சொல்லுவாங்களே! யார் கிட்டேயும், எதையும் வாங்கிக் கொள்ளக்கூடாது என்று ரொம்பக் கண்டிப்புப்பா, அம்மா!" என்று விவரம் சொன்னான் பையன்.

நல்ல வளர்ப்புதான் என்று உள்ளூரப் பாராட்டிய போதும், நரேந்திரன் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. இப்போதைய பிரச்சினைக்கும், அந்தப் பாராட்டுக்கும் ஒத்துப் போகாதே!

சற்று யோசித்துவிட்டு, "நந்து, ஒன்று செய்! உன் பாட்டி வீட்டுப் பின்புறமாக உன்னை இறக்கி விடுகிறேன்! யாருக்கும் தெரியாமல் பையை உள்ளே கொண்டு வைத்துவிடு! காலையில், அம்மா குளிக்கிற நேரத்தில் இதில் ஒன்றை அணிந்துகொள். அம்மா குளித்து முடித்து வந்ததும், காட்டு.

அணிந்து விட்டதைத் திருப்பிக் கொடுக்க முடியாதல்லவா? அம்மா திட்டினால், பேசாமல் பொறுத்துக் கொள். ஏனென்றால் கஷ்டப்படாமல் எதுவும் கிடைக்காது! திட்டி முடித்ததும், அப்புறமாகக் கெஞ்சிக் கொஞ்சிச் சமாளித்துவிடு!'' என்று நரேந்திரன் சொல்லிக் கொடுத்தான்.

தகப்பன் சொல்லிக் கொடுத்ததையே, அச்சுப் பிசகாமல் மகனும் செய்தான்.

முதல் பகுதியை மட்டும்!

முழு நீளப் பான்ட் அணிந்து வந்து நின்ற மகனைப் பார்க்கையில், முதலில் ரஞ்சனியால் ஒன்றுமே பேச முடியவில்லை.

அரைக்கால் சட்டையில் தெரியாத வளர்ச்சி, இதில் தெரிய, தந்தையைப் போல உயரம் என்ற எண்ணம் தோன்றும்போதே, அவளுக்கு மனம் கொதிக்கலாயிற்று.

இதை, அவன், நரேந்திரன்தான் வாங்கிக் கொடுத்திருக்க வேண்டும்! மிகவும் சரியாக அமைந்திருந்த அளவு, இந்த ஜீன்சை அவன் எப்போது வாங்கியிருக்க வேண்டும் என்பதை உணர்த்தியது! கூடச் சென்ற அவளுக்குத் தெரியாமல், மகனிடம் கொடுத்திருக்கிறான்! பிள்ளை ஆசைப்பட்ட நிறம் வேறு! எல்லாமே, அவர்கள் இருவருக்குள் எவ்வளவு நெருக்கம் இருக்கிறது என்பதைப் பறைசாற்றின.

எல்லாவற்றையும் அவள் அறியாமல் மறைத்தும் இருக்கிறார்கள்... திட்டமிட்டு!

அவன்தான் இன்னொருத்தியை மணக்கப் போகிறானே! அவளை நிம்மதியாக இருக்க விடாமல், எதற்கு இந்தச் சீண்டல்?



''நல்லா இருக்கிறதாம்மா?''

வாய்ப்பூட்டு அகன்றாற்போல, ''ஏதடா இது?'' என்றாள் ஆத்திரத்துடன்.

''அஅதும்மா, அ... அப்பா வாங்கிக் கொடுத்தாரம்மா! எனக்கு ஜீன்ஸ் பிடிக்கும் என்றதால்...''

''ஜீன்ஸ் வேண்டும் என்று, அவரிடம் போய்ப் பிச்சை கேட்டாயாக்கும்? வெட்கமாக இல்லை! முதலில் அதைக் கழற்றித் தூர எறி!'' என்று சீறினாள் தாய்.

அவளுடைய பிள்ளையல்லவா? பிச்சை அது இது எனவும் நந்தனுக்கும் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

''மாட்டேன். இதைக் கழற்ற மாட்டேன்!'' என்று கத்தினான் அவன். ''அப்பா தருவதை வாங்குவதில் பிச்சை என்னம்மா? நீங்கள் தரவில்லை? வர வர நீங்கள் ரொம்ப மோசமாகி விட்டீங்கம்மா! இவ்வளவு நல்ல அப்பாவைப் பிடிக்கவில்லையே! ரொம்ப ரொம்ப மோசம்! எனக்கு உங்களைப் பிடிக்கவே இல்லை! போங்கள்!'' என்று கத்திவிட்டு, வீட்டை விட்டுத் தோட்டத்துக்குள் ஓடிவிட்டான்.

பிரித்து விட்டான்! தாயையும் மகனையும் பிரித்து விட்டான்!

அவன்தான் தன்னது இல்லை.. வேண்டாம் என்றானே! இப்போது, அவளுக்கும் பிள்ளைக்கும் இடையே ஏன் வருகிறான்? அவளையே பிடிக்கவில்லை என்று, பிள்ளையைச் சொல்ல வைத்துவிட்டானே!

சின்னப் பிள்ளை! நந்தனுக்கு என்ன தெரியும்? அதையும் இதையும் கொடுத்து, நரேந்திரன் அல்லவா கெடுக்கிறான்!

இல்லை, இதை இப்படியே விட முடியாது.

எப்போது உன்னைப் பிடிக்கவில்லை என்கிற அளவுக்கு நந்தன் பேசிவிட்டானோ, அதற்கு மேல் பொறுத்துப் போவது, ரொம்பத் தப்பு! முட்டாள்தனம்!

மடமடவென்று கிளம்பி, காலில் செருப்பை மாட்டுகையில், ஒரு சிறு தயக்கம் உண்டானது.

அங்கே யார் யார் இருக்கிறார்களோ? சகுந்தலாதேவி, அந்தச் சுந்தரி... சும்மாவே, அவனுக்காக அலைவதாகச் சொல்லுவாள்!

இருக்கட்டும்! என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்! அதையெல்லாம் பொருட்படுத்திக்கொண்டு சும்மாயிருக்க, இனி முடியாது! கூடாது!

அத்தோடு, அவள் என்ன, அவனோடு கொஞ்சிக் கொண்டிருக்கவா போகிறாள்?

'என்னையும் பிள்ளையையும் விட்டு விலகி இரு!' என்றுதானே சொல்லப் போகிறாள்?

இது அவர்களுக்கும் சந்தோஷமாகத்தானே இருக்கும்? உற்சாகத்தில் துள்ளிக் குதிக்காமல் இருந்தால், அதுதான் ஆச்சரியம் என்று எண்ணும்போதே தன்னை மீறிக் கண்ணீர் வந்தது.

எங்கே, எந்த இடத்தில் தப்பாகிப் போனது?

தன்மீதே ஆத்திரத்துடன் கண்ணீரைச் சுண்டி விட்டுக் கொண்டு, உள்ளே வேலையாக இருந்த வள்ளியம்மையை ரஞ்சனி அழைத்தாள். "ஒரு வேலையாக வெளியே போய்விட்டு வருகிறேன். வரக் கொஞ்சம் நேரமாகும். அத்தை தேடினால் சொல்லு!" என்றவள் மேற்கொண்டு அவள் விவரம் கேட்குமுன் மடமடவென்று நடந்து விட்டாள்.



இரண்டு கல் தொலைவு நடக்க வேண்டுமே!

விறுவிறென்று வேகமாக நடந்தவளுக்குக் கண் முன்னே பண்ணை வீட்டின் பெரிய கேட்டைக் கண்டபோது சற்று வியப்புதான்! அதற்குள் வீடு வந்துவிட்டதே!

வெளி கேட் எப்போதும் திறந்துதான் இருக்கும். ஆனால், காவலுக்கு ஆள் இருக்கும்.

ரஞ்சனி வருவதைப் பார்த்த காவலாள், அவளைத் தடுக்காமல் ஒதுங்கியே நின்று கொண்டான். வாழ்ந்தது ஒரே மாதம் என்றாலும், சின்ன எஜமானியாக மரியாதை செலுத்தியிருக்கிறானே!

அங்கங்கே நின்று, வாய் பிளந்து பார்த்த போதும், வேலையாட்கள் யாரும் அவள் பாதையில் குறுக்கே வரவில்லை!

பாவம் பணியாட்கள்! வரவேற்கவும் பயம்! தடுக்கவும் பயம்! மெல்ல ஒதுங்கிக் கொண்டார்கள்.

அந்த நேரத்து வழக்கப்படி, நரேந்திரன் மாடியில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான்.

அதுவும்கூட, ரஞ்சனிக்கு ஆத்திரமாகத்தான் இருந்தது.

இரண்டாவது முறையாக, அவளது வாழ்க்கையைத் தலை கீழாக உருட்டிவிட்டு, இவன் தன் வழக்கத்தில் சிறு மாறுதலும் இல்லாமல், சாவதானமாகப் பத்திரிகை படிக்கிறானா?

காலடியோசை கேட்டு நிமிர்ந்தவன் முகத்தில் தோன்றிய வியப்பு, உடனேயே மறைந்தது.

"ஹலோ! வா. உட்கார்!" என்று வரவேற்றபடி, கையில் இருந்த பத்திரிகையை மடித்து டீபாய் மீது போட்டான். "என்ன

விஷயம்?'' என்று, அவன் நிதானமாகக் கேட்ட விதமே, அவளது ஆத்திரத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது.

''என்ன விஷயம் என்று உங்களுக்கே தெரியும்!'' என்றாள் ரஞ்சனி, வந்த வேகமும் கோபமுமாகக் குரல் நடுங்க!

## 13

ரஞ்சனி நடந்து வந்த தூரத்தைக் கடக்கப் பொதுவாக அரை மணி நேரத்துக்கும் மேலாக ஐந்து பத்து நிமிஷங்கள் ஆகும்! ஓரளவு துரிதமாக நடந்தாலுமே! அதனால்தான் முன்பு அவளுக்கு சைக்கிள் வாங்கிக் கொடுத்திருந்ததே!

இப்போது மனதின் கொதிப்பால், ரஞ்சனி, அதில் பாதியளவு நேரத்தில் பண்ணை வீட்டுக்கு வந்து சேர்ந் திருந்தாள்.

அவ்வளவு வேகமாக நடந்ததில் அவளுக்கு மூச்சு வாங்கிக் கொண்டு இருந்தது. அதற்கு மேலாக, அவன் ரொம்ப சாதாரணமாக வரவேற்று விவரம் கேட்ட விதம் அவளை மேலும் பாதித்து விட்டது.

அன்றாட நிகழ்வு போல, எவ்வளவு இயல்பாக இருக்கிறான்!

அடிக்கடி வந்து போகிற விருந்தாளிக்குப் போல, வா, உட்கார் என்று உபசாரம் வேறு!

அவளது கோபக் குரலைக் கூடக் கவனியாதது போல ஒதுக்கி, ''அங்கிருந்து நடந்து வந்தாய் போல! முதலில் உட்கார். சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு, அப்புறம்



பேசலாம்!'' என்று அங்கிருந்த இருக்கையைக் காட்டினான் நரேந்திரன்.

ரொம்பத்தான் கரிசனம் என்று அதுவும் அவளுக்கு ஆத்திரத்தையே அளித்தது.

''நான் ஒன்றும் இங்கே உட்கார வரவில்லை! முதலி...'' என்று சினத்துடனேயே தொடங்கியவளை இடையிட்டு, ''ஆனால், உட்காரக் கூடாது என்றும் ஒன்றும் இல்லையல்லவா? சொல்லுவதைக் கொஞ்சம் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டு சொல்லலாமே!'' என்று, விடாமல் வீட்டுக்காரனாக உபசரித்தான் நரேந்திரன்.

ஆனால், அவள் ஒன்றும் விருந்தாடி வரவில்லையே! வெட்டிக் கொண்டு போக அல்லவா வந்திருக்கிறாள்! அவனது விருந்துபசாரத்தில், அவள் கொஞ்சமும் மயங்கப் போவதில்லை!

''நின்றுகொண்டும்...'' என்று வேகத்தோடு தொடங்கிய ரஞ்சனி, சட்டெனப் பேச்சை நிறுத்தினாள்.

இவனோடு வாக்குவாதம் செய்ய வேண்டிய விஷயம் இதுவல்ல. இவன் வேண்டும் என்றே, வேண்டாத பேச்சில், நேரத்தையும், அவளது வேகத்தையும் வீணாக்கிக் கொண்டு இருக்கிறான்.

தொப்பென அவள் அமரவும், அவன் எழுந்து மாடிப்படி அருகே சென்றான். ''பேச்சீ...'' என்று அழைத்து, ''ஐஸ் பெட்டியில் ஜூஸ். இருந்தது. சர்க்கரை மிகவும் குறைவாகப் போட்டு, இரண்டு தம்ளரில் ஊற்றி, யாரிடமாவது கொடுத்தனுப்பு!'' என்று உத்தரவிட்டான்.

இருவருக்கும் இனிப்பில் அவ்வளவு நாட்டம் கிடையாது. தந்தைக்குச் சர்க்கரை வியாதி என்று, நரேன் குறைத்திருந்தான்.

அவனுக்கு வேண்டாதது என்று, அவளும் லேசில் சேர்ப்பதில்லை! அதெல்லாம் அப்போது!

முட்டாளின் சொர்க்கத்தில் அவள் மூழ்கிக் கிடந்த காலத்தில் செய்த பைத்தியக்காரத்தனம்!

அவன் திரும்பி வந்து மீண்டும் அமர்ந்ததும், "எனக்குக் குடிக்க எதுவும் வேண்டாம்!" என்றாள் அவள்.

'இந்த வீட்டில் தண்ணீர் குடித்தால்கூட, அதுவும் நஞ்சாகிவிடும்!' என்றது மனது.

"வேர்வை வழிய வேகமாக நடந்து வந்ததில் தொண்டை காய்ந்திருக்கும். எதையாவது குடித்து நனைத்துக் கொண்டால், பேசுவதற்கு எளிதாக இருக்கும்! பயப்படாதே. அது வெறும் பழச்சாறுதான். நஞ்சல்ல!" என்று நரேந்திரன் இதமான குரலில் கூறவும், ரஞ்சனி திடுக்கிட்டுப் போனாள்.

நஞ்சென்று நினைத்தது இவனுக்கு எப்படித் தெரியும்?

தெரிய வழியில்லை. எனவே, வெறும் ஊகம்... ஊகூம், அதுகூட இல்லை! சும்மா பேச்சுக்குச் சொன்னது! அதற்குள் தூக்கிப் போட்டு விட்டதே!

ஆனால், வேலையாள் வந்து, பழச்சாறை வைத்துவிட்டுச் செல்லும் வரை, ஒன்றும் பேச முடியாது!

எப்படியும் சண்டை போட முடியாது!

அதற்காகத்தான் கொண்டு வரச் சொன்னானா? கொஞ்ச நேரம் சும்மா உட்கார நேர்ந்தால் அவளது சூடு தணிந்துவிடும் என்று நினைத்தான் போல! ஆனால், இவன் எத்தனை சுற்றி வளைத்தாலும், நந்தன் பற்றிப் பேசாமல், அவள் விடப் போவதே கிடையாது.



நரேந்திரனின் அசையாத பார்வையை அலட்சியப்படுத்திக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கவும் ரஞ்சனியால் முடிய வில்லை!

எனவே சுற்று முற்றும் பார்த்துவிட்டு, "அத்.. உங்கள் அம்மா எங்கே? அப்புறம்.. அந்தச் சுந்தரி! ஒருவரையும் காணோமே!" என்று விசாரித்தாள்.

"இருவரும் கோயிலுக்குப் போயிருக்கிறார்கள்!" என்ற வன், லேசாக விழியிடுங்கி விரிய, "குல தெய்வக் கோயிலுக்கு! ஏதோ பொங்கலிட வேண்டுமாம்!" என்று விவரம் சொன்னான்.

பொங்கல் சும்மாவா வைப்பார்கள்? ஏதாவது கோரிக்கை நிறைவேறினால்தானே...

"நீங்கள் போகவில்லையா?"

"போயிருந்தால், இங்கே எப்படி இருக்க முடியும்?"

"என்ன? நகைச் சுவையாகப் பேசி விட்டதாக நினைப்பா? கோவிலுக்கு, நீங்கள் ஏன் போகவில்லை என்று கேட்டேன்!"

"அவசியம் இல்லை. போகவில்லை!" என்றான், அவன் சுருக்கமாக.

அடக்கிக் கொள்ள முடியாமல், "எதற்குப் பொங்கல் வைக்கிறார்கள்?" என்று விசாரித்தாள் ரஞ்சனி.

"அம்மா வந்ததும் கேட்டுச் சொல்லுகிறேன்."

என்ன கிண்டலா? இல்லை! அவளைப் பற்றிப் பேசக் கூடாதாம்!

சுள்ளென்று ஆத்திரம் வந்தது ரஞ்சனிக்கு.

"அந்தப் பெண்ணுக்குக் கொஞ்சம் சொல்லி வையுங்கள். காடு மாதிரிப் பறக்கிற கூந்தல், சல்லாத்துணி துப்பட்டாவுக்

கெல்லாம், இந்த ஊரில் உலாவுவது சரிப்பட்டு வராது. உடை மரத்து முள்ளில், இரண்டுமே சிக்கிக் கொள்ளும்! துப்பட்டாவையாவது கிழித்து எடுத்து விடலாம்! தலைமுடி... அதனால், ஆடை அணிகலன், அங்க அசைவு எல்லா வற்றிலுமே, கொஞ்சம் அடக்க ஒடுக்கமாக இருக்கச் சொல்லுங்கள்!'' என்றாள் வேண்டுமென்றே.

வக்கிரமான பேச்சுதான். ஆனால், அவளால் சொல்லாதிருக்க முடியவில்லை. சொன்ன பிறகு, ஏன் இப்படி இறங்கினோம் என்று குன்றலாகவும் இருந்தது. சே! வாயை மூடிக்கொண்டே இருந்திருக்கலாம்.

அவனிடம் ஒரு மாறுபாடும் இல்லை. ''நல்ல யோசனை!'' என்று பாராட்டினான். ''ஆனால், எல்லாம் பெண்கள் விஷயம்! இதை நான் சொல்லுவதை விட, இருந்து, சுந்தரி வந்ததும் அவளிடம் நீயே சொல்லிவிட்டுப் போயேன்! உடனே கேட்டுக் கொள்வாள்!'' என்று அப்பாவிபோலக் கூறினான் அவன்.

சிறு திகைப்புடன் விழி உயர்த்தி, அவனைப் பார்த்தாள் ரஞ்சனி.

இதைப்போய், அந்தச் சுந்தரியிடம், ரஞ்சனியே சொல்வதா? அவள் அதைக் கேட்டுக் கொள்வதா?

சும்மாவே என்னென்னவோ சொல்லுகிறவள்! இப்போது, சிண்டைப் பிடித்து ஆட்டிவிட மாட்டாளா?

பின்னே இப்படி ஏன் சொன்னான் என்று ஆராயும்போது, அவனது கண்ணோரம் சிரிப்பைக் கண்டு பிடித்தாள் ரஞ்சனி.

எல்லாம் வேடிக்கை!

உதடுகள் மலரத் தொடங்கும்போதே, அவளது கண்கள் கரித்தன!



இதுபோலச் சின்னச் சிரிப்புகள்! சின்ன விளையாட்டுகள்! எப்போதும் ஆனந்தம்! இப்போது, ஒன்றுமில்லாமல் போயிற்று!

சுந்தரி இதில் எங்கே வருகிறாள்?

''சுந்தரியை நீங்கள் மணந்து கொள்ளப் போகிறீர்களா?'' என்ற கேள்வி, தன்னையறியாமல் ரஞ்சனியின் வாயில் வந்தது.

நரேந்திரன் அதற்குப் பதில் சொல்லவில்லை. சொல்ல அவகாசமும் இல்லாமல், வேலையாள் ஒருவன் பழச்சாறுடன் வந்து சேர்ந்தான்.

தட்டோடு வைத்துவிட்டுப் போகச் சொன்னான் நரேந்திரன்.

''எடுத்துக் கொள்! ஆனால், நீ வேறு ஏதோ சொல்ல வந்தாயில்லை?''

மீண்டும் சுந்தரி பேச்சை எடுத்துவிடாதே என்கிறானாக்கும்! அதாவது, அவளை இவன் மணக்கப் போவது உண்மை! வெறும் வதந்தி அல்ல!

கிளியாகத் தோளில் தொத்தியதைப் பார்த்த பிறகும், அவளது 'நரூ'வைக் கேட்ட பிறகும், இதெல்லாம் வதந்தியாக இருக்கக் கூடும் என்று ஒரு மெல்லிய நூலளவு நம்பிக்கையில் தொங்கிக் கொண்டிருந்த அவளல்லவா முட்டாள்!

நல்ல வேளையாக அவளது முட்டாள்தனம் முழுமையாக வெளிப்படுமுன், வேலையாள் வந்து சேர்ந்தான்.

இப்போதென்ன? வந்த விஷயம்! நந்தன்! நந்தன் விஷயத்தை முடித்துவிட்டுப் போய்க்கொண்டே இருக்கலாம்! போ... யாக வேண்டும்!

வெகுவாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு ரஞ்சனி நிமிர்ந்தாள்.

''நா...ன் நந்தன் விஷயமாக வந்தேன். தயவு பண்ணி, அவனை விட்டு விலகி இருங்கள். இதைத்தான் சொல்ல வந்தேன்!'' என்றாள், முடிந்த அளவு கடுமையான குரலில்.

''வேடிக்கைதான்!'' என்றான் நரேந்திரன். ''நான் இருக்கும் இடத்துக்கு அழைத்து வந்து, 'உன் தகப்பன்' என்று அவனிடமும் கை காட்டி விட்டு, என்னை மட்டும் விலகியிருக்கச் சொல்லுகிறாயா? பரவாயில்லை. நாடகம் நன்றாகத்தான் இருக்கிறது!'' என்றான் தொடர்ந்து.

என்னவோ, அவள் வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்தது போலக் கூறுகிறானே!

''இந்தப் பிரதேசம் முழுவதுமே உங்கள் சொந்தம் அல்ல! உடம்பு சரியில்லாத என் அத்தையும் இங்கேதான் இருக்கிறார்கள்! அவர்களைப் பார்க்க, நான் இங்கேதானே வரவேண்டும்? அத்தோடு, எங்கேயும் நான் வருவதும், போவதும் என் இஷ்டம்!'' என்றாள் அவள்.

''ஆனால், நந்தனிடம் நான் தகப்பன் என்று ஏன் சொன்னாய்?''

ஏனென்றால், அது உண்மை என்பதால் என்ற வார்த்தைகள், ரஞ்சனியின் தொண்டைக் குழியில் வந்து விடுபடத் துடித்தன.

ஆனால், அதைச் சொல்லி என்ன பயன்? ஏற்கெனவே சொன்னதுதான்! சொல்லிப் பயனற்றுப் போனதுதான்!

''என் காரணம் எனக்குத் தெளிவாக இருக்கிறது! ஆனால், உறவே இல்லை என்றுவிட்டு, ஜீன்சும், ஐஸ்கிரீமும் வாங்கிக் கொடுத்து, நீங்கள் இரட்டை வேஷம் போட வேண்டாம்! இதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்!'' என்று எழுந்தாள் அவள்.



''அன்புக்காக ஏங்கும் ஒரு சிறுவனுக்கு ஆறுதலாக ஒரு செயல் செய்வதற்குப் பெயர் இரட்டை வேஷம் அல்ல! ஆனால், அது பற்றி, அப்புறம் பேசுவோம்! முதலில் உட்கார்ந்து, இதைக் குடி! அன்னாசிச் சாறு உனக்குப் பிடிக்குமே! உனக்குப் பிடித்த மாதிரி, சர்க்கரையும் குறைவாகப் போடச் சொன்னேன்!'' என்று வற்புறுத்தினான் அவன்.

''ஒன்றும் வேண்டாம்!'' என்று ரஞ்சனி உட்காராமல் கைப்பையை எடுக்கவும், ''திரும்பிப் போய்ச் சேருமுன், வாய் உலர்ந்து, தொண்டை காய்ந்து சோர்ந்து போவாய்! கொஞ்சம் குடித்து விட்டுக் கிளம்பு! இந்தா, பிடி!'' என்று ஜூஸ் தம்ளரை எடுத்து அவளிடம் நீட்டினான் அவன்.

அடுத்து, எப்படி நேர்ந்தது என்றே புரியாமல், தம்ளர் சரிந்து, ரஞ்சனியின் சேலை முழுவதும் சிவந்த பழச் சாறால் அபிஷேகம் ஆயிற்று.

''அடடா!'' என்றபடி, பாதியில் தம்ளரை நரேன் பிடித்துவிட்ட போதும், மீதிப் பாதி அவளது சேலையில்தான்!

திட்டுத் திட்டாய்ச் சேலையில் ஊறிக் கொண்டிருந்த திரவத்தைத் தட்டிவிட முயன்றாள் ரஞ்சனி.

தம்ளரை டீபாயில் வைத்துவிட்டு, அவனும் அதே முயற்சியில் ஈடுபட, துள்ளிக் குதித்து விலகிக் கொண்டாள் அவள்.

''சாரி!'' என்றான் அவன். ''சேலையை மாற்றிக் கொள், ரஞ்சனி. உன் பழைய உடைகள் எல்லாம், அப்படியே, அதே அலமாரிகளில்தான் இருக்கின்றன!'' என்றான் தொடர்ந்து.

"வேண்டாம். கொஞ்ச நேரத்தில் காய்ந்துவிடும்!"

"காய்ந்தாலும், கறையாக அசிங்கமாகத் தெரியும்! கறையும் நிலைத்துவிடக் கூடும்! அதைவிட, மாற்றிக் கொண்டு உடனே அலசிப் போட்டால், சேலை பிழைக்கும்!"

இதை ரஞ்சனியால் அலட்சியப் படுத்த முடியவில்லை. அவளது வருமானத்தில், இப்படி ஒரு சேலையைத் தூர எறிய முடியாது. சேலையில் கறை பிடித்து விட்டால், மீண்டும் கட்டிக் கொள்ளவும் முடியாது!

"வேண்டாம், வேண்டாம் என்று சொல்லச் சொல்லக் கேட்காமல்..." என்று குறைப்பட்டவாறு, அவனது அறைப் பக்கம் திரும்பினாள் ரஞ்சனி. அங்கேதான், ஒரு புறத்து அலமாரிகளில், அவளது பொருட்கள் இருந்தன.

சாத்தியிருந்த கதவை அவசரமாகத் திறந்து விட்டவன், ஓர் அலமாரியைத் திறந்து, "இதை அணிந்துகொண்டு சேலையை அலசு! அதற்குள், இந்தச் சட்டைக்கு ஏற்ற சேலை ஒன்றைத் தேடி எடுத்து வைக்கிறேன்," என்று, ஒரு நைட்டியை எடுத்துக் கொடுத்தான்.

பத்து ஆண்டுகளாகப் பூட்டி வைக்கப்பட்டிருந்தது என்றாலும், உயர் ரகத் துணி என்பதால், சற்றே அடைத்த வாசனை தவிர, துணி நன்றாகத்தான் இருந்தது.

ஒட்டியிருந்த குளியல் அறையில், அவனது சோப் இருந்தது.

அதன் வாசனை என்னென்னவோ நினைவுகளைக் கிளப்பிவிட, சற்று நேரம் ரஞ்சனிக்கு ஒன்றுமே செய்யத் தோன்றாமல், கண்ணீர் வழியச் சும்மா நின்றாள்.

இங்கே வந்திருக்கவே கூடாது! ஏங்கி ஏங்கி, அழுது அழுது, மரத்துப் போயிருந்த உணர்வுகள் எல்லாம் தலை தூக்கிப் பேயாட்டம் ஆடின.



இந்தக் குளியலறைக்குள்ளேயே எத்தனை ஆட்டம் போட்டிருப்பார்கள்!

ஓடிப் போய்க் கணவனை இறுக அணைத்துக் கொள்ள வேண்டும் போல எழுந்த ஆவலின் வேகத்தில், ரஞ்சனி மிரண்டு போனாள்.

தன்னைத் தானே கேவலப்படுத்திக் கொள்ளாமல், அத்தை வீடு போய்ச் சேர வேண்டுமே!

பல பெரிய மூச்சுகளை எடுத்து வெளி விட்டாள். சுளீர் சுளீரெனக் குளிர் நீரை முகத்தில் வேகமாக அடித்தாள்.

சேலையில் கறை பட்டிருந்த இடங்களை, அரையும் குறையுமாக வேகமாக அலசிப் பிழியும்போதே, கதவைத் தட்டி, "சேலை எடுத்து விட்டேன், ரஞ்சி!" என்றான் நரேந்திரன்.

"இதோ வந்துவிட்டேன்!" என்றாள் அவள் தெளிவற்ற குரலில்.

மீண்டும் ஒருதரம் முகத்தில் நீர் அடித்துவிட்டுக் குளியல் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தால், அறைக் கட்டிலிலோ, நாற்காலி மேலோ வைக்கப் பட்டிருக்க வேண்டிய சேலை, அவன் கையில் இருந்தது.

அங்கங்கே நீர் பட்டு, நைட்டி உடம்பில் ஒட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்து கூசியபடி, தரையில் பார்வையைப் பதித்தவண்ணம், ரஞ்சனி சேலைக்காகக் கையை நீட்டினாள்.

அப்புறம்... இருவருக்கும் இடையில் கை நழுவிச் சேலை விழ, கணவனின் அணைப்பில் இருந்தாள்.

## 14

இடைப்பட்ட பத்து ஆண்டுகள் நிகழவே இல்லாதது போல... அல்லது பத்தாண்டுப் பிரிவு தந்த வேகம்தானோ, கணவன் மனைவி இருவருமே, ஒருவரை ஒருவர் மிகுந்த தாகத்துடன் நாடினர்.

காற்றுக் கூடப் புகா வண்ணம் இறுக அணைத்துக் கொண்டனர். மூச்சு முட்ட முட்ட முத்தமிட்டனர்.

"பத்து ஆண்டுகளுக்கு, உன்னிடம் மாற்றமே இல்லை, ரஞ்சி!"

முகத்தில் பனி நீரை அடித்தாற்போல, ரஞ்சனி அப்படியே விக்கித்து, விரைத்துப் போனாள்.

பத்து ஆண்டுகள்!

இடைப்பட்ட இந்தப் பத்து ஆண்டுகளை, அவள் எப்படி மறந்தாள்?

என்ன மாதிரி வேதனைக்குள்ளாக்கப் பட்ட பத்து ஆண்டுகள்!

அந்த வேதனைக்குக் காரணம், இந்தக் கணவன் சொன்ன வார்த்தைகள் அல்லவா? அநியாயமாகச் சொன்ன பழி!

அந்தப் பழி நியாயமற்றது என்று ஒத்துக் கொள்ளாமலே அவளை அணைக்கிறான் என்றால், அவளை அவன் என்னமாகக் கணித்திருக்கிறான் என்று அர்த்தம்?

அவனைச் சொல்லி என்ன? அவளும்தான், அத்தகைய பழியைச் சுமத்தியவன் கையில் நெகிழ்ந்துகுழைந்து கொண்டு இருக்கிறாள்!



என்ன கேவலம்!

உடம்பு தீப்பிடித்தாற் போல எரிய, கணவனை உதறிக் கொண்டு, ரஞ்சனி எழ முயன்றாள்.

விடாமல் பற்றியபடி, "ஷ்! என்ன ரஞ்சி?" என்றான் அவன் கனத்த குரலில்.

"சீ, விடுங்கள்!" என்று சீறியவாறு, அவள் முழு மூச்சாய் விடுபடத் துடிக்கவும், அவனே விலகி அமர்ந்து, "இப்போது என்ன?" என்று எரிச்சலாகக் கேட்டான்.

தன் ஈரச் சேலையையே விரைந்து அணிந்த ரஞ்சனி, அவனைச் சுட்டெரிப்பது போலப் பார்த்து, "ஆக, இதற்காகத்தான் பழச்சாறு குடித்து விட்டுப் போகும்படி அவ்வளவு உபசாரமா! வாய் உலர்ந்து விடும், தொண்டை காய்ந்து போகும்! அடடா! என்ன கரிசனம்! பழச்சாறு கொண்டு வரச் சொல்லி, சேலையில் கொட்டி... திட்டம் பிரமாதம்!" என்றாள் ஏளனமும் கோபமுமாக!

"அப்படியே வைத்துக்கொள்ளேன்!" என்றான் அவனும். "நம் இருவருக்குமே, உடல் ரீதியான தேவை இருக்கிறது என்று சொன்னால் ஒத்துக் கொள்ள மாட்டாய்! அதனால்தான் இப்படி உணர்த்தும்படி ஆயிற்று!"

ஆத்திரம் மிக, "பெரிய தேவை!" என்று சீறினாள் ரஞ்சனி. "கேவலம் மிருகங்களுக்குக் கூடத்தான் அது போலத் தேவை இருக்கிறது! அந்த மாதிரி நாமும் நடந்து கொள்வதா?" என்றாள்.

"எதற்கு இவ்வளவு கோபம்? நாம் இருவரும் கணவன் மனைவிதானே? என்ன தப்பு என்று குதிக்கிறாய்?"

"கணவன் மனைவிதான்! நாம் இருவரும் கணவன் மனைவியேதான்! ஆனால், நமக்கிடையே ஒரு மகன் இருக்கிறான்!

என் மகன்! அவன் உங்கள் பிள்ளை இல்லை என்று நீங்களே சொன்ன பிறகு, இது மகாக் கேவலம்!'' என்று படபடவென்று கொட்டித் தீர்த்தாள்.

சற்று மூச்சு வாங்கிக் கொண்டு, ''என் மகனை விட்டு விலகி இருங்கள் என்று கேட்பதற்காக இங்கே வந்தேன்! இப்போது... தயவு பண்ணி, இனி என் முகத்திலும், ஒரு போதும் விழிக்காதீர்கள்!'' என்றவள், பட்டென்று ஒரு கும்பிடு போட்டுவிட்டு, வேகமாகப் படியிறங்கி விரைந்தோடிச் சென்று விட்டாள்.

திரும்பி வந்த வேகம், சென்ற வேகத்துக்குச் சற்றும் குறைந்தது இல்லை!

இம்முறையும், மனம் குமுறிக் கொதித்துக் கொண்டேதான் இருந்தது.

என்ன அநியாயம்! என்ன கேவலம்! இவன் எப்படி, இப்படிச் செய்யலாம்?

ஆனால், அவளை மிகவும் பாதித்தது, தேவை பற்றி அவன் உணர்த்தியதும், அதன் நிருபணமும்!

அவள் நெகிழ்ந்துதானே போனாள்!

அவன் பத்தாண்டுப் பேச்சை எடுத்திராவிட்டால் அடியோடு மூழ்கியிருப்பாளே!

இன்னொரு தரம் இதே போல முயற்சி மீண்டும் அவன் செய்ய மாட்டான் என்று என்ன நிச்சயம்? யோசித்துப் பார்த்தால், செய்யாமல் இருக்க மாட்டான் என்பதுதான் நிச்சயம் என்று தோன்றியது.

இன்னொரு தரம் இந்தச் சோதனை, அவள் தாங்க மாட்டாள். படு கேவலப்பட்டுப் போவாள்!



ஊகூம்! இதற்கு மேல், இங்கே ஒரு நாள்கூடத் தங்கக் கூடாது!

இன்றே கிளம்பிவிட வேண்டும் என்று முடிவு செய்த பிறகு, ரஞ்சனி கொஞ்சம் அமைதியடைந்தாள்.

நடையின் வேகம் சற்றுக் குறையக், கிளம்புவது பற்றித் திட்டமிட முடிந்தது!

அத்தை பார்வதியின் உடல் நிலை எவ்வளவோ தேறியிருந்தது. எனவே, அவளுக்காக ரஞ்சனி அங்கே இருக்கத் தேவையில்லை. சொல்லப் போனால், ரஞ்சனிக்கும், அவளுடைய மகனுக்குமாகப் பார்வதிக்குச் செலவுதான் அதிகம் ஆகிக் கொண்டு இருந்தது. அது பற்றி அவ்வப்போது, ரஞ்சனி சங்கடப்படுவதுண்டு.

ஓய்வூதியத்தில் வாழும் ஒரு வயதான பெண்மணிக்குச் சுமையாக இருக்கிறோமோ என்ற குற்றக் குறுகுறுப்பிலிருந்து, இனி மீளலாம்!

இருபது நாள் லீவு கொடுக்க, நிர்வாகி அவ்வளவு முணுமுணுத்தார்! நாலு நாள் முன்னதாக வேலைக்குப் போனால், அவருக்குக் கொஞ்சம் சந்தோஷமாக இருக்கும்!

முக்கியமாக, நரேன் பார்வையிலிருந்து நந்தனை விலக்குவது!

அதைவிட முக்கியம், அவனால் எட்ட முடியாத தூரத்துக்கு அவளும் போய்விடுவது!

எல்லா நல்லதும், இன்றே கிட்டிவிடும்!

வார தினம் என்பதால், பிரச்சினையின்றி டிக்கெட் எளிதாகக் கிடைக்கும்!

கிளம்புவது பற்றிச் சொன்னபோது, பார்வதியின் முகம் வருத்தத்தைக் காட்டியது. ஏதோ ஒரு விதத்தில் ரஞ்சனிக்கு ஆறுதலாக இருந்தது.

நம்மிடம் உண்மை அன்பு உள்ளவர்களும் இருக்கிறார்கள் என்று ஆகிறதல்லவா?

ஆனால், கிளம்ப முடியாது என்று நந்தன் ஆடித் தீர்த்துவிட்டான்.

கடைசியாகக் கம்பு ஒன்றை எடுத்து, ரஞ்சனி ஓங்கி இரண்டு அடி வைத்த பிறகுதான் வாயை மூடினான்.

குற்றம் சாட்டும் பார்வையுடன் விசித்துக் கொண்டே இருந்த மகனைப் பார்க்கையில், அவளுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால், மகனின் வருத்தம் தீர்க்க வழியில்லையே!

நந்தனின் வருத்தத்தைத் தீர்க்கும் வல்லமை, ஒரே ஒருவனுக்குத்தான் உண்டு! ஆனால், அவன் அதைச் செய்யப் போவது இல்லை.

அவனுக்கு ஆறுதலாகத் தோளை வருடிக் கொடுக்க முனைந்தால் சட்டெனத் தாயின் கையைத் தட்டி விட்டான் பையன்.

அவனுக்குப் பிடித்தமான கார்ட்டூன் புத்தகம் வாங்கினால், அதை அவன் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை.

உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டு வெளியே பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

அம்மா மீது கோபமாம்!

என்ன செய்வது? அவனுக்காக அம்மா உயிரையே விடுவாள் என்று புரிகிற வயது ஆகவில்லையே! அவள் செய்வது, அவனுக்காகவுமே என்பதும் புரியவில்லை!



ஓர் இடைவெளிக்குப் பிறகு, பள்ளி, பழைய நண்பர்களைப் பார்க்கும்போது, பிள்ளை சரியாகி விடுவான் என்று தனக்குத் தானே ரஞ்சனி சொல்லிக் கொண்டாள்.

ஆனால், அவன் சரியாக ஆகப் போவதே இல்லை என்று, அவள் விரைவிலேயே தெரிந்து கொள்ள நேர்ந்தது.

திருச்சி வாழ்க்கை அப்படி ஒன்றும் ஆனந்த மயமாக இருக்கும் என்று எண்ணி, ரஞ்சனி தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டிருக்கவில்லை!

இங்கே பிரச்சினை என்றுதான், அவள் இதை விட்டு ஊருக்குப் போனதே! ஆனால், குறைந்த பட்சமாய் முன்னிருந்த வாழ்க்கையை மட்டுமேனும் அவள் எதிர்பார்த்திருந்தாள் எனலாம். ஆனால், அதுவும் அவளுக்கு இல்லாது போயிற்று!

முதல் பிரச்சினை, அவள் வேலை பார்க்கும் இடத்தில் எழுந்தது!

நிறுவனத்தின் உரிமையாளர், இதை விடப் பெரிய தொழிலில் பங்குதாரராகச் சேரப் போவதாகவும், அதனால் இதை விற்கப் போவதாகவும் வதந்தி நிலவியது. புதிதாக வாங்குகிறவர், தனக்கு நம்பிக்கையான தன் ஆட்களைக் கொண்டு வந்து வைத்துக்கொண்டு, பலரை வேலையை விட்டு நீக்கப் போவதாகச் சொன்னார்கள்.

முன் நடவடிக்கையாக, எல்லோருக்குமே, ஒரு மாத நோட்டீஸ் கொடுக்கப்பட்டது.

எதற்கும் வேறு வேலை தேடிக் கொள்வோம் என்று முயன்றவர்களில் ரஞ்சனி ஒருத்தி. ஆனால், முயற்சிதான் செய்ய முடிந்ததே தவிர, வேலை கிடைப்பதாக இல்லை.

இதே கவலையாக, மூன்றாவது முயற்சியில் தோற்று, மதிய வெயிலில் அவளும், உடன் வேலை பார்க்கும் இன்னும் இரு பெண்களும் சோர்வுடன், ஆனால் வேகமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தனர். மதிய உணவு இடைவேளை முடிவதற்குள் மீண்டும் அலுவலகத்தை அடைந்தாக வேண்டுமே!

அப்போதுதான், பூங்கா சுற்று மதிலின்மீது அமர்ந்து கொண்டு, நந்தன் பீடி குடிப்பதை ரஞ்சனி பார்த்தாள்.

நந்தனா? அவளுடைய செல்லப் பிள்ளையா? பீடியா?

நம்ப மாட்டாமல் திரும்பிப் பார்க்கையில், நந்தகுமாரனும் அவளைப் பார்த்து விட்டது தெரிந்தது. ஆனால், மகன் முகத்தைத் திருப்பிக் கொண்டானே தவிர, ஓடி ஒளியவும் இல்லை, கையில் இருந்த பீடியைக் கீழே போட்டுவிடவும் இ'லலை!

தாய் கண்டுவிட்டது பற்றித் தனக்கு ஒன்றும் பயமில்லை என்று சொல்லாமல் சொல்வது போல அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

நெஞ்சு பதறிப் போயிற்று ரஞ்சனிக்கு.

என்ன செய்வது? என்ன செய்வது? என்ன யோசித்தும் என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை!

மூசுமூசென்று அழுகைதான் முதலில் வந்தது. அழுது, அவன் காலைப் பிடித்துக் கெஞ்சலாமா என்று தோன்றியது. ஆனால், கண்ணீர் விடும் பெற்றோரைப் பிள்ளைகள் மதிப்பதில்லை என்று பார்வதி சொல்லியிருந்தாள்.

முப்பத்தைந்து ஆண்டுகள் அனுபவம் உள்ள ஆசிரியை யின் அறிவுரை!



எனவே, நல்லதனமாகச் சொல்லிப் பார்க்கலாம் என்று மகன் வருகைக்காகக் காத்திருந்தால், அவன் வேண்டும் என்றே தாமதமாக வீட்டுக்கு வந்தான்.

தப்புக்கு மேல் தப்பு செய்யத்தான் செய்வேன், உன்னால் என்ன செய்ய் முடியும் என்று கேளாமல் கேட்கிறானா?

அல்லது, அன்னையிடம் கொஞ்ச நஞ்சம் மிச்சம் மீதி இருக்கும் பயத்தில், பிரச்சினையைத் தள்ளிப் போடும் முயற்சியில் தாமதமாக வருகிறானா?

இரண்டுமே, அவளுக்கு வேதனையாகத்தான் இருந்தது!

கோபத்தையும் வருத்தத்தையும் அடக்கிக்கொண்டு, "பீடியெல்லாம் குடிக்கலாமா? உடம்பு கெட்டு விடுமே!" என்று எடுத்துச் சொன்னாள்.

"என்ன செய்வது? என் சினேகிதர்கள் பீடி குடிக்கிறபோது, நான் மட்டும் குடிக்காமல் இருந்தால், தப்பாக நினைப் பாங்களே!" என்றான் பையன்.

"வேண்டாம்மா! அந்த மாதிரிக் கெட்ட பழக்கங்கள் உள்ள பையன்கள் நல்லவர்கள் இல்லை! அவர்களோடு நீ சேர வேண்டாம்!" என்றாள் தாயார்.

தாயை ஒரு மாதிரிப் பார்த்து, "வேறு வழியில்லையே!" என்றான் சிறுவன்.

"என்னடா சொல்கிறாய்?"

"ஆமாம்மா! அப்பா இல்லாதவன் என்பதால், நல்ல பையன்களோடு சேர முடியாது! எனக்கும் நண்பர்கள் வேண்டாமா? இவர்கள் அப்பா பற்றிக் கேட்கிறதில்லை! அதனாலேதான்!"

ஒன்பது வயதுச் சிறுவனுக்குப் பதில் சொல்ல முடியாமல், ரஞ்சனிதான் வாயடைத்து நின்றாள்.

இவனிடம் பேசிப் பயன் இல்லை என்று உணர்ந்து, அதட்டினாள். ''இதோ பார்! அந்தப் பையன்களோடு சேரக் கூடாது என்றால் கூடாதுதான்! அம்மா பேச்சுக்கு மரியாதை கொடுத்து ஒழுங்காக நடந்து கொள்!'' என்றாள் அதிகாரமாக.

மீண்டும் தாயை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''அதெல்லாம் முடியாதும்மா! நான் இவர்களோடுதான் இருப்பேன்!'' என்றான் அவன் பிடிவாதக் குரலில்.

பின் வாங்க முடியாததோடு, ஆத்திரமும் மிகுந்துவிட, ''சொன்ன பேச்சுக் கேட்காவிட்டால், உதை விழும்!'' என்று மகனை மிரட்டினாள் ரஞ்சனி.

''அம்மா, இந்த மிரட்டலெல்லாம் என்கிட்ட வேண்டாம்! என் சினேகிதர்கள் கிட்டே போய்ச் சொன்னால், அவங்க உங்க கையை ஒடித்துப் போட்டு விடுவாங்க! அதனாலே, ஊரிலே மாதிரி என்னை அடிக்கிற வேலையெல்லாம் வச்சுக்காதீங்க!'' என்று பக்கா ரௌடி மாதிரி ஒரு தலைச் சிலுப்பலோடு நந்தன் சொல்லிவிட்டுப் போகவும், ரஞ்சனி அப்படியே அரண்டு போனாள்.

ஐயோ! என் பிள்ளை நாசமாகி விடுவான் போல இருக்கிறதே என்று கலங்கியவளுக்கு, அத்தை சொன்ன அறிவுரை மறந்து போயிற்று.

மகன் பின்னோடு ஓடி, ''வேண்டாம் கண்ணா! அம்மா உன் கெடுதலுக்குச் சொல்வேனா? அந்தப் பையன்கள் பழக்கம் வேண்டாமடா!'' என்று கண்களில் நீர் வழியக் கெஞ்சினாள்.



இடுப்பில் கை வைத்து நிமிர்ந்து, ''அப்போ, என்னை அப்பாவிடம் கூட்டிப் போ!'' என்று பேரம் பேசினான் பிள்ளை. ''அப்பாவிடம் கூட்டிப் போனால், இவர்களை விட்டு விடுகிறேன்!''

''கடவுளே!'' எனறு தலையில் அடித்துக் கொண்டாள் ரஞ்சனி. ''நந்தும்மா, உன் அப்பா... அவருக்கு நம்மைப் பிடிக்காதும்மா! அவர்.. அவர் உன்னையே வேண்டாம் என்றவர்...'' இந்த வயதுப் பையனுக்கு, இதற்கு மேல் எப்படி விவரிப்பது?

ஆனால், இதையும் ஏற்காமல்; அன்னையின் பேச்சில் நந்தன் குறுக்கிட்டான். ''பொய்! பொய்!'' என்று கிறீச்சிட்டான். ''எல்லாம் பொய்! அப்பாவுக்கு என்னைப் பிடிக்கும்! எனக்கு என்னவெல்லாம் வாங்கித் தந்தார்! நீதான் மோசம்! ரொம்ப மோசம்! அப்பாவோடு இருக்க விடாமல், என்னை அடித்து இழுத்துக் கொண்டு வந்து விட்டாய்! கெட்ட அம்மா! உன் கூடப் பேசவே எனக்குப் பிடிக்கலை!'' என்றவன், கால் ஷூவை உதறிக் கழற்றி உதைத்துத் தள்ளிவிட்டுப் போய்ப் படுக்கையில் குப்புறடித்துப் படுத்துக் கொண்டான்.

அடக்க மாட்டாமல் அழுது தீர்த்தாள் அவனைப் பெற்றவள்.

## 15

நந்தன் கெட்ட சகவாசத்தோடு மட்டும் நிறுத்தவில்லை.

பள்ளிக்குப் போகாமல், ஓர் அரசியல் ஊர்வலத்தில் கல்லெறிந்துவிட்டுப் பதிலுக்குக் கல்லடி வாங்கிக் கொண்டு வந்தான்.

அப்படியே தோளைச் சிராய்த்துக் கொண்டு போயிருந்தது கல்!

நல்ல வேளையாக அடி பட்டது, தோள் தசையில். இதுவே தலையில் பட்டிருந்தால்?

நினைக்கையிலேயே பெற்றவளுக்கு நெஞ்சு நடுங்கியது.

எல்கேஜி, யூகேஜியில் செய்தது போல, நந்தனைப் பள்ளியில் கொண்டு விட்டுவிட்டுத் திரும்பக் கூட்டி வந்தாள்.

இது வேலை நேரத்தைப் பாதித்து, முதல் ஆளாக, அவளை வெளியே போகச் சொன்னார்கள்.

வருமானம் நின்று விட்டதே என்று வருந்தினாலும், அதை விடவும் பிள்ளைதானே முக்கியம் என்று தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

கொஞ்ச நாள் சேமிப்பைச் செலவு பண்ண வேண்டியது தான்! சேமிப்பு முடியுமுன், நந்தனும் நேராகி, வேறு வேலையும் கிடைத்து விடாதா?

கடவுள் எவ்வளவுதான் ஒருவரைச் சோதிப்பார்? சீக்கிரமே எல்லாம் சரியாகிவிடும் என்று, மனம் கலங்கும் நேரங்களில் உருப் போடுவாள்!

சில நாட்கள் இப்படிச் சென்றன.

திடுமென ஒரு நாள், மாலையில் நந்தன் பள்ளியிலிருந்து வெளியே வரவே இல்லை.

எல்லோரும் வெளியே சென்று, வகுப்பறைகளை மூடத் தொடங்கவும், பதறிப்போய்ப் பள்ளியினுள் சென்று மகனைத் தேடினாள்.

அங்குமிங்கும் ஓடி, அகப்பட்டவர்களிடம் மகனைப் பற்றி விசாரித்தாள்.



கேட் அருகே நமுட்டுச் சிரிப்புடன் நின்ற சில பையன்கள், "சிலபேரு, ஒரோருத்தரை, அவங்க இல்லாத இடத்திலே மட்டும் தேடறாங்கப்பா!", "ஓடி, ஓடிப் பயந்துகிட்டுத் தேடறாங்க!" என்றெல்லாம் ஒருவருக்கொருவர் சொல்லிச் சிரித்தது கேட்டது.

நந்தகுமாரனுடைய புதிய சினேகிதமா?

அவர்களிடம் ஓடிப்போய், நந்தனைப் பற்றி விசாரித்தாள்.

"நீங்க, இப்படி வந்து நாய் கணக்காக் காவல் காத்தாக்க, அவனுக்குப் பிடிக்கலை! அதான், மதியமே மதில் ஏறிக் குதிச்சு, துரை கூட, மேட்னிக்குப் போயிட்டான்! நீங்க வீட்டுக்குப் போங்க! படம் முடிஞ்சு வந்திருப்பான்!" என்று விவரம் உரைத்தான் ஒருவன்.

"எங்க கூடச் சேரக் கூடாதின்னீங்களாமே! பாருங்க, நாங்களா இருக்கக் கண்டு, அய்யோ பாவமின்னு, விலாவாரியாச் சொன்னோம்! இல்லாட்டி, நாள் முழுசும் அலைய விட்டிருப்போமில்ல?" என்றான், இன்னொருவன்.

"நன்றிப்பா!" என்று ஓய்ந்த குரலில் சொல்லிவிட்டு, சோர்வுடன் வீட்டுக்குச் சென்றாள் ரஞ்சனி.

வீட்டு வாசலில் மகனைப் பார்த்தபோது, ஆறுதலுக்குப் பதிலாகக் கவலைதான் அதிகமாயிற்று.

செய்கிற முயற்சியெல்லாம், பாறையில் தலையை முட்டிக் கொள்கிற மாதிரியே ஆகிறதே! நந்தனை நல்லபடியாக மீட்கவே முடியாதோ என்று அவளது பெற்ற மனம் பரிதவித்தது.

வெட்கம் மானத்தை விட்டு, நரேந்திரனிடம் போய் இன்னொரு தரம் கெஞ்சிப் பார்க்கலாமா என்று கூட எண்ணிப் பார்த்தாள்.

தந்தை ஏக்கம்தானே, நந்தனை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்திருப்பது!

ஆனால், அவ்வளவு தெளிவாகச் சொன்னானே, அன்புக் காக ஏங்கும் சிறுவனுக்கு ஏதாவது வாங்கிக் கொடுப்பது, அவனை மகனாக ஏற்று அல்ல என்று துல்லியமாகத் தெளிவு படுத்தினானே! அதற்கு மேல், அவனிடம் என்ன கேட்க முடியும்?

ஆனால் ஒன்று! இப்போது நரேந்திரனிடம் உதவி கேட்டுப் போனால், அன்றைய லீலையைத் தொடர்வதற்குப் பச்சைக் கொடி காட்டியதாகத்தான் அவன் எடுத்துக் கொள்வான்!

அந்த அளவுக்குக் கீழிறங்க அவளால் முடியாது.

என்ன செய்வது என்று தெரியாமல், அவள் திகைத்து மயங்கித் திணறியபோது, நீ ஒன்றும் செய்யத் தேவையில்லை என்பது போலச் சம்பவங்கள் தானாக நடந்தன. அதில் அபிப்பிராயம் கூறும் அதிகாரம் கூட, அவளுக்கு இருக்க வில்லை, மறுக்கப்பட்டது!

அன்றைய சம்பவத்துக்குப் பிறகு, பள்ளி அருகில் காத்துக் கிடக்க, ரஞ்சனிக்குத் தைரியம் இருக்கவில்லை.

சும்மா வீட்டில் காத்துக் கிடப்பதற்கு, வெளியே போய், வேறு வேலையேனும் தேடலாம் என்று சென்று அலைந்து திரிந்து விட்டுத் திரும்பினால், வீட்டு வாசலில் போலீஸ் காத்திருந்தது.

முதலில் நந்தனுக்கு ஏதும் விபத்தோ என்றுதான், ரஞ்சனி பதறியது!

ஆனால், அதை விட மோசம் என்று, வந்திருந்த காவலர் சொன்னார்.



நந்தகுமாரனும், இன்னும் சில பையன்களும் சேர்ந்து ஒரு பெரிய சூப்பர் மார்க்கெட்டில் திருடியிருக்கிறார்கள். சாதாரண உடையில் சுற்றிக் கொண்டிருந்த சூப்பர் மார்க்கெட் காவலர்கள், அவர்கள் திருடுவதைக் கண்டு கொண்டு துரத்தியிருக்கிறார்கள்! இது போன்ற சூழ்நிலைக்குப் பழகி, ஆபத்தை எதிர்பார்த்துத் தயாராக இருந்த மற்றப் பையன்கள், தப்பி ஓடிவிட்டார்கள்! இவன், இந்தத் துறைக்குப் புதியவன் அல்லவா? மாட்டிக் கொண்டான்.

முதலில் தான் யார் என்று சொல்ல மறுத்திருக்கிறான். பள்ளிச் சீருடையை வைத்து, பள்ளியில் போய் விசாரித்துக் கண்டு பிடித்திருக்கிறார்கள்!

''காவல் நிலையத்துக்கு வந்து, இனிமே இந்த மாதிரி நடக்காதுன்னு எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டுக் கூட்டிப் போங்கள்!'' என்றார் காவலர்.

காவலரைக் கண்டதும், கூடி விட்டிருந்தவர்களில் யார் முகத்தையும் நிமிர்ந்து பார்க்க முடியாமல், ரஞ்சனி குன்றிப் போனாள்.

என் மகனா என்ற தவிப்பு வேறு! அவளுக்கு மயக்கம் போடாத குறைதான்.

ஆனால், அதற்காக மகனை விட்டு விட முடியுமா?

வீட்டில் இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு, அவள் கிளம்பும்போது, வீட்டுச் சொந்தக்காரர் வந்தார். ''பாரம்மா, புருஷனை விட்டுப் பிரிந்து வாழ்கிறவள் என்றாலும், கௌரவமான குடும்பம் என்றுதான் வீட்டை வாடகைக்குத் தந்தேன். அதிகம் பேச எனக்கு விருப்பம் இல்லை! வருகிற ஒன்றாம் தேதியோடு வீட்டைக் காலி பண்ணிவிடு!'' என்று

கறார்க் குரலில் கூறிவிட்டு, பதிலுக்காகக் காத்திராமல் அங்கிருந்து சென்று விட்டார்.

வேலைதான் போயிற்று என்றால், இப்போது வீடுமா என்று மனம் தன் போக்கில் நினைத்தாலும், அப்போதைக்கு, அது பெரிதாகப் படவில்லை அவளுக்கு.

நந்தன்! அவன் காவல் நிலையத்தில் இருக்கிறான்! கொலை செய்த, கொள்ளையடித்த பல குற்றவாளிகளோடு ஒன்றாக இருக்கிறான்! சின்னப் பிள்ளை! பயந்து போயிருப்பானே!

என்ன செய்தேனும் அவனை அங்கிருந்து கூட்டி வரவேண்டும் என்ற வேகத்தோடு ரஞ்சனி சென்றால், அங்கே அவளால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

"என்ன எழுதித் தர வேண்டும்? எங்கே கையெழுத்திட வேண்டும்?" என்று கேட்டபடிதான் அவள் காவல் நிலையத்துள் சென்றதே.

ஆனால், "வக்கீல் வருவார். காத்திருங்கள்!" என்று மொட்டையாக ஒரு பதில் மட்டுமே அவளுக்குக் கிடைத்தது.

என்ன வக்கீல்? எதற்காக?

அந்த சூப்பர் மார்க்கெட்காரர் வழக்கு ஏதும் போடப் போகிறாரா?

கையும் களவுமாக மாட்டியிருக்கிறானே! வழக்கு நடத்தி, அவனைச் சிறையில் போட்டு விடுவார்களோ?

சின்னப் பையன்! ஒன்பதே வயது! போகிறான் என்று மன்னித்து, விட்டு விடக்கூடாதா?

சூப்பர் மார்க்கெட்காரர் காலில் விழுந்து கேட்கலாமா?

ஆனால், அவள் மகனா? அவனா இப்படி?



வயிறு காந்த அவள் உட்கார்ந்திருந்தபோதே, வக்கீல் வந்துவிட்டார்.

சூப்பர் மார்க்கெட் உரிமையாளரையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தார்.

"சின்னப் பையன், சார். என்னிடம் கேட்டிருந்தால் போலீசுக்கே போக விட்டிருக்க மாட்டேன்! எங்கள் நிர்வாகி கொடுத்த புகாரை, நாங்கள் வாபஸ் வாங்கிக் கொள்கிறோம். இன்ஸ்பெக்டர்! பையனை விட்டு விடுங்கள்!" என்று அவர் சொன்னபோது, ரஞ்சனியால் அவளது காதுகளையே நம்ப முடியவில்லை.

இவரது காலில் விழுந்தேனும் கேட்க வேண்டும் என்று எண்ணினாளே! உலகத்தில் எத்தனையோ நல்லவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவசரமாக எழுந்து, அவர் அருகே சென்று, "ரொம்ப நன்றி சார்!" என்றாள் ரஞ்சனி.

"யார்...?" என்று அவர் வினவுகையில், "அந்தப் பையனுடைய தாய்!" என்றார் காவல் அதிகாரி.

"ஓ!" என்று அவளை ஏற இறங்கப் பார்த்தார், சூப்பர் மார்க்கெட்காரர்.

பார்வையின் பொருள் புரிந்தவளாய் முகம் சிவக்க, "கொஞ்ச காலமாச் சினேகிதர்கள் சரியில்லை, சார். இனி, அவர்களை விட்டு விடுவான் என்று நினைக்கிறேன்! ஆனால், அவன் வயதைப் பார்த்து மன்னித்து விடுவித்ததற்கு, ரொம்ப நன்றி, சார்!" என்று ரஞ்சனி மீண்டும் நன்றி தெரிவித்தாள்.

"உன் நன்றியை இந்த வக்கீலுக்குச் சொல்லு! ஆனால், பையனை இனிமேலாவது பத்திரமாகப் பார்த்துக் கொள்!"

என்றவர், தேவைக்கு மேல் நில்லாமல், புகாரைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, உடனே கிளம்பிவிட்டார்.

வக்கீலும் உடனேயே கிளம்பி விடுவாரோ என்று, அவருக்கும், ரஞ்சனி நன்றி தெரிவித்தாள்.

ஆனால், "நன்றிதானே? இருக்கட்டும்மா! முதலில் வந்த வேலை எல்லாம் நல்லபடியாக முடியட்டும்!" என்றுவிட்டு, இன்ஸ்பெக்டரிடம் பேசிக் கொண்டிருந்தார் அவர்.

அவர்களது பேச்சிலிருந்து, ஒருமுறை காவல் நிலையத்தில், ஒரு சிறுவன் மீது வழக்குப் பதிவாகி விட்டால், மேல் படிப்புக்கோ, வேலைக்கோ அவன் வெளிநாடு செல்வது முடியாத காரியம் ஆகிவிடும் என்று ரஞ்சனிக்குத் தெரிய வந்தது. அதற்காகவே முயன்று, நந்தன் மேல் வழக்குப் போட்டு விடாமல் வக்கீல் செய்திருக்கிறார் என்றும் தெரிந்தது.

வக்கீலுக்கு இரட்டிப்பு நன்றி செலுத்த வேண்டும் போல இருக்கிறதே! இரட்டிப்பென்ன? எத்தனையோ மடங்கு!

காவல் நிலைய வேலை முடிந்து, நந்தனை வெளியே கூட்டி வந்ததும், "நீங்கள் வீட்டில் போய் இருங்கள், அம்மா. பள்ளி வேலைகளை முடித்துக் கொண்டு, மாஸ்டர் நந்தகுமாரும் நானும், உங்கள் வீட்டுக்கே வந்து விடுகிறோம்!" என்றார் வக்கீல். "அல்லது, நீங்களும் எங்களோடு பள்ளிக்கு வருகிறீர்களா?"

ரஞ்சனிக்கு உறுத்திற்று.

"பள்ளியில் என்ன வேலை? அதற்கு, நீங்கள் ஏன் நந்தனை அழைத்துப் போக வேண்டும்?" என்று ரஞ்சனி கேட்ட பிறகுதான், வக்கீலை ஏற்பாடு செய்திருப்பது நரேந்திரன் என்று அவளுக்குத் தெரிய வந்தது.



காரின் பின் இருக்கையில் அமர்ந்து, மடியில் முகம் புதைத்து விசித்த மகனின் தலையை வருடியபடி ரஞ்சனி அமர்ந்திருக்க, முன் சீட்டில் உட்கார்ந்து வந்த வக்கீல், பின்புறம் திரும்பி விவரம் தெரிவித்தார்.

நந்தன் விஷயம் தெரிந்ததும், பள்ளியில் ரஞ்சனியைத் தேடியிருக்கிறார்கள். அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை! தனியாகத் தந்தையின் முகவரியும் இருக்கவே, உடனே அவனோடு தொடர்பு கொண்டு தெரிவித்திருக்கிறார்கள்!

"ஐயோ...!" என்று குன்றிப் போனாள் ரஞ்சனி.

பள்ளியில், முதலில் அவள் தன் பெயரை மட்டும்தான் கொடுத்திருந்தாள். பிள்ளைக்குத் தந்தை இருந்தால் அவரது முகவரியும் வரவேண்டும் என்று கேட்டிருந்தார்கள். தாங்கள் பிரிந்து விட்டதை ரஞ்சனி தெரிவித்த பிறகும், விபத்து போல ஏதாவது தவிர்க்க முடியாத அவசரம், நெருக்கடி நேர்ந்தால் தேவைப்படக் கூடும் என்று அவர்கள் கூறவும், சிறு பயம் தலைதூக்கவும், நரேந்திரனின் முகவரியையும் கொடுத்தாள்.

இன்றைக்கு அந்த நெருக்கடி நேர்ந்திருப்பதாகப் பள்ளியில் எண்ணினார்கள் போலும்!

அது... பெருமளவு உண்மைதான்! ஆனாலும்...

அவளது 'ஐயோ'வைக் கவனியாதது போல, வக்கீல் மேலே விவரித்தார். "நரேந்திரன் சார், அங்கிருந்து ஃபோன் போட்டு, கேஸ் ஆகிவிடாமல் பார்க்கச் சொன்னார். சின்னப் பையன், எதிர்காலம் பாழாகிப் போகும் என்று சார் சொன்ன மாதிரி எடுத்துச் சொன்னதும், சூப்பர் மார்க்கெட்காரர் இளகி விட்டார். இனிப் பள்ளியில் டி.சி. வாங்க வேண்டும்..."

"என்னது? டிசியா? அப்புறம், நந்தன் படிப்பு என்ன ஆவது?"

''போலீஸ் வந்து விவரம் தெரிந்ததுமே, பையனைப் பள்ளியிலிருந்து விலக்கப் போவதாகச் சொல்லிவிட்டார்கள்! அவர்களாக விலக்குவதைவிட, நாமாக விலகிக் கொள்வது நல்லதில்லையா? படிப்பைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்! அதற்கு நரேந்திரன் ஏற்பாடு செய்வார். இப்போது, டிசி வாங்கியதும், உங்கள் இருவரையும் ஊருக்கு அழைத்து வரச் சொல்லியிருக்கிறார்!''

ரஞ்சனி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

எதற்காக அழைத்து வரச் சொன்னான்?

எள்ளி நகையாடவா? ஆனால், அதற்கு மகனை விடுவித்திருக்க வேண்டியது இல்லை!

இந்த மாதிரி ஒரு வழக்கு நடந்து, தண்டனையும் கிடைத்து விட்டால்... கையும் களவுமாகப் பிடிபட்டவன் தண்டனை அடைவதும் நிச்சயமே!

எள்ளி நகையாட, அதை விடவா பெரிய வாய்ப்புக் கிடைக்கும்?

பின்னே?

ஒருவேளை...!

ரஞ்சனி சட்டெனப் பரபரப்புற்றாள். அவன், நரேனுக்கு உண்மை புரிந்திருக்குமோ? அதனால்தான், மகன் என்பதால்தான் இவ்வளவு செய்கிறானோ? அங்கேயே, அவனுடைய தாய் இருக்கும் இடத்துக்கே அழைத்து வரச் சொல்லியிருக்கிறானே! அதற்குத் தனி அர்த்தம் இருக்கிறதா?

இங்கேயும் தான் இருந்து என்ன செய்வது?

வேலை, வீடு எதுவுமே இல்லை! பின்னே போய்ப் பார்ப்பதற்கென்ன?



அங்கே... ஒரு வேளை, நரேன் மன்னிப்புக் கேட்பானோ?

ஏதேதோ கற்பனைகள் தோன்றியதும், மறுப்பின்றி ரஞ்சனியும் மகனோடு கிளம்பி விட்டாள்.

நந்தனைப் பொறுத்த வரையில், தந்தையிடம் போகிறோம் என்பதில் அவன் மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும்! சாதாரணமான நிலையில் துள்ளிக் குதித்திருக்க வேண்டிய செய்தி! ஆனால், ஒரு காவல் நிலைய வாசத்தில், அவன் வெலவெலத்துப் போயிருந்தான் போலும்! அவன் ஒன்றும் சொல்லவில்லை!

வயதுக்கு மீறிய அறிவு உண்டு என்றாலும், அவன் ஒன்பது வயதுச் சிறுவன்தானே! அடிபட்ட குழந்தை போல, அம்மாவையே ஒட்டிக்கொண்டு அமர்ந்திருந்தான்.

எதிர்மறைச் சொற்களையே மறந்தவன் போல, என்ன சொன்னாலும் செய்து கொண்டு, ஒரு திகைத்த பார்வையுடன் இருந்த மகனைப் பார்க்கப் பார்க்க, ரஞ்சனியின் மனம் அவன்பால் உருகிப் போயிற்று.

ஆனால், இந்த நேரத்தில், அவனிடம் கனிவைக் காட்டுவது தவறு என்று அவளுக்குத் தோன்றியது. நடந்தது பெரிய விஷயம் அல்ல என்று அவனுக்குத் தோன்றி விடக் கூடாதே!

எனவே, அவனது கலக்கத்தைக் கண்டும் காணாதது போலவே நடந்து கொண்டாள்.

திருநெல்வேலிச் சந்திப்புக்கே நரேந்திரன் வந்திருந்தது, ரஞ்சனியின் எதிர்பார்ப்பை இன்னமும் பெருக்கியது.

கண் கலங்க ஏக்கத்துடன் பார்த்தபடி நின்று கொண்டிருந்த நந்தனைச் சிறு ஜாடையால் அருகே அழைத்தான். அருகில் வந்ததும், தலையைத் தொட்டு, ''இனி இப்படிச் செய்யக்

கூடாது. என்ன?'' என்றான் சற்று மெதுவான குரலில், தெளிவாக.

கண்களில் இருந்து இரு பெரிய நீர் மணிகள் வழிந்து பொட்டென்று விழுந்து சிதற, ''சாரிப்பா!'' என்றான் மகன் சின்னக் குரலில்.

''சரி, சரி, வா!'' என்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு முன்னே நடந்தான் நரேந்திரன்.

அவளிடம்? அவனுடைய மனைவியான அவளிடம், அவன் ஒன்றுமே சொல்லவில்லையே!

உயர்தர ஹோட்டல் ஒன்றில் ஓர் அறைக்கு அழைத்துச் சென்றவன், சீக்கிரமாகக் குளித்துத் தயாராகுமாறு கூறிவிட்டு, வெளியே போய் விட்டான்.

அவன் முகத்தைப் படிக்க முயன்றால், அதில், அவளால் ஒன்றுமே கண்டுபிடிக்க முடியவில்லை! பத்து ஆண்டுகள் தொழில் நடத்திய அனுபவத்தில் கற்றுக் கொண்டது போலும்! முகத்தில் ஒன்றும் காட்டாதிருப்பது!

ஆனால், எப்படியும் மன்னிப்புக் கேட்கிற எண்ணம் அவனுக்கு இல்லை என்பது மட்டும், அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்தது!

அப்படியானால், இதெல்லாம் என்ன?

## 16

**தா**யும் மகனும் குளித்து உடை மாற்றி முடித்தபோது, அறைக்கே அனுப்பப்பட்ட காலைச் சிற்றுண்டி வந்து சேர்ந்தது.



அதை உண்டு முடித்து, நரேந்திரனோடு வெளியே காரில் சென்று, ஒரு தையல்காரரிடம் அளவு எடுப்பதற்காக நந்தன் செல்லும்வரை, ரஞ்சனியால் கணவனிடம் ஒன்றும் பேச முடியவில்லை!

அதாவது முக்கியமாக எதையும்!

தாயோ, தந்தையோ தன்னை வெறுத்து விடவில்லை என்பதில் ஆறுதல் அடைந்தவன் போல, நந்தன் கொஞ்சம் இயல்பாக இருக்கத் தொடங்கினான். பழைய துள்ளலும், துறுதுறுப்பும் இல்லை என்றாலும், சூழ இருந்தவற்றில் ஆர்வம் காட்டலானான்.

லாபியில் இருந்த வண்ணக் கண்ணாடி வேலைப்பாட்டைப் பார்த்தபடி, அவன் முன்னே செல்ல, ''உங்களிடம் பேச வேண்டும்!'' என்று நரேந்திரனோடு சேர்ந்து நடந்தபடி, அவன் காதருகே மெல்லச் சொன்னாள் ரஞ்சனி.

நடையை நிறுத்தாமல், ''பேசலாம்!'' என்றான், அவனும் அதே குரலில்.

ஒரு பெரிய துணிக்கடையை ஒட்டித் தையலுக்கென்று ஒரு பகுதி இருந்தது.

காரை ஒரு புறமாக நிறுத்திவிட்டு, நந்தனை அந்தத் தையல்காரரிடம் அழைத்துச் சென்றான் நரேந்திரன்.

பல்வேறு விதமான உடைகளுக்காக நந்தனை அளவெடுக்கும்படி சொல்லிவிட்டு, ''அம்மாவும் நானும் காரில் இருக்கிறோம், நந்து! நீ அளவு கொடுத்துவிட்டுக் காருக்கு வந்துவிடு! அப்புறமாக, மூன்று பேரும் சேர்ந்து துணிகளைத் தேர்ந்தெடுக்கலாம்!'' என்றுரைத்து, ரஞ்சனியோடு காருக்கு வந்தான்.

அவளையும் காரில் ஏறிக் கொள்ளும்படி சைகை செய்துவிட்டுக் காரில் அமர்ந்தான்.

அவளும் ஏறி அமர்ந்ததும், அவள் புறம் திரும்பிச் சொல்லலானான். ''நீ ஏன் இப்படிச் செய்தாய் என்று எனக்குத் தெரியவில்லை, ரஞ்சனி. ஆனால், எப்படியோ, என் பெயரை, நந்தனுடைய தந்தை என்று வெளியே பரப்பி விட்டாய். நிறையப் பேர் அதை நம்பவும் செய்கிறார்கள்!''

''ஆனால், நீங்கள் அதை நம்பவில்லை!'' என்று ஆத்திரத்தோடு குறுக்கிட்டாள் ரஞ்சனி.

''நம்புவதற்கு வாய்ப்பே இல்லாதபோது, எப்படி நம்புவது?'' என்று அதே குரலில் திருப்பியவன், சட்டெனப் பேச்சை நிறுத்தி, ஒரு தரம் கண்ணை மூடித் திறந்தான்.

குரலைத் தணித்து, ''வேண்டாம்! எந்த வாக்குவாதமும் இப்போது வேண்டாம்! அதெல்லாம் முடிந்துவிட்ட கதை! அதைப் பற்றிப் பேச நான் தயார் இல்லை என்பதோடு, நந்தன் திரும்பி வருவதற்குள், இப்போதைய பிரச்சினையை நாம் பேசி முடித்தாக வேண்டும்! உனக்கு மகா பாரதம் தெரியும். குந்தியுடைய மைந்தர்கள் அனைவரும், எல்லோருக்குமே பாண்டவர்கள் ஆன மாதிரி, எல்லோரும் நந்தனை என் பிள்ளையாகவே கருதுவதால், அவன் கெட்ட பெயர் எடுப்பது எனக்குப் பிடிக்கவில்லை! அவன் பெயர் கெடுவதும் பிடிக்கவில்லை. அவனது வாழ்வு சீரழிவதும் பிடிக்கவில்லை! அதனால், இனி நந்தனின் படிப்புக்கு நானே ஏற்பாடு செய்யப் போகிறேன்! கிட்டத்தட்டச் செய்துவிட்டேன்! சிறு வயதில், நான் படித்த பள்ளியிலேயே இடம் வாங்கியாயிற்று! அது ஒழுக்கத்துக்கு முதலிடம் கொடுக்கும் பள்ளி! அவ்வப்போது நன்கொடை கொடுப்பதால் இடமும் கொடுத்து விட்டார்கள்.



அதனால்... என்ன?'' என்று, அவள் காரை விட்டு இறங்க முயற்சிக்கவும், அவள் கையைப் பற்றித் தடுத்து வினவினான் நரேந்திரன்.

கணவனை வெறித்துப் பார்த்தாள் ரஞ்சனி.

குந்தியுடைய மைந்தர்கள்! பாண்டுவுக்குப் பிறக்காத பாண்டவர்கள்! என்ன மாதிரி அவமதித்து விட்டான்!

இதற்காகவா இங்கே வரவழைத்தான்?

என்னவோ உண்மை புரிந்திருக்கும், மன்னிப்புக் கேட்பான் என்று என்னென்ன கனவுகள் கண்டுவிட்டாள்!

கையை உதறி விடுவித்துக் கொண்டவளுக்கு ஏதோ தோன்ற, ''குந்தி மைந்தர்கள் பாண்டுவுக்குப் பிறக்கா விட்டாலும், அவர்களுடைய தந்தையர் யார் என்று எல்லோருக்கும் தெரியும்! நந்தனுக்கும் அப்படி யாரையும் தெரிந்து வைத்திருக்கிறீர்களா?'' என்று ஏளனமும் கோபமுமாகக் கேட்டாள் அவள்.

ஒரு கணம் தயங்கிவிட்டு, ''அதுதான், பழைய மாணவன் என்கிற சாக்கை வைத்துக் கொண்டு, பலபேர் உன் அத்தை வீட்டைச் சுற்றிச் சுற்றி வருகிறார்களே, அவர்களில் ஒருவனாக இருக்க மாட்டானா என்ன?'' என்றான் அவனும் பதிலுக்கு ஏளனமாகவே!

என்ன அசிங்கமான வாக்குவாதம்! அவன்தான் ஏதோ பேசினான் என்றால், அவளுமா?

ஆனால், இது வாழ்க்கைப் பிரச்சினை! சும்மா விடவும் முடியாது!

ஒரு பெருமூச்சுடன், கடைசி முயற்சியாக, ''யோசித்துப் பாருங்கள்! நீங்கள் படித்த பள்ளி என்று உங்க நந்தனை இங்கே

கொணர்ந்து சேர்க்கிறீர்களே! என் அத்தை எத்தனை ஆண்டுகள் அங்கே ஆசிரியையாக இருந்திருக்கிறார்கள்! பழைய அபிமானம், மரியாதை காரணமாக உதவி செய்யவென்று வர மாட்டார்களா? நீங்களே, பழைய ஆசிரியர் யாருடைய மகளுக்காகவுமா, பள்ளிக்கு நன்கொடை கொடுத்தீர்கள்? நீங்கள் படித்த பள்ளி, பழைய ஆசிரியர்கள் என்பதெல்லாம் உங்களுக்கு மட்டும்தானா?'' என்று, குரலைத் தணித்துக் கேட்டாள் அவள்.

இப்போது மௌனம் நீடித்தது.

ஆனால், அதைப் பயன்படுத்திக் கொண்டு, ரஞ்சனி மேலே பேச முற்பட்டபோது, அவன் கையுயர்த்தித் தடுத்தான்.

பதில் சொல்ல முடியாததால், அவளைப் பேச விடாமல் தடுக்கிறானா என்றிருந்தது அவளுக்கு.

''இல்லை! இந்த வாக்குவாதத்துக்கு இப்போது நேரம் இல்லை. பிறகு, வீட்டில் வைத்துக் கொள்ளலாம்! உன்னை நம்ப முடியாமைக்கு ஓர் அடிப்படைக் காரணம் இருக்கிறது என்பதோடு விடு! இப்போது நடப்புக்கு வருவோம்! இங்கே பாளையங்கோட்டையில், பள்ளியில் நந்தன் படிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்! என் வீட்டிலிருந்து காரில் பள்ளிக்கு வந்து திரும்புவான். நான் படித்தது போலவே! நீ...''

நந்தன் பண்ணை வீட்டிலா? அவனை விட்டு, அவள் எப்படி இருப்பாள்?

''பொறுங்கள், பொறுங்கள்! உங்கள் விருப்பம் போலத் திட்டம் போடுகிறீர்களே! எனக்கு இது பிடிக்கவில்லை...''

முகம் கடுக்க, ''சாரி, இதில் உன் விருப்பத்தைப் பார்க்க முடியாது!'' என்றான் நரேந்திரன். ''தாய் அது இது என்று வசனம் பேசாதே! நந்தன் ஒன்றும், பால்குடி மறவாத பச்சைக் குழந்தை அல்ல. ஒன்பது வயதுப் பையன்! அத்தோடு, அவனுடைய தகப்பன் நான்தான் என்று, நீயே எழுதிக் கொடுத்திருக்கிறாய்! சட்டம் பேசி உன்னை மிரட்ட வேண்டாம் என்று பார்க்கிறேன்...''



அவள் திகைத்து நோக்கவும், சற்றுத் தணிந்து, ''இதோ பார் ரஞ்சி, இது வாக்குவாதம் செய்கிற நேரம் அல்ல என்று சொன்னால் புரிந்து கொள்! விஷயம் கை மீறி விட்டது! நந்தனுக்கு, ஓர் ஒழுங்கான வாழ்க்கை கட்டாயமாக வேண்டும். அவன் வாழ்க்கை பாழாகி விடக்கூடாது. அதற்காகத்தான் இந்த ஏற்பாடு!'' என்றான் அவன்.

''ஆனால், நந்தனைப் பிரிந்து நான் எப்படி இருப்பேன்?'' என்று கலங்கினாள் ரஞ்சனி.

''பிரிவானேன்?... ஷ்... நந்தன் வருகிறான். இப்போது பள்ளிக்குப் போய்விட்டு, நாம் மூவருமே பண்ணை வீட்டுக்குப் போகிறோம்! மீதியை அங்கே வைத்துப் பேசிக் கொள்ளலாம்!'' என்றவன் பிள்ளையைப் பார்த்துப் புன்னகை செய்தவாறு, காரை விட்டு இறங்கினான்.

''என்ன, அளவு எடுப்பது முடிந்துவிட்டதா? எது எதற்கு, எவ்வளவு துணி வேண்டும் என்று எழுதிக் கொடுத்தாரா? வா! துணி தேர்வு பண்ணப் போகலாம்! வா, ரஞ்சி!'' என்று மற்ற இருவரையும் கடைக்குள் கூட்டிச் சென்றான்.

முதலில் பள்ளிச் சீருடைக்குத் துணி வாங்கினார்கள்.

அப்புறமாக நரேந்திரன் வாங்கிக் குவித்த வேகத்தில், ரஞ்சனிக்குத் தலை சுற்றிவிட்டது எனலாம்.

இதில், கொஞ்சம் கூடவா ரத்தம் பாசம் இல்லை? குந்தி புத்திரன் என்று அவனால் எப்படிச் சொல்ல முடிந்தது? இப்படி இவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறானே!

உள்ளே வலித்துக் கொண்டே இருந்தது, அவளுக்கு!

பள்ளியில், பெரிய பிரச்சினை எதுவும் இல்லை!

நரேந்திரன் கொடுக்கும் நன்கொடைகள் பெரிய தொகையோ, அல்லது பழைய மாணவனாக, அவன் மிகவும் நல்ல பேர் எடுத்திருந்தானோ, பிரச்சினையின்றிப் பள்ளியில் சேர்த்துக் கொண்டார்கள்.

பள்ளி ஆண்டின் கடைசிப் பகுதி என்பதால், அங்கும் இங்கும் நடத்தப்பட்டிருந்த பாடங்கள் பற்றி, கொஞ்சகாலம் தனியாகப் படிக்க வேண்டும் என்றார்கள். அதற்கும் பள்ளியிலேயே ஏற்பாடு செய்துவிட்டு, மூவரும் கிளம்பினர்.

பள்ளியின் சில இடங்களைப் பற்றி நரேந்திரன் விவரிக்க, நந்தனுக்குப் பழைய உற்சாகம் தலை தூக்கலாயிற்று.

"நானும் உங்களைப் போல, டென்னிஸ்தான் விளையாடப் போகிறேன், அப்பா!" என்றான் குதூகலமாக.

"செய். ஆனால், முதலில் பாடம். அப்புறம்தான் மற்ற எதுவும்!" என்று தகப்பனாக நரேந்திரன் கண்டிப்புடன் கூற, மகன் பணிவுடன் தலையாட்டினான்.

மதியம் வெளியே சாப்பிட்டார்கள்.

இன்னும் பள்ளிக்குத் தேவையான பென்சில், பேனா என்று பல பொருட்களைச் சுற்றியலைந்து நிதானமாக வாங்கினார்கள்.

பிறகு, ஐந்து மணிக்குத் தையல்காரரிடம் போய், அவர் சொன்னபடி தைத்து வைத்திருந்த ஒரு செட் சீருடைகளை வாங்கிக் கொண்டு, மாலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு, மூவரும் வீடு திரும்பினர்.



வேண்டும் என்றே, வீடு திரும்பும் நேரத்தை நரேந்திரன் தாமதப்படுத்துவது போல, ரஞ்சனிக்குத் தோன்றியது.

சகுந்தலா தேவிக்குப் பயப்படுகிறானா? இரவாகிவிட்டால், ஏதோ ஓரிரு வார்த்தைகள் சொல்லிவிட்டுப் படுக்கப் போய்விடலாம்! காலையில் எழுந்தால், விஷயம் ஆறிய கஞ்சியாகி விடும்!

ஆனால், அவனுடைய தாய், அப்படி எதையும் விட்டு விடுகிறவளா? ஊகூம்!

பண்ணை வீட்டைக் கார் நெருங்க நெருங்க, ரஞ்சனியின் வயிற்றினுள் பட்டாம்பூச்சிகள் சிறகடிக்கத் தொடங்கின.

அவளது வீடும்தான்.

ஆனால், குந்தி புத்திரன் என்று நந்தனைக் குறிப்பிட்ட பிறகு, நந்தன் அவனுடைய பிள்ளை இல்லை என்று அவ்வளவு உறுதியாகச் சொன்னபிறகு, அந்த வீடு அவளதாக எப்படி ஆகும்? வீட்டில் பேசலாமாம்! என்ன பேசுவது? இருவருமே சொன்னதையே சொல்லிக் கொண்டு, அவன் பொறுமையிழக்க, அதே பழைய கதையாகத்தான் முடியப் போகிறது!

ஆனால்...

பார்க்கலாம்! எதையோ விட்டு விடலாம் என்றானே! என்னதான் சொல்லுகிறான் என்று பார்க்கலாம்!

'நம்ப முடியாமைக்கு அடிப்படைக் காரணம்' இருப்பதாகச் சொன்னானே! பழைய காரணமா?

ஆனால், அதைச் சொன்னான் என்றால், திருப்பி அடிப்பதற்கு, அவளிடமும் ஒரு நல்ல ஆயுதம் இப்போது இருக்கிறது!

அந்தச் சுந்தரி! அவளைப் பற்றியும்தான் என்ன சொல்லுகிறான் என்று பார்க்கலாம்!

நந்தனுக்கு ஒழுங்கான வாழ்க்கை வேண்டும் என்றானே, இந்தச் சுந்தரி, அதில் எங்கே வந்து சேருகிறாள் என்று பார்க்கலாம்!

கோபமும் வேகமுமாக நரேந்திரனும், ஆங்காரமும் வருத்தமுமாக அவளுமாக மீண்டும் இருவரும் பிரியப் போகிறார்கள்!

ஆனால், இது நரேனுக்கும் தெரியாதா என்ன?

இந்தச் சிக்கல்கள் எல்லாம் தீர்ந்து, நல்லபடியாக வாழ அவன் ஏதேனும் வழி கண்டு பிடித்திருக்கிறானோ, என்னவோ?

கொஞ்சம் பொறுமையாக இருந்தால், எல்லாம் தானாகத் தெரிந்து விடுகிறது என்று தனக்குள் சொல்லிக் கொண்டாலும், ரஞ்சனியின் மனம் பரபரத்துக் கொண்டேதான் இருந்தது.

ரஞ்சனி ஊகித்தது சரிதான்.

தாமதித்து வந்ததால், சகுந்தலாதேவியோடு கேள்வி பதில் பகுதி, அதிகம் நடக்கவில்லை.

பெருமளவு இருட்டி விட்ட பிறகே வீட்டை அடைந்த போது, பகல் முழுவதும் பரபரப்பாகக் கழிந்ததால், நந்தகுமாரன், கிட்டத் தட்டத் தூங்கியிருந்தான்.

அவனை எழுப்பி, உடம்பு கழுவ வைத்து, ஒரு தம்ளர் பாலைக் குடிக்கச் செய்து தூங்கச் சொல்லிவிட்டு, ரஞ்சனி கீழே வந்தபோது, அவளுடைய மாமியாரும் அதிகம் பேசத் தயாராக இல்லை.



எப்படியும் மகன் முன்னிலையில், சகுந்தலாதேவி நடந்து கொள்ளும் விதமே வேறுதானே!

"போன மாதம் உன் அத்தை வீட்டுக்கு வந்தாயாமே! அந்தப் பையன், டாக்டர் உதயமூர்த்தி தயவில், அவர்கள் கால்வலி கிட்டத்தட்ட குணமாகி விட்டதாமே!" என்று மட்டும் வியந்தாள்.

அந்தப் பையன்! டாக்டர் இளைஞன் என்று குறிப்பாய் உணர்த்துகிறாள்.

இதையெல்லாம் நம்பித்தான் நரேந்திரன் இப்படிப் பேசுவதா? ஆனால், இதெல்லாம் வெறும் ஊகத்தின் அடிப்படையில் எழக்கூடிய சந்தேகம்தானே? அசைக்க முடியாத அடிப்படைக் காரணமாக எடுத்துக் கொள்ள முடியாதே!

தாயின் குறிப்பை உணர்ந்தவன் போல, நரேந்திரனின் முகமும் கடுத்தது. "அம்மா, நீங்கள் படுக்கப் போகவில்லை? நேரமாகிறதே!" என்றான்.

"அதில்லையடா, ரஞ்சனியும் அவள் மகனும் வந்திருக்கிறார்களே என்று..."

ரஞ்சனியும் அவள் மகனுமா? அந்த மகன் நரேனுடைய பிள்ளை இல்லை என்று சொல்லாமல் சொல்கிற விதமா? இப்படிச் சொல்லிச் சொல்லித்தான், பிள்ளை மனதைக் கெடுத்தாளா?

தங்கள் திருமணம் முறிந்து போனதில், மாமியாரின் பங்கு மிகுதி என்று, ரஞ்சனி எப்போதுமே நினைப்பதுண்டு. ஆனால், இந்தப் பேச்சுகளை நம்பி, மனைவியை வெளியேற்றுவது என்றால், நரேந்திரனும்தான் திருமண வாழ்வுக்கு எந்த வகையில் லாயக்கு?

ரஞ்சனி யோசனையோடு நின்று கொண்டிருக்க, இப்போதும் நரேந்திரன்தான் பேசினான்.

"பரவாயில்லை அம்மா! இனி ரஞ்சனியும் பிள்ளையும் இங்கேதானே இருக்கப் போகிறார்கள்! நாளை பார்த்துப் பேசிக் கொள்ளலாம்! அதிகம் விழித்திருப்பது உங்கள் உடம்புக்கு நல்லதல்ல! அவளும் பயணத்தில் களைத்திருப்பாள்!"

இரவு எட்டரையை ஒட்டிய நேரத்தை அதிகம் விழித்திருப்பது என்று சொல்ல முடியாது.

ஆனால், மகனது குறிப்பை ஏற்றுச் சகுந்தலாதேவி படுக்கப் போனாள்.

தாயார் சென்று மறைந்ததும், நரேந்திரன் மனைவியைப் பார்த்தான். "இந்தப் பயணம், மற்ற உளைச்சல் எல்லாம் சேர்ந்து, உனக்கு அசதியாக இல்லையே?" என்று வினவினான்.

நின்ற இடத்திலேயே, கண் மயங்கி விழுகிற அளவு களைப்பாக இருந்தாலும், பிரச்சினையைப் பேசி முடிக்கு முன், அவள் விழுவாளா, என்ன?

இல்லை என்பது போல, அவள் தலையசைக்கவும், "அப்படியானால் வா, நாமும் பேசி முடித்துவிடலாம்!" என்று அவளை அழைத்துச் சென்றான் நரேந்திரன்.

## 17

அவன் அழைத்துச் சென்றது அவனது அறைக்குத்தான். சென்ற முறை வந்தது நினைவு வர, ரஞ்சனி ஒரு கணம் தயங்கி நின்றாள். மறு கணம், அவளது கால்கள், தாமாக அறையின் உள்ளே சென்றன.



எனக்கு விவரம் தெரிய வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

எதையும் கவனியாதவன் போல உள்ளே சென்று, மேஜை அருகே கிடக்கும் நாற்காலியை எடுத்துப் போட்டு, அவளை உட்காரச் சொல்லிவிட்டு சற்றுத் தள்ளிப்போய்க் கட்டிலின் மீது அமர்ந்தான் நரேந்திரன்.

சிறு பொழுது அமைதி நிலவியது.

நாற்காலியை எடுக்கும்போது, மேஜை மீதிருந்த கம்ப்யூட்டரைக் கவனித்திருந்த ரஞ்சனி, "இங்கேயும் கம்ப்யூட்டரைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டீர்களா?" என்று வினவினாள்.

"இது, இங்குள்ள கணக்குகளைக் கவனிப்பதற்காக அல்ல! சென்னைத் தொழிலோடான தொடர்பு!" என்றான் அவன் அரைக் கவனமாக.

பேச்சை எப்படித் தொடங்குவது என்று யோசிக்கிறான் என்பது புரிந்துவிட, ரஞ்சனியும் அதற்கு மேல் எதுவும் பேசாமல் காத்திருந்தாள்.

சிறு மௌனத்தின் பின், "ஆத்திரப்படாமல், அவசரப் படாமல் நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுவிட்டு, அப்புறமாகப் பேசு, ரஞ்சனி. இந்த விஷயம், போன தடவை, நாம் திருநெல்வேலியிலிருந்து திரும்பி வரும்போதுதான் எனக்கே திடுமெனத் தோன்றியது!" என்று நிறுத்திவிட்டு, அவளைப் பார்த்தான்.

"அப்போது, மகாபாரதத்தின் அடிப்படை புரிகிறது என்று சொன்னேனே... நினைவு இருக்கிறதா?" என்று கேட்டான்.

ஆமாம், என்பது போலத் தலையாட்டினாள் அவள்.

"ஆனால், ஏன் அப்படிச் சொன்னீர்கள் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை! கேட்டுத் தெரிந்து கொள்ளும் மன நிலையும் இருக்கவில்லை!" என்றவள், லேசாகப் புருவம் சுழித்து, "அங்கேதான், அந்தக் குந்தி மைந்தன் பிறந் தானாக்கும்?" என்று ஏளனமாக வினவினாள்.

"வேண்டாம், ரஞ்சனி, அவசரப்பட்டு எதுவும் பேசாதே! முதலில் நான் சொல்வதை, முழுமையாகக் கேட்டுவிடு. அப்புறம், மற்றது பேசலாம்!" என்றுரைத்து, அவளது பேச்சை நிறுத்தினான் அவன்.

பிறகு, மீண்டும் மகாபாரதக் கதைக்கு வந்தான்.

"முனிவர் தந்த வரத்தைக் குந்தி சோதித்துப் பார்த்தபோது மாதிரி, உனக்கும் அப்போது மிகவும் சிறு வயது! பதினெட்டு முழுசாக நிரம்பவில்லை! ஏதோ ஓர் ஆர்வம், ஆவலில் அப்போது நடந்ததைப் பெரிதாக நினைப்பது சரியில்லை தானே? எனக்கும் அப்போது சிறு வயதுதான் என்பதால், என் அணுகுமுறையும் அப்போது தப்புதான், ரஞ்சி. உன்னைப் போய் அடித்து... வந்து... அதையெல்லாம் இப்போது மறந்து விடுவோம்! உன்னை நான் நேசிக்கிறேன்! உயிராக! அதனாலேயே, எனக்கு, நந்தன் மீதும் அன்பு உண்டாகியிருக் கிறது! அவனை என் மகனாக ஏற்க, நான் தயார்! உனக்கும் என் மீது அன்பு இருக்கிறது! பெற்றோராக, நாம் இருவரும் இணைந்து, நந்தனை நல்லபடியாக வளர்ப்போம்! சரியா? நம் இருவரின் அன்பில், பழசை யெல்லாம் முற்பிறவிச் சம்பவமாய் மறந்து விடுவோம். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான் நரேந்திரன்.

என்ன சொல்வது?



மெய்யாகவே இவன் யோசித்து, நல்லது என்று தான் நினைப்பதைத்தான் சொல்லுகிறான். ஆனால், நரேந்திரனின் யோசனையின் அடிப்படையே சரியில்லையே!

அவனுடைய தாயாரின் உள் குறிப்பு நிறைந்த சொற்கள் நினைவு வந்தன. அதை நம்பி முடிவே செய்துவிட்டான்! அவர்களது வாழ்வின் அத்தனை பிரச்சினைகளுக்கும் அடிப்படை அந்த முடிவுதான்.

இப்போது அவள் மீதுள்ள அன்பின்... அல்லது ஆசையின் காரணமாக, அவளை மன்னித்துவிடத் தயாராக இருக்கிறானே, தவிர, அந்த முடிவை மாற்றிக் கொள்வதாக இல்லை!

இது சரி வராதே!

மறுப்பில் தானாகத் தலையசைய, "நான் தப்பே செய்ய வில்லை என்கிறேன். நீங்கள், மன்னித்து மறப்பதாகச் சொன் னால், அதற்கு என்ன அர்த்தம் கொள்ளுவது? இதை ஏற்றால், அந்தத் தப்பை நான் செய்ததாக ஒத்துக் கொண்டதாக ஆகாதா? இந்த முள்ளோடு எப்படி வாழ முடியும்?" என்றாள் அவள்.

அவனது முகத்தில் தோன்றிய சிணுக்கம் உடனே மறைந்தது.

"முடியும்!" என்றான் அவன் சிறு கர்வத்தோடு.

"முள் குத்துவது எனக்கல்லவா? அந்த வலியை..."

அவளது பேச்சில் குறுக்கிட்டு, "என்னால் மறக்கடிக்க முடியும்!" என்றுரைத்த நரேந்திரன், மெல்ல எழுந்து, அவள் அருகே வந்தான்.

ரஞ்சனி விழியகலப் பார்க்கும்போதே, "நிரூபிக்கட்டுமா?" என்று மென் குரலில் கேட்டு, அவளது கையைப் பற்றி எழுப்பினான்.

"கண்ணை மூடிக்கொள்!" என்றபோது, அவன் குரல் ரகசியம் போலக் கிசுகிசுத்தது.

என்ன செய்யப் போகிறான் என்பதை, அவளால் ஓரளவு ஊகிக்க முடிந்தது. ஆனால், ஏன் கூடாது என்று, உடல் புரட்சி செய்ய, விலகிப்போக மாட்டாமல், அப்படியே நின்றாள்.

அவளது முகவடிவை, அவன் கைகளால் அளந்தபோது, ரஞ்சனியின் உடல் சிலிர்த்தது.

கைகளாலும், உதடுகளாலும், அவளை முழுக்கத் தன் வசமாக்க நரேந்திரன் முயல்வது, ரஞ்சனிக்குப் புரிந்தது.

அன்று அடைந்த வெற்றி தந்த தைரியம்!

வேறு போக்கிடம் இருந்தபோதே, அந்த அளவுக்கு நெகிழ்ந்தாளே! இன்று மகன் வரை அவன் பொறுப்பில் எனும்போது, வேறு போக்கிடமும் இல்லாதபோது, மறுக்க மாட்டாள் என்று எண்ணினானா?

மறுப்பானேன் என்று, ரஞ்சனியும் ஒரு கணம் நினைத்து விட்டாள்!

வாழ்க்கைப் போராட்டத்தில் ஓடி ஓடிக் களைத்துப் போனது ஒரு புறம் இருக்க, 'காதல் ஒருவனாகக் கைப்பிடித்த' இவனைப் பிரிந்தே வாழ்ந்தாக வேண்டுமா என்று ஓர் எண்ணம் அவளுக்குத் தோன்றிவிட்டது.

அவன்தான் மறந்தே விடுகிறேன் என்கிறானே, அவளும் தன்மானத்தைக் கொஞ்சம் விட்டுக் கொடுத்துவிட்டால் என்ன?

எவ்வளவு பெரும் பிழையாக அவனே நினைத்தது! அவள் மீதுள்ள அன்பினால், அவனே அதை மறக்கும்போது, அவளும் என்று எண்ணங்கள் வேகமாக ஓடும்போதே, ரஞ்சனி சட்டெனத் திகைத்தாள்!



நரேந்திரன் அவள் மீது சாட்டியது பெரிய குற்றம் என்பதோடு, அது அவள் செய்யாத குற்றம்! இப்போது சும்மா இருந்தால், வாழ்க்கை பூராவும், அவள் அந்தப் பிழை செய்தவள் என்பதல்லவா நிலைத்துப் போகும்?

கூடாது! அப்படியொரு தப்பு நடந்ததே இல்லை என்று நிருபிக்கும் வழியைத்தான் தேட வேண்டும்!

பூசி மெழுகி, மறைத்து வாழ்கிற வாழ்க்கை அவளுக்கு வேண்டாம்!

"வேண்டாம், நரேன்!" என்று விலகியவள், "நீங்கள் என்ன சொன்னாலும், என்னளவில், நந்தன் உங்கள் பிள்ளைதான்!" என்றாள் அழுத்தமான குரலில்.

"மறுபடியும் அதே பிடிவாதமா?" என்றான் அவன் எரிச்சலோடு, "இந்தப் பிடிவாதத்துக்கு அவசியமே இல்லை, ரஞ்சி! நான்தான் அதை யெல்லாம் அடியோடு மறந்து விடுகிறேன் என்றேனே! அதைப் பெரிதாகவே நினைக்க வேண்டாம்! விட்டுவிடு! இரண்டு பேரும் விட்டுவிடுவோம்!" என்று, அவள் கையைப் பற்றி அழுத்தினான் நரேந்திரன்.

பொறுமையிழந்த ஒரு வேக மூச்சோடு, அவனிடமிருந்து விலகிச் சென்றாள் ரஞ்சனி.

சற்றுத் தள்ளிப் போய் நின்று கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"என்ன தேடுகிறாய்?"

"ஒரு கம்போ, கட்டையோ கிடைத்தால், அதை வைத்து, உங்கள் முதுகில் ஓங்கி ஒன்று போடலாம் என்று பார்க்கிறேன்!" என்றாள் அவள் ஆத்திரத்தோடு.

அவன் திகைப்புற்று நோக்கவும், "பின்னே என்ன நரேன்? திரும்பத் திரும்ப, நான் செய்யாத தப்பை நீங்கள் மன்னித்து

விடுவதாகச் சொன்னால், வேறு என்னதான் செய்வது?'' என்று கேட்டாள்.

ஒரு பெருமூச்சு விட்டான் நரேந்திரன். ''எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது! உன் வார்த்தைகளை ஒத்துக் கொள்ளத்தான் எனக்கும் ஆசை! ஆனால் வழியே இல்லாதபடி... என் குறை இருக்கிறதே!''

மறுபடியும், அதே பேச்சுக்குத் தாவி விட்டான்! ஏதோ பிரம மந்திரம் மாதிரி, இந்த வார்த்தைதான் முடிவு, மாற்றே கிடையாது என்பது போல, அது என்ன அப்படியொரு குறை?

அவனுக்கும் சேர்ந்து வாழத்தான் ஆசை எனும்போது, இதைத் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும், அதன் பிறகு, அவனது கருத்து தவறு என்று நிரூபிக்க வேண்டும் என்று ரஞ்சனிக்குத் தோன்றியது.

இப்படிச் சொல்கிறானே என்று ஆத்திரப்படாமல், பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும்.

மீண்டும் கணவன் அருகே வந்து நின்று, அவனை நேராகப் பார்த்தாள் ரஞ்சனி.

''இந்தக் குறை பற்றி அவ்வப்போது சொல்லுகிறீர்கள். அது என்னவென்று தெளிவாகச் சொல்லுவது இல்லை. இப்போது சொல்லுங்கள். அது என்ன குறை?''

ஒரு கணம் நரேந்திரனின் முகம் மிகுந்த வேதனையைக் காட்டியது.

தன்னிச்சையாக, ரஞ்சனியின் கைகள் எழுந்து, கணவனின் கன்னங்களை வருடிக் கொடுத்தன. ''என்ன நரேன்? எதுவானாலும் பரவாயில்லை! நமக்கிடையே, எந்தவித ஒளிவு மறைவும் வேண்டாம்! சும்மா சொல்லுங்கள்!'' என்று கனிவோடு கேட்டாள்.



மனைவியின் கைகளைக் கன்னத்தோடு அழுத்தியபடி கண் மூடிச் சில வினாடி நேரம் நரேந்திரன் நின்றான். பிறகு, அவள் கைகளை விலக்கி விட்டுவிட்டு, உணர்ச்சியற்ற குரலில் கூறினான்.'' எனக்கு ஒரு தரம் அம்மை போட்டிருந்தது. பெரியம்மை! ஆண் தன்மை அடைகிற பதினேழு வயதில்! அது, உள்ளே தாவிப், பாதித்து விட்டது! தந்தையாகிற சக்தி அழிந்து போய்விட்டது! எல்லோருக்கும் இப்படியே ஆவது என்று இல்லை! ஆனால், என் தலைவிதி!''

''இது சாத்தியம் இல்லையே!'' என்றாள் அவள் திகைப்புடன்.

''நடப்பதுண்டு என்பதோடு, என் வரையில் டாக்டரே உறுதிப்படுத்திய உண்மை!''

''அப்படியில்லை! உங்கள் டாக்டரின் முடிவு தப்பு. நந்தன் விஷயத்தில் சாத்தியம் இல்லை என்றுதான் சொல்லுகிறேன்...''

''இன்னும் நந்தன் என் மகன்தான் என்று வாதாடப் போகிறாயா? தயவு பண்ணி வேண்டாம், ரஞ்சி! சும்மாவே துன்பம் பெரிய அடி! இந்த வேதனையோடு, உன் பொய்யையும் தாங்குகிற சக்தி எனக்கு இல்லை! தவறை மன்னிக்கலாம். மன்னித்து மறந்தும் போகலாம்! ஆனால், பொய் வலிக்கிறது, ரஞ்சி! அதுவும், நீ பொய் சொல்வதைத் தாங்குவது ரொம்பவும் கடினமாக இருக்கிறது!''

ரஞ்சனி மேலும் திகைத்தாள்.

இது பொய்யில்லை! அவன் சொல்வது, நிச்சயம் பொய்யில்லை! அவனது வார்த்தைகள், வேதனை, எதுவுமே பொய்யில்லை! எல்லாமே நெஞ்சின் ஆழத்திலிருந்து வருபவைதான்!

ஆனால் பொய்யாயிராமல் எப்படி? மெய்யாக இருக்க வழியே இல்லையே!

ஒரு வேளை... தனக்கே தெரியாமல், வக்கிரம் பிடித்த யாரோ தனக்கு மயக்க மருந்து எதையும் கொடுத்து, அந்த மயக்கத்தில் இருக்கும்போது... தான் அறியாமலே இப்படி ஏதேனும் சூழ்ச்சிக்குப் பலியாகி இருப்போமோ என்றுகூட, ஒரு தரம் தோன்றி ரஞ்சனிக்குக் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

கதி கலங்கிப் போனவள், மிச்சம், மீதி இருந்த புத்தியைத் திரட்டி, "இல்லையில்லை. அப்படியெல்லாம் நடக்காது! அதுபோல நடக்க வாய்ப்பே கிடையாது!' என்று பலமுறை தனக்குத்தானே சொல்லித் திடம் பெற்றாள்.

தன்னைத் தானே திடப்படுத்திக் கொள்வது, அவளுக்குப் பழக்கம்தானே!

பழக்கத்தினால் வந்த திடம் கை கொடுக்க, மனதைச் சமனப்படுத்திக் கொண்டு தீவிரமாகச் சிந்தித்தாள்.

இல்லவே இல்லை! இதற்கு வேறு ஏதோ விளக்கம் இருக்கிறது! இருந்துதான் ஆக வேண்டும்!

பிடிவாதமாக யோசித்தவளுக்குத் திடுமென ஒன்று நினைவு வந்தது!

கடவுளே! எல்லாம் பொய்! எல்லாமே!

நரேந்திரனுக்கு இவ்வளவு நாடகமாடத் தெரியுமா? இவனது அருகாமை தந்த மயக்கத்தில் இவ்வளவு நேரம் இதை மறந்து இருந்தாளே! என்ன மடத்தனம்?

ஆங்காரத்துடன் கணவனை நோக்கி, "அந்தச் சுந்தரி? அவள் விஷயம் என்ன? நீங்கள், அவளை மணக்கப்



போவதாகச் சொன்னார்களே! உங்கள் அம்மாவே சொன்னதாமே! அடுத்து, பூமுடிப்பு, வளைகாப்பு என்றெல்லாம் சொன்னார்களாமே! அது மட்டும் எப்படி?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள். "அவளை மணந்தால் மட்டும் பிள்ளை குட்டி பிறப்பதில் ஒரு பிரச்சினையும் இராதாமா?"

ஆனால், நரேந்திரனின் முகத்தில், இந்தக் கேள்விக்கான பிரதிபலிப்பு எதுவும் இல்லை!

அவமானமும் இல்லை... ஆத்திரமும் இல்லை, பதில் சொல்ல அவன் சற்றும் தயங்கவும் இல்லை!

உணர்ச்சியற்ற பார்வையால் அவளை நோக்கிவிட்டு, நரேந்திரன் பதிலிறுத்தான். "மறுமணம் என்ற பேச்சையே, அதைச் சொல்லித்தான் நான் தடுத்து வைத்திருந்தேன். இது மட்டும் முன்பே தெரிந்திருந்தால், உன்னுடன் கூடத் திருமணம் பற்றி எண்ணியும் பார்த்திருக்கமாட்டேன்! உன்னை அறிந்த பிறகோ, இன்னொருத்தியோடு அந்த உறவை நினைக்கவே கசந்தது! நாட்டு வைத்தியம் பார்க்கலாம் என்று அம்மா கேட்டதற்கும் மறுத்தேன். சுந்தரி பற்றிப் பேச்சு எடுத்த போதும், அப்படித்தான் சொன்னேன்.

"சுந்தரி நேரிலேயே வந்து என்னைச் சந்தித்தாள். சித்தா, ஆயுர்வேத மருந்துகள் இதற்கென்றே இருப்பதாகவும் அந்த வைத்தியம் பார்க்கப் பிடிக்கவில்லை என்றாலும், எனக்காகவே என்னை மணக்க விரும்புவதாகச் சொன்னாள். அந்தத் துணிச்சலான பேச்சில் எனக்குச் சிரிப்பு வந்தது! அம்மாவும், வீட்டில் ஒரு பெண் துணையேனும் வேண்டும் என்று ரொம்பவும் வற்புறுத்தவே சரி என்றேன். மற்றப்படி, உன் பூமுடிப்பு, வளைகாப்பு பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது!

"என் மனதில் உன்னை ஒதுக்கி, இன்னொருத்தியை மணப்பதற்கு ஒப்புதல் கொடுக்க, எனக்குப் பத்து ஆண்டுகள்

தேவைப்பட்டன. ஆனால், அது உறுதிப்படுமுன், மீண்டும் நீ வந்து, ஒரு பார்வையில் எல்லாவற்றையும் மாற்றிவிட்டாய்! உன்னைத் தவிர, இன்னொரு பெண்ணை மனைவியாகத் தொட என்னால் முடியாது என்று உண்மையைச் சொல்லி, சுந்தரியைப் போகச் சொல்லி விட்டேன்! நான் அறிந்த வரையில், சுந்தரி விஷயம் இவ்வளவுதான்! இதில், உன் கேள்விக்கும் பதில் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்!''

பதில் கிடைத்துவிட்டது! அவளது பல ரணங்களுக்கு, இதமான மருந்து தடவிய பதில்கள்!

ஆனால், இப்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண உதவும்படியாக, அவற்றில் ஒன்றும் இல்லை! வேறுதான் தேட வேண்டும்!

வேறு என்ன?...

மூளையைக் கசக்கிக் கொண்டு ரஞ்சனி யோசித்துக் கொண்டிருக்க, சிறு அமைதியின் பின், ''எனக்குத் தெரிந்த உண்மை முழுவதையும் மறைக்காமல் கூறிவிட்டேன். ஆனால்...'' என்று முடிக்காமல் நிறுத்தினான் நரேந்திரன்.

அதாவது, அவள் தான் உண்மையை ஒத்துக் கொள்ள மறுக்கிறாளாம்!

அதாவது, அவன் உண்மை என்று நினைப்பதை!

அவன் உண்மை என்று நினைப்பது உண்மையே அல்ல என்று எப்படி நிரூபிப்பது?

நிரூபிக்காமல் நம்ப மாட்டானே! எப்படி எப்படி என்று தவிப்புடன் ரஞ்சனி தேடும்போதே சட்டென அவளுள் பொறி தட்டியது!

டிஎன்ஏ!



கண்ணும் முகமும் ஒளி வீச, அவள் சொன்னாள்.

வியந்து நோக்கியவனின் முகத்தில் அதிர்ச்சி பரவியது!

## 18

''என்ன சொல்லுகிறீர்கள், நரேன்? உங்களுக்கும் நந்தனுக்கும் டிஎன்ஏ சோதனை பண்ணிப் பார்த்துவிடுவோம்! உங்கள் டாக்டரின் முடிவு தப்பு என்று, அது சொல்லிவிடும்!'' என்றாள் ரஞ்சனி வழி கண்டுபிடித்த குதூகலத்துடன்.

ஆச்சரியமாகப் பார்த்த நரேந்திரனின் முகம் மெல்ல மாறியது!

ஒரு புரியாத பாவனையும் திகைப்புமாக, ''வழி வழியாக, அவர் எங்கள் குடும்ப வைத்தியர், ரஞ்சனி. பெரிய தாத்தா காலத்தில் நாட்டு வைத்தியம்! காலத்தின் மாற்றத்துக்கு ஏற்றபடி, ஆங்கில மருத்துவம் படித்ததில் இவர் இரண்டாவது தலைமுறை! நம் வீட்டோடு நெருங்கிய தொடர்பு! அப்பாவுடைய நண்பர்...'' என்று மருத்துவரைப் பற்றி நரேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ரஞ்சனி குறுக்கிட்டாள்.

''அவர் எவ்வளவு கெட்டிக்காரராக, உங்களிடம் மிகுந்த அன்புள்ளவராக இருந்தாலும், இந்த விஷயத்தில் அவரது சோதனையும் அதைக் கொண்டு அவர் செய்த முடிவும் தப்பு, நரேன். இந்த டிஎன்ஏ டெஸ்ட், உங்களுக்கு அதை உறுதிப்படுத்தும்! ஏன், உங்கள் டாக்டரிடம் போய் விசாரித்தால்கூட, ஃபைலோ, சோதனைக்குக் கொடுத்த மாதிரியோ... ஏதோ மாறிப் போனது என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரியவரும்!'' என்றாள் உறுதியான குரலில்.

இப்போது, அவனும், அவளை மறுத்துப் பேசவில்லை!

ஆனால், அயர்வுடன் கட்டிலில் அமர்ந்து, ''இந்தப் பள்ளியில் முதல் நாள் என்பதால், நாளைக்கு நந்தனைப் பள்ளியில் விட நானே போகலாம் என்று இருக்கிறேன். அப்படியே மருத்துவரையும் பார்த்துவிட்டு வருகிறேன். மேலே இது பற்றி, அப்புறம் பேசலாம்!'' என்று முடித்தான் நரேந்திரன்!

கணவனுக்கு இது பற்றி, இப்போது மேலே பேச விருப்பம் இல்லை என்பதை, ரஞ்சனி உணர்ந்தாள்.

கூடவே, அவனை ஏதோ உறுத்துவதையும், அவளால் அறிய முடிந்தது.

பத்து ஆண்டுகளாக உண்மை என்று நினைத்திருந்தது! அப்படி எண்ணி, அனுபவித்த வேதனையும் அதிகம்! அந்த உண்மை கலகலத்துப் போவதோடு, குடும்ப நண்பராக மலை போல நம்பிய மருத்துவரின் வார்த்தை பொய்யாவதும் சேர்ந்து, அவனை உலுக்கிவிட்டது என்று நினைத்தாள் அவள்.

வைத்தியரை நம்பி, அவளை வேறு எவ்வளவு மோசமாக நடத்தியிருக்கிறான்!

அங்கேயே இருந்து, அவனது சங்கடத்தை அதிகப்படுத்த விரும்பாதவளாக, ''நந்தன் நன்றாகத் தூங்குகிறானா என்று பார்க்கப் போகிறேன், நரேன். குட்நைட்!'' என்றுவிட்டு, மகன் படுத்திருந்த அறைக்குச் சென்றாள் அவள்.

பயண நேரம் நாற்பது நிமிஷங்கள். அன்று முதல் நாள் என்பதால், இருபது நிமிஷம் முன்னதாகச் செல்ல வேண்டும் என்று நரேந்திரன் சொல்லியிருந்தான்.

மாமியார், வேலையாட்களின் பார்வையைக் கவனியாத வள் போல, மகனுக்கு மதிய உணவு, காரில் சாப்பிடக் காலை



உணவு, தண்ணீர் பாட்டில் என்று தேவையானவற்றை எடுத்துக் காரில் கொண்டு போய் வைத்தாள் ரஞ்சனி.

கிளம்புவதற்குத் தயாராகக் காரை எடுத்து விட்டுவிட்டுக் காத்திருந்தான் நரேந்திரன்.

பள்ளிச் சீருடையை அணிந்துகொண்டு, தோளில் மாட்டிய புத்தகப் பையுடன் நந்தன் படியிறங்கி வந்தான்.

ஹாலில் நின்று கொண்டிருந்த சகுந்தலாதேவியின் பார்வை, அவனைவிட்டு இப்புறம் அப்புறம் அகலவில்லை!

புதியவர்களிடம் ஒரு வெட்கப் புன்னகையோடு, வாயிற்புறம் செல்ல நந்தன் திரும்ப, ''எல்லாம் நீயே செய்தாயாப்பா?'' என்று கேட்டாள், அந்த அம்மாள். "குளித்து உடை உடுத்தி, தலை வாரி எல்லாம்?''

''இம்!'' என்றான் சிறுவன் ஒப்புதலாக, ''போன வருஷத்திலிருந்தே நானேதான் செய்யவேணும்னு அம்மா இதெல்லாம் சொல்லிக் கொடுத்தாங்க!'' என்று விளக்கமும் கொடுத்தான்.

சொல்லிவிட்டுக் கிளம்பியவனிடம், ''கொஞ்சம் இரு,'' என்று விட்டு, ஒரு வேலையாளை அழைத்துச் சீப்புக் கொண்டு வரச் சொன்னாள் பெரியம்மாள்.

சீப்பு வந்ததும், ''உன் அப்பா மாதிரியேதான், முன்னந்தலையை மட்டும் கோதி விட்டிருக்கிறாய், கிட்டே வா!'' என்று பக்கத்தில் கூப்பிட்டு, நந்தனின் பின்னுச்சியில் சீப்பால் வாரி விட்டாள்.

''இனிப் போய் வா!''

"சீ யூ பா... பாட்டிம்மா!'' என்று கையசைத்துவிட்டு ஓடிய சிறுவனைப் பார்வையால் தொடர்ந்த சகுந்தலாதேவி

வாயிலருகே சிலையாய் நின்று இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ரஞ்சனியைக் கண்டதும், சட்டெனத் திரும்பி நடந்து, அவளது அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்!

மகனைப் பள்ளியில் விட்டுவிட்டு, நரேந்திரன் திரும்பி வர, இரண்டு மணி நேரம் ஆயிற்று.

சோர்ந்த முகத்துடன் திரும்பி வந்தவனைப் பார்த்ததும் அவளும் கவலையுற்று, "என்ன?" என்றாள்.

"ஒன்றுமில்லை. உன்னுடன் பேச வேண்டும். வா!" என்று அவளையும் அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றான் அவன்.

என்ன பேச வேண்டும்?

தவறான எதற்கும் வழியில்லை என்ற நிச்சயம் இருந்தபோதும், அருகில் நடந்த கணவனின் முக வாட்டம், அவள் மனதைக் கலக்கியது.

நந்தன் ஆவலாகத்தான் இந்தப் பள்ளிக்குச் சென்றான். அதனால், அவனால் பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை! வேற...

வேறென்ன?

சட்டென ரஞ்சனியின் உடல் விரைத்தது.

அவள் சொன்னது போல, டிஎன்ஏ பரிசோதனை செய்து, அதில் தவறான முடிவு ஏதும் வந்துவிட்டதோ? இல்லையே! அதற்குச் சாத்தியமே கிடையாதே!

பின்னே, வேறு என்னவாக இருக்கக் கூடும்?

வேறு என்ன என்று நரேந்திரன் சொன்னான்.



"டாக்டர் அங்கிள் இறந்துவிட்டார்!"

ரஞ்சனி திகைத்துப் போனாள்!

அவளது துரதிருஷ்டம், அவளை விடாமல் துரத்தி வந்ததோடு நில்லாமல், அவளுக்கு முன்னதாகப் போய், அந்த மருத்துவரின் உயிரையே கொண்டு போய்விட்டதா? இது என்ன அநியாயம் என்று எண்ணியவளுக்கு, ஒரு கணம் தன்னை நினைத்தே அவமானமாக இருந்தது!

ஒரு மனிதர் இறந்து போயிருக்கிறார்! அவருடைய குடும்பத்தில், யார் யாருக்கு என்னென்ன இழப்போ? அதை எண்ணி இரக்கப்படாமல், தன் பாதிப்பை மட்டுமே நினைப்பதா?

சிரமப்பட்டு, மனதை மருத்துவருடைய குடும்பத்திடம் செலுத்தி, "பாவம்! எப்போது? அவருக்கு உடம்பு ஏதும் சரியில்லாமல் இருந்ததா? பாவம் அவர் குடும்பம்! அத்தையிடம் சொல்லிவிட்டீர்களா? போய்ப் பார்க்கச் செல்லுவார்கள் அல்லவா? உங்கள் அப்பாவுடைய நண்பர் என்கையில், அத்தையிடம் இரண்டு வார்த்தை பேசுவதே, டாக்டர் குடும்பத்துக்கு ஆறுதலாக இருக்கும்!" என்று இரக்கத்துடன் கூறினாள்.

"அம்மா நேரில் போய் ஆறுதல் எல்லாம் கூறி, வேண்டியது எல்லாம் செய்துதான் இருக்கிறார்கள்!" என்றான் நரேந்திரன் ஒரு மாதிரிக் குரலில்.

ரஞ்சனி மீண்டும் திகைத்தாள்!

இப்போதுதானே, தகவலே தெரிந்திருக்கிறது! அதற்குள் சகுந்தலாதேவி எங்கே போவதும், போய் ஆறுதல் கூறிவிட்டு வருவதும்?

அதுவும் காலையில் இருந்து, பூட்டிய அறைக்குள்ளேயே உட்கார்ந்திருப்பவள்!

மனைவியின் முகத்தைப் பார்த்துவிட்டுச் சற்றுக் கசந்த புன்னகையில் உதடுகள் நெளிய நரேந்திரன் அவளுக்கு விளக்கம் தெரிவித்தான். ''எல்லாம் குழப்பமாக இருக்கிறதா? அவசியம் இல்லை, ரஞ்சி! டாக்டர் அங்கிள் இறந்தது, இரண்டு மாதங்களுக்கு முன்பு! நான் போய் டாக்டரைக் கேட்டதும், அங்கே எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்... அம்மா சொல்லவே இல்லையா என்று...'' என்றான் அவன் எங்கோ பார்வை அலைய.

புரியாமல் அவனைப் பார்த்தாள் ரஞ்சனி. ''மறந்திருப் பார்கள்! அப்படிக் கட்டாயமாகச் சொல்வதற்கு, இதில் பெரிதாக என்ன இருக்கிறது? அவர் உங்கள் அப்பாவுடைய நண்பர்தானே? உங்களுக்கு நெருக்கம் இல்லையே! அவர்கள் போனதோடு விஷயம் முடிந்ததாக நினைத்திருக்கலாம்...''

மீண்டும் ஒரு கசந்த முறுவலோடு அவளை நோக்கினான் நரேந்திரன்.

கசப்பு யாரிடம்?

மறுபடியும், ரஞ்சனியின் மனம் தங்கள் விஷயத்துக்கு ஓடியது!

இவனிடம், இப்போது அது பற்றிப் பேசலாமா கூடாதா? அவள் யோசிக்கையில், அவனே பேசினான். ''நம் விஷயமாக...'' என்று தொடங்கியவன், மேலே தொடராமல் நிறுத்தினான்.

அதற்கு மேல் அடக்க மாட்டாமல், ''நம் விஷயமாக என்ன? என்ன நரேன்? அவரிடம் உள்ள ஃபைல் பார்க்க



முடியவில்லையா? பரவாயில்லை. நமக்கு டிஎன்ஏ பரிசோதனையே போதுமே! அதை யார் மூலமாகவும் செய்யலாமே!'' என்று படபடத்தவள், அவன் பேசாமல் அமர்ந்திக்கவும், ''என்ன நரேன்? வேறே என்ன நடந்தது? ஏன் இப்படி இருக்கிறீர்கள்?'' என்று சிறு கவலையுடன் வினவினாள்.

பழையபடி வேதாளம் முருங்கைமரம் ஏறப் போகிறதா? அப்படி மட்டும் ஏதேனும் சொன்னான் என்றால், இனி இவனைத் திரும்பிக்கூடப் பார்க்கக்கூடாது!

ரஞ்சனி ஏதேதோ எண்ணித் தவிக்கையில், நரேந்திரன் வேறு சொன்னான்.

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்து, ''டிஎன்ஏ பார்க்கவே தேவையில்லை. ரஞ்சி, நந்தன் என் பிள்ளைதான். அவன் பற்றி, எந்தச் சோதனையும் எனக்கு அவசியம் இல்லை! பார்த்ததும் அவனிடம் பாசம் தோன்றியபோதே, எனக்குப் புரிந்திருக்க வேண்டும்! மகாபாரதம் அது இது என்று, மடத்தனமாக என்னையே ஏமாற்றிக் கொண்டேன்!'' என்றான் இறங்கிய குரலில்.

கணவனைக் கூர்ந்து நோக்கினாள் ரஞ்சனி. இவன் முழுவதும் சொல்லவில்லை! குந்தி மைந்தன் என்றவன் இவனேதானே? இப்போது என்ன தலைகீழ் மாற்றம்? வேறு ஏதோ நடந்திருக்க வேண்டும்! அதை வெளிப்படையாகச் சொல்லாமல், ஏன் மூடி மறைக்கிறான்?

அதுவும், இவ்வளவுக்குப் பிறகு?

''என்ன திடீர் ஞானோதயம்? அங்கே போதி மரம் ஏதும் இருக்கிறதா?'' என்று கிண்டலாகக் கேட்டாள் அவள்.

நரேந்திரனின் முகம் மேலும் வாடியது. "நீ கேலி, கிண்டல்... ஏன்... கோபப்பட்டாலும் நியாயம்தான் ரஞ்சி. ஆனால், தயவு பண்ணி என் தவறை மன்னித்துவிடு! நீ பட்ட துன்பத்துக்கு இந்த வார்த்தை கொஞ்சமும் போதாதுதான்! ஆனால், வேறு நான் என்ன செய்ய முடியும்? உன் மன்னிப்பை மட்டும்தானே வேண்ட முடியும்!"

அவனை யோசனையாய் நோக்கினாள் அவள்.

வேதனைப்படுகிறான்! ஒரு குன்றலோடு வேதனைப் படுகிறான்! ஏன்?

சட்டென விழி அகல, "அத்தை!" என்றாள் திகைப்புடன்!

அவள் முன்பே நினைத்தது போல, கணவன் மனைவிக் கிடையே பிரச்சினையை உருவாக்கியது, சகுந்தலாதேவிதான்!

நரேந்திரனுக்குக் குழந்தை பிறக்கவே வாய்ப்பில்லை, அதனால் ரஞ்சனி மோசமானவள் என்று அவனுடைய தாயார் நடத்திய நாடகம் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்து போயிற்று! பெற்ற தாயின் வஞ்சகம் புரிந்துவிட்டது!

ஆனால், என்ன செய்திருந்தாலும், வயிற்றில் சுமந்து பெற்ற தாயாயிற்றே! அதனால், இதை வாய்விட்டுச் சொல்ல முடியாமல் தவித்திருக்கிறான்!

பாவம்தான்!

வருத்தத்துடன் மெல்லத் தலையசைத்தான் நரேந்திரன். "அம்மாதான்!" என்று உறுதிப்படுத்தியவன், அதற்கு மேல் தடை அகன்றாற்போலச் சொல்லலானான்!

"இறக்குமுன், டாக்டர் தன் மகனிடம் ஒரு கவர் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார், ரஞ்சி. உள்ளிருக்கும் கடிதம் எனக்கு! ஆனால், அம்மாவின் மறைவுக்குப் பிறகுதான் என்னிடம் தர வேண்டும் என்று மகனுக்கு உத்தரவு! காரணம் புரிகிறதில்லையா? கடிதத்தைப் படித்து, நான் அம்மாவை மோசமாக நடத்திவிடக் கூடாதாம்! அதே சமயம், அவரது மனச்சாட்சியின் உறுத்தலையும், கடிதத்தை எழுதியதின் மூலமாகச் சமாதானப்படுத்திக் கொண்டார்!



"நேற்றே, இது போல எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது! அது பற்றி அவரிடம் நேரில் கேட்க வேண்டும் என்றுதான் போனேன். ஆனால்... போகட்டும், அவராவது மூன்றாவது மனிதர்! நேரடிப் பாதிப்புப் பற்றி, அவருக்கு ஒன்றும் இல்லை! ஆனால், அம்மா?! அவர்களுக்கு என் வேதனை பற்றி, ஒன்றும் இல்லையா?

"இன்னொரு திருமணம் செய்யச் சொல்லித் திரும்பத் திரும்ப வற்புறுத்தினார்கள், ரஞ்சி! குழந்தை பற்றிச் சொல்லி மறுத்த போது, வைத்தியத்தின் மூலம் சரிப்படுத்தி விடலாம் என்று நிச்சயமாகச் சொன்னார்கள்! இந்தப் பக்கம் வருவதையே தவிர்க்கிறேனே என்பதால் மணமுடித்துப் பார்க்க நினைக்கிறார்கள் என்று எண்ணினேன்! பத்து ஆண்டுகளில், தானாகவே கூடச் சரியாகிவிடும் என்றொரு கதை! இப்போது கூட, என் நிலை பற்றிய உண்மை தெரிந்தே சுந்தரி என்னை மணக்க முன்வந்ததாக, அது இன்னொரு கதை! எதையுமே, நான் சந்தேகப் படவே இல்லையே! ஆனால், அம்மாவுக்கு உன் மீது மட்டும் என்ன வெறுப்பு, ரஞ்சி? இவ்வளவு துன்பப்பட வைத்துவிட்டார்களே! அவர்கள் ஒன்றும், மருமகளே வேண்டாம் எனவில்லையே! உன்மேல் நானாக ஆசைப்பட்டேன் என்பதற்காகவா? என் பங்குக்கு நான் வேறு... ஐயோ...! என்ன கொடுமை செய்துவிட்டேன்! கடவுளே! உன் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூட, என்னால் முடியவில்லையே!" என்று வெகுவாக வேதனைப் பட்டான்.

கண்ணீர் விடாத குறை!

மனைவிக்குச் செய்த அநியாயம் அவனை வெகுவாக வருத்துவது நன்றாகவே தெரிந்தது! அவனே தவறாக நினைத்துச் செய்தது என்றாலும், துன்பம் துன்பம்தானே? தவறான கருத்தில், அவளைத் துன்புறுத்திவிட்ட வருத்தம்!

ஆனால், தாய்ப் பாசமே உருவான தாயே இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்பதுதான் அவனைப் பெரிதும் வாட்டுகிறது என்று ரஞ்சனிக்குத் தோன்றியது!

அன்னை முகத்தைப் பார்த்து எப்படிப் பேசுவது? அவள் பேச்சை எப்படி நம்புவது என்ற கவலை!

கூடவே, காலையில் கண்ட காட்சியும், ரஞ்சனிக்கு நினைவு வந்தது!

எல்லாம் சரியாகி விடும்! சீக்கிரமே!

பட்ட துன்பம் எல்லாம் பகல் பனியாக, மனதிலிருந்து அடியோடு மறைந்துவிடக் கணவன் கையைப் பற்றி முத்தமிட்டாள் ரஞ்சனி.

''அத்தை ஒன்றும் கெட்டவர்கள் இல்லை, நரேன். அவர்களுக்கு இது ராஜ குடும்பம், இதில் வேறு ரத்தம் எதுவும் கலந்துவிடக்கூடாது என்ற எண்ணம்! உங்களிடம் சொன்னால் கேட்கமாட்டீர்கள்! உயிரை முன் வைத்து மிரட்டுவீர்கள். அந்தப் பழக்கமும் உங்களுக்கு உண்டுதானே? அதனால், இப்படிச் சுற்றி வளைத்து வேலை செய்திருக்கிறார்கள்!'' என்று வாழைப் பழத்தில் ஊசி ஏற்றினாற்போல, ஒரு குத்துக் கொடுத்துவிட்டு, சமாதானம் செய்ய முயன்றாள்.

அவன் சமாதானம் அடைய மறுத்தான்.



''ஒத்துக் கொள்ள முடியவில்லையே, ரஞ்சி! உன்னை வேறாக எண்ணினார்கள். விரட்டினார்கள். ஆனால், நான்? உன்னைப் பிரிந்து என் துன்பம் அதன் அடிப்படைக் காரணமான என் அவமானம், அதை நினைத்து என்னமாய்த் தவித்திருப்பேன்! அதெல்லாம் கூட, அம்மாவுக்கு ஒன்றும் இல்லையா? இல்லை என்று காட்டி விட்டார்களே!'' என்று பரிதவித்தான், நரேந்திரன்!

பெற்ற தாய்! அவளுக்குத் தன் குன்றல், குறுகல், அவமானம் எல்லாம் ஒன்றும் இல்லை என்றால், மகனால் தாங்க முடியவில்லை என்று ரஞ்சனி உணர்ந்தாள்!

அருகில் சென்று, கணவன் தலையை வயிற்றோடு அணைத்து, மெல்ல வருடிக் கொடுத்தாள் அவன் மனைவி.

''அவர்கள் அதை ஓர் அறுவைச் சிகிச்சை என்று எண்ணியிருக்கலாம். நரேன்! வலிக்க வலிக்க, வேண்டாததை வெட்டி எறிகிற மாதிரி! வேண்டாத என்னை வெறுக்க வைத்து வெளியேற்றி விட்டால், சீக்கிரமாக என்னை மறந்து, வேறு உயர்ந்த குடும்பத்துப் பெண்ணை மணப்பீர்கள் என்று நினைத்திருப்பார்கள்! நீங்கள், இப்படிப் பத்தாண்டு காலம், வேண்டாத பெண்டாட்டிக்காக விரதம் காப்பீர்கள் என்று, அவர்களுக்கு என்ன தெரியும், பாவம்!'' என்று அவள் ஒரு பெருமித முறுவலோடு கேட்க, அவன் முகத்திலும் இறுக்கம் தளரலாயிற்று!

ஆயினும், ''இப்படி இருக்க மாட்டேன் என்றும் தெரியாதே!'' என்று, அவளை இடையோடு அணைத்து, விடாமல் முணுமுணுத்தான்.

''ஆண்களுக்கு அலை பாய்கிற மனம்! சீக்கிரமே யாராவது மருத்துவரிடம் போய், இப்போது ஒன்றும் இல்லை என்று

கண்டுபிடித்து வேறு கல்யாணமும் பண்ணிக் கொள்வீர்கள் என்று எதிர்பார்த்திருப்..." என்று ரஞ்சனி சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அறைக் கதவு தட்டப்பட்டது!

விலகிச் சென்று கதவைத் திறந்தால், திறந்த கதவின் வெளியே உள்ளே வந்தது, சகுந்தலாதேவி!

அவளைப் பற்றியே பேசிக் கொண்டு இருந்ததால், இருவருமே சற்றுத் திகைத்துப் போயினர்!

ரஞ்சனியிடம் வந்து, "என்னை மன்னித்துவிடு, அம்மா!" என்றாள் அவள்.

இந்த அளவுக்கு மாமியார் இறங்கி வருவாள் என்று எதிர்பார்த்திராத ரஞ்சனி மேலும் திகைத்து நோக்கவும், "இதற்குள், ஓரளவு ஊகித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்! கூலிக்கு மாரடிக்கிற கூட்டத்தைச் சேர்ந்தவள் என் மருமகளா என்கிற ஆத்திரம், அப்போது! உன் பிள்ளை வேறு இந்த வீட்டிலா என்ற எண்ணத்தில், ஏதேதோ செய்துவிட்டேன்! இவன் காது கேட்க, இவனுக்கு இப்படிப்பட்ட பாதிப்பு இருப்பதாகச் சொல்லி, டாக்டரிடமும் பொய் சொல்லச் சொல்லி வற்புறுத்தி... ஓர் அறுவைச் சிகிச்சை மாதிரி என்றுதான், அப்போது நினைத்தேன்! இருவருமே, ஒரே மாதம் வாழ்ந்து முடித்த பொருந்தாத திருமணத்தை மறந்து, அவரவர் தகுதிக்கு ஏற்றபடி, வெவ்வேறு வாழ்வைத் தேடிக் கொள்வீர்கள் என்று எண்ணினேன்! ஆனால், இருவருமே வேறு மாதிரி ஒன்றிலேயே நிலைத்து நிற்கும் விதம் என்று, தெரியாது!

"அத்தோடு, உன் பிள்ளை என்று எண்ணினேனே, அது என் பேரனும்தானே என்று அப்போது எண்ணத் தோன்ற வில்லையே! எவ்வளவு பெரிய மடத்தனம்!



"நந்தன் என் பேரன்! மாடிப்படியில் அவன் அப்பனைப் போல அதே சீருடையில் அவனைப் பார்த்தபோது... அப்படியே நரேன் இந்த வயதில் இருந்த மாதிரி அதே தோற்றம்! இந்த வீட்டு வாரிசு! கடவுளே, இந்தப் பிள்ளையை அல்லவா விட்டுவிட்டேன்! என் பேரனை மடியில் போட்டுத் தாமரைப் பூ விளையாட்டுக் காட்டி, பால் சதை நோகாமல் அள்ளி அணைத்து எல்லா சுகத்தையும் விட்டுவிட்டேனே என்று மனது தவிக்கிறது!

"இழப்பு எனக்கு மட்டுமல்ல! என் பிள்ளைக்கும்தான்! பார்த்துப் பார்த்துப் பெற்ற தாய்! என் அருமைப் பிள்ளைக்கு, இந்தக் கொடுமை பண்ணிவிட்டேன்!

"அது மட்டும் அல்ல! பெற்றோரும் பிள்ளையுமாகச் சேர்ந்து மகிழ்ந்திருக்கவும் முடியாமல் பண்ணிவிட்டேன்!

"நரும்மா என் பிள்ளை! என் ரத்தம்! ஏதோ போகிறது என்று விட்டுவிடத் தோன்றும்! ஆனால், உனக்குச் சிரமமாக இருக்கும்! அந்தச் சின்ன வயதில் தன்னந் தனியே குழந்தையைப் பெற்று வளர்க்க என்ன பாடு பட்டாயோ! அதெல்லாம் என்மேல் வெறுப்பாய்ச் சேர்ந்து போயிருக்கும்! ஆனாலும், பெரிய மனது பண்ணி, அதையெல்லாம் மறந்து, என்னை மன்னித்து விடம்மா!" என்று, மீண்டும் மருமகளிடம் மன்னிப்பை வேண்டினாள் சகுந்தலாதேவி!

நல்ல மருமகளாக, "பழசை மறந்து விடுவோம்!" என்றாள் ரஞ்சனி இதமாக.

சகுந்தலாதேவியின் முகம் சட்டென மலர்ந்தது.

"நீ நல்ல பெண். இப்படித்தான் சொல்லுவாய் என்று எனக்குத் தெரியும்! ஆனால், உன்னை மாதிரி, நானும் நல்லவள் என்று இன்னமும் எண்ணி விடாதே! நான்

மன்னிப்புக் கேட்டதில், ஒரு சுயநலமும் இருக்கிறது! எனக்கு நீ இரண்டு உதவி பண்ண வேண்டும். அடுத்த ஆண்டுப் படிப்பு, நந்தனுக்குச் சென்னையில்தான் என்று தம்பி சொன்னான். என் பேரனை அடிக்கடி வந்து பாராமல் நான் எப்படி இருப்பேன்?"

"வரத்தான் வேண்டும் அத்தை! நீங்களும் எங்களோடு சென்னையிலேயே இருந்து விடலாமே!" என்றாள் ரஞ்சனி அவசரமாக.

கலக்கம் அகன்றவளாகச் சந்தோஷமாகச் சிரித்துவிட்டு, "இந்த வீட்டை விட்டுவிட்டு, அங்கே அதிக நாள் என்னால் இருக்க முடியாது! ஆனால், என் நந்தப்பன் இங்கே இருக்கும் வரை, அவன் அறையில், இன்னொரு கட்டிலில், நான் தூங்கிக் கொள்ளட்டுமா?" என்று கேட்டாள் நந்தனுடைய பாட்டி.

"கேட்க வேண்டுமா, அத்தை? வேண்டுமானால், நந்துவை உங்கள் அறையில் கீழே படுக்கச் சொல்லட்டுமா?"

"ஐயோ, வேண்டாம், கீழே நெல் மூட்டை, உளுந்து, பயறு என்று அடுக்கி, அந்த வாடையும் தூசியும் கொஞ்சமாவது இருக்கும்! அவனுக்குத் தூக்கம் வராது! நானே, மேலே வந்து கொள்கிறேன்! அப்புறமாக, அடுத்த வரமாக... சீக்கிரமே எனக்கு இன்னொரு பேரப் பிள்ளையைப் பெற்றுத் தர வேண்டும், ரஞ்சனி. அந்தப் பிள்ளைச் சதையைத் தொட்டுத் தூக்கும்வரை, என் மனம் தவித்துக் கொண்டே இருக்கும்! செய்வாயா, அம்மா?" என்று கேட்டாள் பெரியவள், கெஞ்சும் குரலில்.

ரஞ்சனி விழி மலர நோக்க, "அதற்கு நான் உத்தரவாதம், அம்மா!" என்று, அதுவரை வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்த நரேந்திரன் புன்னகையோடு பதில் சொல்லவும்,



சகுந்தலா தேவியின் கண்களில் குபுக்கென்று நீர் பொங்கி விட்டது!

"என் கண்ணப்பா! நீயும் என்னை மன்னித்து விட்டா யாம்மா?" என்று கண் கலங்கி, "இவ்வளவு நல்ல பிள்ளை களை, முட்டாள்தனமாக வாட்டி விட்டேனே!" என்று வருத்தப்பட்டாள் அன்னை. "இனிமேல், நல்லவளாக இருப்பேன் செல்லங்களா!"

கண்களைத் துடைத்துக் கொண்டு ஓர் ஆறுதல் பெருமூச் சுடன் முதியவள் செல்லும்போதுதான் உள்ளூர அவள் எவ்வளவு கலங்கி யிருந்தாள் என்பது மற்ற இருவருக்கும் புரிந்தது.

பேரப் பிள்ளைப் பாசம் என்று வரும்போது, இரும்பு நெஞ்சங்கள் கூட, எப்படி இளகி விடுகின்றன! இளகி, உருகி, பெருகி, பெருவெள்ளமாகி... அந்த வெள்ளம், காட்டாற்றின் வேகத்தோடு ஓடும்போது, பணம், பந்தா, கோபம், தாபம் என்று எல்லாவித மாசுகளையும் அடித்துக் கொண்டு போய் விட்டது போலும்!

சகுந்தலா தேவியின் ஆஸ்தி, அந்தஸ்து மோகங்களைப் போலவே, நரேந்திரன், அவன் தாய் மீது கொண்டிருந்த ஆத்திரமும் வருத்தமும் கூட அழிந்து மறைந்து போயின!

சகுந்தலா தேவியின் காலடி ஓசை தேயும்வரை கேட்டிருந்துவிட்டு, "நீ சொன்ன மாதிரியேதான் நடந் திருக்கிறது! வார்த்தைகள்கூட, அதே போலச் சொல்லு கிறார்களே!" என்று அதிசயப் பட்டான் நரேந்திரன்!

"உயர்ந்த உள்ளங்கள் ஒரே மாதிரி நினைக்கும் என்று சொல்வது மெய்தான் போல!" என்று சாதுவாய்ச் சொன்னாள் ரஞ்சனி. தொடர்ந்து, "அந்த உயரத்துக்கு வளரத் தெரியாத

மற்ற மாதிரி அரை குறை மனசுகள்தான் அதைப் புரிந்து கொள்ள முடியாமல் அல்லாடுகின்றன!'' என்று கிண்டலடித்துச் சிரித்தாள்.

''அது, சரி!'' என்று ராகமிட்டு இழுத்தான் நரேந்திரன். கண்ணில் சிரிப்புடன். ''சற்று முன் ஓர் உயர்ந்த உள்ளம், இன்னும் ஏதோ சொல்லிற்றே! இன்னொரு பிள்ளை, அப்படி, இப்படி என்று! ஒரே மாதிரி நினைக்கும் அடுத்த உயர்ந்த உள்ளம், அதற்கு ஒரு முயற்சியும் எடுக்கக் காணோமே!'' என்று பதிலுக்கும் கேட்டான்.

லேசாக முகம் சிவந்த போதும், ''முந்திரிக்கொட்டை மாதிரி, உத்தரவாதம் கொடுத்தவர் அல்லவா, அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும்?'' என்றாள் அவள் மிடுக்காக.

''ஆகா! வாங்கம்மா என் மகாராணி! இந்த வார்த்தைக்குத் தானே, இவ்வளவு நேரம் காத்திருந்தேன்!'' என்று மனைவியை ஆசையோடு அள்ளி அணைத்தான் அவன்!